SRI LANKA BAROMETER

OUR VOICES . OUR CHOICES

අපේ හඬ . අපේ තීරණ

எங்கள் குரல்கள் . எங்கள் தேர்வுகள்

நிலைமாற்ற காலத்தில் நல்லிணக்கம், ஆளுகை மற்றும் குடிமக்கள் ஈடுபாடு

ஸ்ரீ லங்கா பரோமீட்டர்

நல்லிணக்கம் தொடர்பான தேசியளவிலான பொதுமக்கள் கருத்துக்கணிப்பு 2025

© 2025, ஸ்ரீ லங்கா பரோமீட்டர்
50 ஸ்கெல்ரன் வீதி, கொழும்பு 5, இலங்கை
www.srilankabarometer.lk

ஸ்ரீ லங்கா பரோமீட்டரிற்குத் தெரியப்படுத்தி, மூலவளத்திற்கான அங்கீகாரத்துடன் கற்றற்செயற்பாடுகளுக்காக இவ் வெளியீடானது அமைப்புக்களினாலோ/ தனிநபர்களினாலோ மீளுருவாக்கம் செய்யப்படலாம். இவ்வெளியீட்டின் எந்தப் பகுதியும் SLBஇன் அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது எந்தவொரு வழியிலும் மாற்றியமைக்கப்படவோ, விநியோகிக்கப்படவோ அல்லது ஒரு தரவுத்தளத்தில் அல்லது மீளப்பெறக்கூடிய தளத்தில் சேமிக்கப்படவோ கூடாது. வியாபாரநோக்கங்களுக்கான பயன்பாடு தடைசெய்யப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையானது இலங்கையில் நல்லிணக்கத்தினையும் சமாதானத்தினையும் வலுப்படுத்தல் (SCOPE) திட்டத்தின் ஆதரவுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நல்லிணக்கத்தினையும் சமாதானத்தினையும் வலுப்படுத்தல் (SCOPE) திட்டமானது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மன் சமஷ்டி வெளியுறவு அலுவலகம் ஆகியவற்றினால் இணை நிதியனுசரணையளிக்கப்பட்டு இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுறவினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் ஐரோப்பிய ஒன்றியம், ஜேர்மன் சமஷ்டி வெளியுறவு அலுவலகம், ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுறவு (GIZ) அல்லது இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டினைப் பிரதிபலிக்கவில்லை.

மொழிபெயர்ப்பு: செய்னுல் மஹாஸ் முர்சித் மற்றும் ரவீந்திரன் சிவதர்சினி
வடிவமைப்பு மற்றும் தளவமைப்பு: மெர்க் மீடியா பிரைவேட் லிமிடெட்
அச்சிடுதல் மற்றும் பிணைப்பு:

ISBN 978-955-7241-08-1

எமது அன்புக்குரிய சகபணியாளரும், தோழருமான ஜான் கோப்மெயரின் நினைவில், உங்களது இதமும், நேர்மையும், மனவலிமையும் தொடர்ந்தும் எமக்கு உந்துசக்தியளிக்கின்றது. உங்கள் பிரிவால் மிகவும் துயருறுகிறோம்.

உள்ளடக்கம்

உருக்களின் பட்டியல் III

சுருக்கங்களின் பட்டியல் IV

நிறைவேற்றுச் சுருக்கம் VI

විධායක සාරාංශය VIII

Executive Summary X

1. அறிமுகம் 1
   - 1.1 சூழமைவு: இலங்கையில் நல்லிணக்கம் 2
   - 1.2 ஸ்ரீ லங்கா பரோமீட்டர் உருவாக்கப்பட்டமைக்கான காரணம் 3
   - 1.3 ஸ்ரீ லங்கா பரோமீட்டரின் கருத்தியல் அடிப்படை 3
   - 1.4 ஸ்ரீ லங்கா பரோமீட்டரை நடைமுறைப்படுத்துதல் 4
   - 1.5 அறிக்கையின் அமைப்பு 4
2. ஆய்வு முறைமை 5
   - 2.1 மாதிரிகளின் தெரிவுச் (Sampling) சட்டகம் 6
   - 2.2 தரவுப் பகுப்பாய்வும் விளக்கமும் 6
   - 2.3 மேலதிக குறிப்புக்கள் 7
3. அரசியல் மாற்றங்களுக்கு மத்தியில் நல்லிணக்கம் 9
   - 3.1 இலங்கையில் நல்லிணக்கத்திற்கான பற்றாக்குறை 10
   - 3.2 நல்லிணக்கம் என்பதால் இலங்கையர்கள் கருதுவது யாது? 11
   - 3.3 பொறுப்பு, தடைகள் மற்றும் நல்லிணக்கத்திற்கான நிறுவனங்கள் 12
   - 3.4 சுருக்கம் 15
4. நல்லிணக்கத்திற்கான சட்டகங்கள், கட்டமைப்புக்கள் மற்றும் வெளிகள் 17
   - 4.1 அரசியல் நம்பிக்கை மற்றும் பிராந்திய வேறுபாடுகளில் ஏற்படும் மாற்றங்கள் 18
   - 4.2 ஊழலும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதில் அதன் தாக்கமும் 19
   - 4.3 ஜனநாயக வெளிகள் தொடர்பான கண்ணோட்டம் 20
   - 4.4 சுருக்கம் 21
5. நல்லிணக்கத்திற்கான பொதுமக்களின் பங்குபற்றுதல் 23
   - 5.1 உள்ளக மற்றும் வெளிப்புற அரசியல் செயற்திறன் 24
   - 5.2 அரசியல் ஈடுபாட்டிற்கான ஊக்கம் 26
   - 5.3 சுருக்கம் 28
6. முடிவுரை 29
7. கொள்கைப் பரிந்துரைகள் 31

உசாத்துணைகள் 35

பின்னிணைப்பு 1 - நல்லிணக்கத்தின் எட்டுப் பரிமாணங்கள் 42

பின்னிணைப்பு 2 - விரிவான ஆய்வுமுறைமை 44

பின்னிணைப்பு 3 - மாதிரித்தெரிவு முறைமை 47

பின்னிணைப்பு 4 - தொடர்புபட்ட கருத்தாய்வுக் கேள்விகள் 49

உருக்களின் பட்டியல்

உரு 1:	நல்லிணக்கத்திற்கான தேவையும் உணரப்பட்ட முன்னேற்றமும், தேசியளவில், சராசரி, 2020-2025	10
உரு 2:	நல்லிணக்கத்திற்கான தேவை, இனரீதியாக, சராசரி, 2020-2025	11
உரு 3:	நல்லிணக்கத்தில் ஏற்பட்ட முன்னேற்றம், இனரீதியாக, சராசரி, 2020-2025	11
உரு 4:	நல்லிணக்கத்திற்கான அர்த்தம், தேசியளவில், %, 2025	12
உரு 5:	நல்லிணக்கத்தினை முன்னோக்கி நகர்த்துவதற்கான பாரிய பொறுப்பு, தேசியளவிலும் இனரீதியாகவும், %, 2025	13
உரு 6:	நல்லிணக்கத்தினை முன்னோக்கி நகர்த்துவதற்கான பாரிய பொறுப்பு, தேசியளவிலும் பால்நிலைரீதியாகவும், %, 2025	13
உரு 7:	நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பாரிய தடைகள், தேசியளவிலும் பால்நிலைரீதியாகவும், %, 2025	14
உரு 8:	நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பாரிய தடைகள், அரசியல் விருப்பின்மை மற்றும் பிளவுபடுத்தும் தேசியவாத அரசியல் போன்றவற்றிற்கான பதில்கள், தேசியளவில், %, 2020-2025	14
உரு 9:	நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கு நல்லிணக்க நிறுவனங்களின் முக்கியத்துவம், தேசியளவிலும் மாகாணரீதியாகவும், சராசரி, 2020-2025	15
உரு 10:	அரசியல் நம்பிக்கை, தேசியளவில், சராசரி, 2020-2025	18
உரு 11:	அரசியல் நம்பிக்கை, தேசியளவிலும் மாகாணரீதியாகவும், சராசரி, 2020-2025	19
உரு 12:	அரசபொதுச்சேவைகளில் ஊழல்தொடர்பான கண்ணோட்டம், தேசியளவிலும் மாகாணரீதியாகவும், சராசரி, 2025	19
உரு 13:	ஊழலினை எதிர்கொள்வதில் முன்னிருந்த மற்றும் தற்போதுள்ள அரசாங்கங்களின் வினைத்திறன், தேசியளவில், %, 2025	20
உரு 14:	தனிப்பட்ட சுதந்திரங்கள் மற்றும் சமூகங்களுக்கான பாதுகாப்பு, தேசியளவில், சராசரி, 2020-2025	21
உரு 15	சமூகங்களுக்கான பாதுகாப்பு, தேசியளவிலும் மாகாணரீதியாகவும், சராசரி, 2020-2025	21
உரு 16:	உள்ளக அரசியல் வினைத்திறன், தேசியளவிலும் பால்நிலைரீதியாகவும், சராசரி, 2020-2025	24
உரு 17:	உள்ளக அரசியல் வினைத்திறன், தேசியளவிலும் மாகாணரீதியாகவும், சராசரி, 2020-2025	25
உரு 18:	அரசியல் செயலாண்மை, தேசியளவிலும் இனரீதியாகவும், சராசரி, 2025	25
உரு 19:	அரசின் பதிலளிக்கும்தன்மை, தேசியளவிலும் மாகாணரீதியாகவும், சராசரி, 2020-2025	26
உரு 20:	தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக அரசியலில் ஈடுபடுவதற்கான ஊக்கம், தேசியளவில், %, 2022-2025	27
உரு 21:	தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக அரசியலில் ஈடுபடுவதற்கான ஊக்கம், தேசியளவிலும் வயதுரீதியாகவும், %, 2025	27
உரு 22:	செயல்முனைப்புள்ள பிரஜைகள், தேசியளவிலும் இனரீதியாகவும், சராசரி, 2020-2025	28
உரு 23:	செயல்முனைப்புள்ள பிரஜைகள், தேசியளவிலும் மாகாணரீதியாகவும், சராசரி, 2020-2025	28
உரு 24	பால்நிலைரீதியான வகைப்படுத்தல், %, 2025	47
உரு 25:	வயதுரீதியான வகைப்படுத்தல், %, 2025	47
உரு 26:	இனரீதியான வகைப்படுத்தல், %, 2025	47
உரு 27:	மதநம்பிக்கைரீதியான வகைப்படுத்தல், %, 2025	47
உரு 28:	இடரீதியான வகைப்படுத்தல், %, 2025	48
உரு 29:	மாகாணரீதியான வகைப்படுத்தல், %, 2025	48
உரு 30:	கல்வி அடைவுகள், %, 2025	48
உரு 31:	தொழில்ரீதியான வகைப்படுத்தல், %, 2025	48

சுருக்கங்களின் பட்டியல்

CEPA	வறுமை ஆய்வு மையம்
CTUR	உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு
CAPI	கணினியின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட நேர்காணல்
CPI	ஊழல் மலிவுச் சுட்டெண்
GIZ	ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுறவு
HRCSL	இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
IJR	நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கான நிறுவகம்
ISTRM	உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகம்
LLRC	கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு
NPC	தேசிய சமாதானப் பேரவை
NPP	தேசிய மக்கள் சக்தி
ONUR	தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம்
OR	இழப்பீட்டிற்கான அலுவலகம்
OMP	காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம்
PTA	பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்
SLB	ஸ்ரீ லங்கா பரோமீட்டர்
SRP	இலங்கையில் நல்லிணக்கச் செயன்முறைகளை வலுப்படுத்தல்
SCOPE	இலங்கையில் நல்லிணக்கத்தினையும் சமாதானத்தினையும் வலுப்படுத்தல்
UNHRC	ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை

நிறைவேற்றுச் சுருக்கம்

இவ் அறிக்கையானது நல்லிணக்கம் தொடர்பில் SLBஇனால் நடாத்தப்பட்ட தேசியளவிலான பொதுமக்கள் கருத்துக்கணிப்பின் பிரதான கண்டுபிடிப்புக்களை முன்வைக்கின்றது. இது நல்லிணக்கம், பொறுப்புக்கூறலுடன்கூடிய ஆட்சி மற்றும் செயல்முனைப்புள்ள குடிமக்கள் போன்றவிடயங்களில் மக்களின் கண்ணோட்டங்கள் குறித்து கவனஞ்செலுத்தியுள்ளது. இவ் அறிக்கையானது SLBஇனால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து (2020,2021,2023) பெறப்பட்ட தரவுகளிலிருந்து அரசியல் மற்றும் பொருளாதார மாற்றம் நிகழ்ந்த காலப்பகுதியில் ஏற்பட்ட மனப்பாங்கு மாற்றங்களைப் பிரதிபலிக்கும்வகையிலான காலமாற்றத்தினை மையப்படுத்திய பகுப்பாய்வினை வழங்குகின்றது.

2024ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட மிகமுக்கியமான அரசியல் மாற்றத்தின் பின்னணியில், இவ் அறிக்கையானது நல்லிணக்கம் மற்றும் அத்துடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் இலங்கை தற்போது எத்தகைய நிலையில் உள்ளது என்பது தொடர்பில் இலங்கையர்களின் கருத்துக்களை ஆய்வுசெய்கின்றது. மாற்றம் நிகழும் ஒரு காலப்பகுதியையும், நிச்சயமற்றதன்மையினையும் எதிர்கொள்கையில் மக்களின் அபிலாசைகள், எதிர்பார்ப்புக்கள், தேவைகள் மற்றும் முன்னுரிமைகளை ஆய்வுசெய்கின்றது. இது குடிமக்கள் மற்றும் அரசுக்கிடையிலான மாற்றமடைந்துவரும் உறவினையும், இலங்கையில் உள்வாங்குதலுடன்கூடிய நிலைபேறான நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் ஆழமாகப் புரிந்துகொள்வதற்குப் பங்களிப்புச்செய்கின்றது. SLB இக்கருத்தாய்வினூடாக மக்களின் கண்ணோட்டங்களை இனங்காண்பதன்மூலம் நாட்டில் நல்லிணக்கத்தையும் சமூகஒருமைப்பாட்டினையும் மேம்படுத்துவதற்குத் தேவையான கொள்கையுருவாக்கம், பொதுக் கருத்தாடல்கள் மற்றும் சிவில்சமூக முனைப்புக்கள் போன்றவற்றிற்குரிய தகவல்களை வழங்குவதனை நோக்காகக்கொண்டுள்ளது.

SLB சமூகமட்டத்திலான மற்றும் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதனூடாக உருவாக்கப்பட்டதும் கருத்தியல் அடிப்படையினைக்கொண்டதுமான அளவுசார் கட்டமைப்புக்கொண்ட ஒரு அணுகுமுறையினைப் பயன்படுத்துகின்றது. நல்லிணக்கம் தொடர்பான வரையறுக்கப்பட்ட வரைவிலக்கணத்தினைப் பயன்படுத்துவதற்குப்பதிலாக இச்சட்டகமானது ஒன்றுடனொன்று தொடர்புபட்ட எட்டு பரிமாணங்களினூடாக அதனை ஆய்வுசெய்கின்றது: கடந்தகாலத்தினைக் கையாளுதல், அனைவருக்கும் நீதி, அடையாளம் மற்றும் உடைமையுணர்வு, நம்பிக்கை, சமத்துவமான வாய்ப்புக்கள், செயல்முனைப்புள்ள குடிமக்கள், பொறுப்புக்கூறலுடனான ஆட்சி, பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு என்பவையே அவ் எட்டுப் பரிமாணங்களுமாகும். இப்பரிமாணங்களானவை அவற்றின் உப-பரிமாணங்கள் மற்றும் குறிகாட்டிகளுடன் இணைந்து நல்லிணக்கம் தொடர்பான பொதுமக்களின் கண்ணோட்டங்களை முறையானவிதத்தில் அளவிடுவதற்கான அடித்தளமாக அமைகின்றன.

2025ம் ஆண்டிற்கான கருத்தாய்வானது தேசியவிலான பிரதிநிதித்துவத்தினையுடைய மாதிரிச்சட்டகத்தினைப் பயன்படுத்தி எழுந்தமானவிதத்தில் தெரிவுசெய்யப்பட்ட 18 மற்றும் அதற்குமேற்பட்ட வயதுடைய 3,876 இலங்கையர்களின் மாதிரிகளைக் கொண்டிருந்ததுடன் இது தேசிய மட்டத்தில் 95% நம்பிக்கைத்தன்மையுடன் 1.6% வழுவினைக் கொண்டிருந்தது. 2025ம் ஆண்டின் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதத்தில் இதற்கான தரவுச் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

SLBஆனது, த இன்சைட்ஸ் இனிசியேட்டிவ், நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கான நிறுவகம் (IJR), இலங்கையில் நல்லிணக்கத்தினையும் சமாதானத்தினையும் வலுப்படுத்தல் செயற்திட்டம் (SCOPE) ஆகியவற்றுடனான ஒன்றிணைந்த பங்களிப்புடனும், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மன் சமஷ்டி வெளியுறவு அலுவலகம் ஆகியவற்றின் கூட்டு நிதியனுசரணையுடனும் இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடன் ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுறவினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இவ் அறிக்கையின் பிரதான கண்டடைவுகள் கீழே சுருக்கமாக வழங்கப்பட்டுள்ளன. கண்டடைவுகளானவை 1-10 வரையான அளவீட்டினைப் பயன்படுத்தி சராசரி அளவுகளில் வழங்கப்பட்டுள்ளன, உயர்ந்த அளவினைக் கொண்டிருப்பதென்பது கணிக்கப்படும் கருத்தியல் தொடர்பில் அதிகளவிலான உணர்வினைக் கொண்டிருப்பதனைப் பிரதிபலிக்கின்றது அல்லது (சனத்தொகையின் விகிதாசாரத்தில்) நிகழ்வெண்களாகக் குறிப்பிடப்படுகின்றது.

அரசியல் மாற்றத்தின் மத்தியில் நல்லிணக்கம்

இப்பகுதியானது 2024/2025 காலப்பகுதிகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் மத்தியில் மக்கள் நல்லிணக்கத்தினை எவ்வாறு புரிந்துகொள்கின்றார்கள், அதனை எவ்வாறு அனுபவிக்கின்றார்கள் என்பதனை ஆய்வுசெய்கின்றது. நல்லிணக்கத்துக்கான மக்களின் தேவை மற்றும் அதுதொடர்பில் உணரப்பட்ட முன்னேற்றம் என்பவற்றையும் ஆய்வுசெய்கிறது. மேலும் இப்பகுதியானது நல்லிணக்கம் என்பதனை மக்கள் எவ்வாறு புரிந்துகொள்கின்றார்கள்: நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதில் உணரப்பட்ட தடைகள் யாவை: நல்லிணக்கத்தினை மேம்படுத்துவதற்கான பிரதான பொறுப்பினைக்கொண்டிருப்பதாக மக்கள் நம்புகின்ற நபர்கள், அமைப்புகள் யாவர் என்பன பற்றியும் ஆராய்கின்றது.

- 2020ம் ஆண்டுமுதல் நல்லிணக்கத்திற்கான பொதுமக்களின் கோரிக்கைகள் தொடர்ந்தும் உயர்வாக இருந்து வருகின்றபோதும் (2025இல் தேசியளவிலான சராசரி அளவு 8.1) நல்லிணக்கத்தினை மேம்படுத்துவதில் தொடர்ந்தும் தாமதங்கள் இருப்பதாகக் கருதப்படுகின்றது (2025இல் தேசியளவிலான சராசரிப் புள்ளி 6.4), இது நல்லிணக்கம் தொடர்பில் தொடர்ச்சியான குறைபாட்டினை எடுத்துக்காட்டுகின்றது. இக்குறைபாடானது இலங்கைத் தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் மத்தியில் பெரும்பாலும் வெளிப்படுத்தப்படுகின்றது.

- பதிலளித்தோரில் ஏறக்குறைய அரைவாசிப்பேர் (48.5%) நல்லிணக்கம் என்பதனை ஒற்றுமை மற்றும் குழுக்களுக்கிடையிலான சாதகமான உறவுகள் எனப் புரிந்துகொண்டிருக்கின்றனர், இது உறவுகளை அடிப்படையாகக்கொண்ட நல்லிணக்கம்பற்றிய புரிந்துணர்வு அதிகரிப்பதனைக் காட்டுகின்றது.

- நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான பொறுப்பினை யார் அதிகளவில் கொண்டிருக்க வேண்டும் என்பதனைக் கருத்தில்கொள்கையில், பொதுமக்களில் ஒருசாரார் அரசியல்வாதிகள் (50.7%ஆனோர் ஜனாதிபதி, அரசாங்கம், அல்லது அரசியல்வாதிகள் போன்றோரைக் குறிப்பிட்டனர்) எனவும் இன்னொருசாரார் மக்கள் அனைவரும் (40.5%ஆனோர் சமூகக்கூட்டுப் பொறுப்பினைக் குறிப்பிட்டனர்) எனவும் கூறியிருந்தனர். பால்நிலையினை அடிப்படையாகக்கொண்டு பதில்களை அவதானிக்கையில், பெண்கள் சமூகக்கூட்டுப்பொறுப்பினை அதிகளவில் வலியுறுத்தியிருந்த அதேவேளை ஆண்கள் பெரும்பாலும் அரசியல் நிறுவனங்கள் மற்றும் அரசியல்வாதிகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

- நல்லிணக்கத்திற்கான அரசியல்ரீதியான தடைகள் பற்றிய கண்ணோட்டமானது 2025இல் குறிப்பிடத்தக்கவிதத்தில் குறைவடைந்திருக்கிறது. குறிப்பாக அரசியல் விருப்பின்மை (2020ம் ஆண்டில் 25.7% இலிருந்து 2025ம் ஆண்டில் 10.4% க்கு) மற்றும் பிளவுபடுத்தும் தேசியவாத அரசியல் (2020ம் ஆண்டில் 37.5% இலிருந்து 2025ம் ஆண்டில் 6.0% க்கு) ஆகியவற்றைத் தடைகளாக கருதும் கண்ணோட்டம் குறைவடைந்துள்ளது.

- நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான நிறுவனங்கள் முக்கியமானவையாகப் பார்க்கப்பட்டமையானது தேசியளவிலான சராசரிப் புள்ளி 7.8இனால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதைவிட அதிகளவிலான சராசரி புள்ளிகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெறப்பட்டிருந்தன (முறையே 8.3 மற்றும் 8.2).

நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான பொறிமுறைகள், கட்டமைப்புக்கள் மற்றும் வெளி

இப்பகுதியானது நாட்டின் ஆட்சிக்கட்டமைப்புக்களையும், நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்குத் தேவையான சிவில் செயற்பாடுகளுக்கான வெளிகளையும் பிரஜைகள் எவ்வாறு நோக்குகின்றார்கள் என்பதனை ஆய்வுசெய்கின்றது. இது அரசியல் நம்பகத்தன்மை, ஊழல், மற்றும் தனிப்பட்ட சுதந்திரங்கள் தொடர்பான மக்களின் கண்ணோட்டங்களில் கவனஞ்செலுத்துகின்றது. யுத்தத்திற்குப் பிந்திய சூழலில் இலங்கையிலுள்ள ஜனநாயக வெளி எந்தளவிற்கு வெளிப்படையானதாக இருக்கின்றது என்பதையும் அமைப்புக்கள் எந்தளவிற்கு உண்மைத்தன்மையும், வினைத்திறனும் கொண்டவையாகக் கருதப்படுகின்றன என்பது தொடர்பிலும் கவனஞ்செலுத்துகின்றது.

- அரசியல்மீதான நம்பிக்கையானது பெரும்பாலான மாகாணங்களில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்துள்ளதுடன் இது 2020இலிருந்து மேற்கொள்ளப்பட்ட பதிவுகளிலேயே மிகவும் அதிகளவிலான புள்ளிகளை அடைந்திருக்கின்றது (2025ஆம் ஆண்டில் தேசியளவிலான சராசரி 6.9). ஆயினும் இப்போக்கானது நாடு முழுவதும் ஒரே மாதிரியானதாகக் காணப்படவில்லை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசியல்மீதான நம்பிக்கையானது வீழ்ச்சியடைந்திருக்கின்றது.

- அரசதுறைகளில் இடம்பெறும் ஊழல் தொடர்பான கண்ணோட்டங்கள் ஓரளவிற்கு அதிகரித்துக் காணப்படுகின்றன (தேசியளவிலான சராசரி அளவு 6.1). வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஊழல் தொடர்பான கண்ணோட்டங்கள் சற்று அதிகரித்திருப்பதனைக் காட்டுகின்றது. (தேசியளவிலான சராசரி அளவுகள் முறையே 6.5 மற்றும் 6.4)

- மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானோர் (38.7%) தற்போதுள்ள அரசாங்கமானது ஊழலினை எதிர்கொள்வதில் வினைத்திறன்மிக்கதாக அல்லது மிகவும் வினைத்திறன்மிக்கதாக அமையும் என நம்புகின்றனர், இதனுடன் ஒப்பிடும்போது 12.5% ஆனோர் மட்டுமே முன்னைய அரசாங்கங்கள் ஊழலினை எதிர்கொள்வதில் வினைத்திறனாக அல்லது மிகவும் வினைத்திறன்மிக்கதாக செயற்பட்டதாக நம்புகின்றனர்

- தனிப்பட்ட சுதந்திரம் தொடர்பான கண்ணோட்டங்களின் தேசியளவிலான சராசரிப் புள்ளியானது 2023இல் 6.0இலிருந்து 2025இல் 7.4ஆக சடுதியான அதிகரிப்பினைக் காட்டுகின்றது, 2020 தொடக்கம் SLBஇன் தரவுச்சேகரிப்பு ஆரம்பித்ததிலிருந்து இக்குறிகாட்டிக்கு வழங்கப்பட்ட அதிகளவிலான புள்ளியாக இது அமைகின்றது.

- சமூகப்பாதுகாப்பு தொடர்பான கண்ணோட்டங்களின் தேசியளவிலான சராசரிப் புள்ளியானது உயர்ந்தளவில் உள்ளது (2025இல் 8.5), இது வடகிழக்கில் குறைந்த அளவுமட்டங்களில் இருப்பினும், குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினையும் காட்டுகின்றது

நல்லிணக்கத்தில் மக்களின் பங்குபற்றுதல்

இப்பகுதி, இலங்கையர்கள் நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதில் தமது பங்கினை எவ்வாறு புரிந்துகொள்கின்றார்கள் என்பதனை ஆய்வுசெய்கின்றது. இது சிவில் மற்றும் அரசியல் விடயங்களில் பங்குபற்றுவது தொடர்பில் மக்கள் எந்தளவிற்கு தன்னம்பிக்கையினைக் கொண்டிருக்கின்றார்கள் (உள்ளக அரசியல் வினைத்திறன்), அரசியல்ரீதியான முடிவுகளில் செல்வாக்குச்செலுத்தும் உணர்வு(அரசியல் செயலாண்மை), அரசின் பதிலளிக்கும்தன்மை தொடர்பான கண்ணோட்டங்கள் (வெளிப்புற அரசியல் வினைத்திறன்), மற்றும் அரசியல்ரீதியான ஈடுபாட்டினைக் கொண்டிருப்பதற்கான ஊக்கம் போன்றவற்றில் கவனஞ்செலுத்துகின்றது.

- உள்ளக அரசியல் வினைத்திறன் அதிகரித்திருக்கின்றது (2023இல் தேசியளவிலான சராசரிப் புள்ளி 6.1ஆகவும் 2025இல் 6.7ஆகவும் உள்ளது). ஆயினும் பால்நிலைரீதியான வேறுபாடுகள் காணப்படுகின்றன, பெண்கள் ஆண்களைவிடவும் குறைந்தளவான மட்டங்களையே கொண்டிருப்பதாக அறிக்கைகள் காட்டுகின்றன. (தேசியளவிலான சராசரிப் புள்ளி முறையே 6.4 மற்றும் 7.0)

- மலையக மக்கள் மிகவும் குறைந்தளவிலான அரசியல் செயலாண்மையினைக் கொண்டிருப்பதுடன் (சராசரிப் புள்ளி 3.8) அரசியல் செயலாண்மைக்கான தேசியளவிலான சராசரிப் புள்ளியும், ஓரளவிற்குக் குறைந்தே காணப்படுகின்றது (2025இல் 4.3இல் இருக்கின்றது)

- அரசின் பதிலளிக்கும்தன்மை பற்றிய கண்ணோட்டங்கள் பெரும்பாலான மாகாணங்களில் வீழ்ச்சியுற்றிருக்கின்றன. வடமாகாணமானது (தேசியளவிலான சராசரிப் புள்ளி 8.5இலிருந்து 7.5ஆக) 2023இலிருந்து திடீர் வீழ்ச்சியினைக் காட்டுகின்ற அதேவேளை கிழக்கு மாகாணமானது 2020ம் ஆண்டிலிருந்து ஒட்டுமொத்தமாக சடுதியான வீழ்ச்சியினைக் காட்டுகின்றது (தேசியளவிலான புள்ளி 8.5இலிருந்து 6.9ஆக)

- 2022ம் ஆண்டு நெருக்கடியின்போது அதிகரித்திருந்த அரசியல் ஈடுபாட்டிற்கான ஊக்கமானது 2023இல் குறைந்திருந்தபோதும் 2025இல் அது ஓரளவிற்கு மீண்டுள்ளது. 61 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையோர் மிகவும் ஈடுபாடு குறைந்தநிலையினை (63.2%) வெளிப்படுத்தியிருக்கின்ற அதேவேளை, 18 தொடக்கம் 30 வயதுவரையான இளம்பிரஜைகள் அதிளவிலான ஊக்கத்தினை வெளிப்படுத்தியிருக்கின்றனர் (39.8%).

- செயல்முனைப்புள்ள பிரஜைகளாக இருப்பதன் அளவு இறுதியாக மேற்கொள்ளப்பட்ட கருத்தாய்விலிருந்து அதிகரித்துள்ளதுடன் (2023இல் தேசியளவிலான சராசரிப் புள்ளி 1.1இலிருந்து 2025இல் 2.1ஆக), ஆகக்கூடியளவான புள்ளிகள் வடமாகாணத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

அவதானங்களின் முடிவு

SLBஇன் 2025ம் ஆண்டிற்கான கருத்தாய்வின் பெறுபேறுகளானவை அரசியல் மாற்றத்தின் மத்தியில் பிரஜைகள் தற்போது நல்லிணக்கத்தின் நிலையினை எவ்வாறு நோக்குகின்றார்கள், நல்லிணக்கத்தினை மேம்படுத்துவதுடன் தொடர்புபட்ட ஆட்சிச்சட்டகங்கள், கட்டமைப்புக்கள், மற்றும் வெளிகள் தொடர்பில் அவர்களின் பார்வைகள், நல்லிணக்கம் தொடர்பில் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கான அவர்களின் இயலளவு மற்றும் செல்வாக்கு தொடர்பில் அவர்களது மதிப்பீடு என்பவைதொடர்பில் முக்கியமானதும் தனித்துவமானவையுமான விடயங்களை வெளிப்படுத்துகின்றது.

இக்கருப்பொருட்பரப்புக்களுக்குள்ளும், 2025ம் ஆண்டிற்கான கருத்தாய்வின் பெறுபேறுகளுக்குமிடையில் சில விடயங்களில் குழப்பம்நிலவுவது தெளிவாகத் தெரிகின்றது. பொதுமக்களின் நம்பிக்கை மற்றும் தொடர்ச்சியான சந்தேகம் என்பவற்றுக்கிடையிலான முரண்கள், வேறுபட்ட வாழ்வியல் அனுபவங்களும் கூட்டான முன்னுரிமைகளும், நிறுவகங்களின் பதிலளிக்கும்தன்மை தொடர்பான சந்தேகங்களால் மட்டுப்படுத்தப்படும் புதுப்பிக்கப்பட்ட பொதுமக்கள் ஈடுபாடு போன்ற விடயங்களிலேயே குழப்பம் நிலவுகின்றது. இவ் அவதானங்கள் எதிர்பார்ப்புடைய அதேவேளை எச்சரிக்கையுடன்கூடிய, நம்பிக்கையினைக் கொண்டிருக்கின்ற அதேவேளை நீண்டகால அரசியல் மற்றும் கட்டமைப்புரீதியான மட்டுப்பாடுகள் தொடர்பில் அறிந்திருக்கின்ற மக்கள்தொகையினைச் சுட்டிக்காட்டுகின்றது.

இக்கண்டடைவுகளானவை முடிவு அல்லது இணக்கத்தினை தெரிவிப்பதைவிட, நல்லிணக்கம் என்பது முறைசார் பொறிமுறைகளால் மட்டுமல்லாது அன்றாட வாழ்வியல் தொடர்புகள் மற்றும் உள்வாங்குதலுடன்கூடிய அரசியல் வெளிகள் மூலமாகவும் வடிவமைக்கப்படுகின்ற ஒரு மாற்றமடையும் செயன்முறை என்பதைப் பரிந்துரைக்கின்றது. அரசியல் மாற்றத்திற்கு ஈடுகொடுக்கும் ஒரு சமூகத்தினை அது பிரதிபலிக்கின்றது, அதில் இலங்கையர்கள் அரசு மற்றும் பிரஜைகளுக்கிடையிலான நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான விதிமுறைகளை மீள்சமரசம் செய்துகொள்கின்றனர். எதிர்பார்ப்புக்கள் மாற்றமடைவதனால், இத்தருணத்தின் நீடிக்கும் தன்மையானது நம்பகத்தன்மை, பதிலளிக்கும்தன்மை, அரசதரப்பினரின் உள்வாங்கும்தன்மை மற்றும் காலப்போக்கிலான அவர்களது செயற்பாடுகள் போன்றவற்றில் தங்கியிருக்கும்.

මෙම වාර්තාව ශ්‍රී ලංකා බැරෝමීටරයේ (SLB) සංහිඳියාව පිළිබඳ ජාතික මහජන අදහස් සමීක්ෂණය 2025 හි ප්‍රධාන සොයාගැනීම් ඉදිරිපත් කරන අතර, සංහිඳියාව, වගවීමක් ඇති පාලනය සහ ක්‍රියාකාරී පුරවැසිභාවය ගැන මහජන සංජානනය පිළිබඳව අවබෝධයක් ලබා දෙයි. මින් පෙර වට තුනකදී ලබාගත් (2020, 2021, 2023) SLB දත්ත මත පදනම්ව, එය දේශපාලන හා ආර්ථික විපර්යාසයේ කාල පරිච්ඡේදයක් හරහා වෙනස් වන ආකල්ප ග්‍රහණය කර ගන්නා කාල ශ්‍රේණි විශ්ලේෂණයක් සපයයි.

2024 දී රටේ තීරණාත්මක දේශපාලනික සංක්‍රාන්තිය පසුබිම් කරගෙන සකස් කරන ලද මෙම වාර්තාව, සංහිඳියාව සහ ඒ ආශ්‍රිත ගැටළු සම්බන්ධයෙන් රට අද සිටින්නේ කොතැනද යන්න පිළිබඳව ශ්‍රී ලාංකිකයන්ගේ මත පරීක්ෂා කරයි. එය වෙනස්කම් සහ අවිනිශ්චිතතාවයේ කාල පරිච්ඡේදයක් තුල ජනතාවගේ අභිලාෂයන්, අපේක්ෂාවන්, අවශ්‍යතා සහ ප්‍රමුඛතා ගවේෂණය කරයි. මෙය පුරවැසියන් සහ රාජ්‍යය අතර විකාශනය වන සම්බන්ධතාවය සහ ශ්‍රී ලංකාවේ ඇතුළත්කරණය වූ සහ තිරසාර සංහිඳියාවක් සඳහා වන අපේක්ෂාවන් පිළිබඳ ගැඹුරු අවබෝධයක් ලබා ගැනීමට දායක වේ. සමීක්ෂණය හරහා මෙම දෘෂ්ටිකෝණ ග්‍රහණය කර ගැනීමෙන්, රට තුළ සංහිඳියාව සහ සමාජ සහජීවනය ඉදිරියට ගෙන යාම සඳහා ප්‍රතිපත්ති සම්පාදනය, මහජන කතිකාව සහ සිවිල් සමාජය දරන උත්සාහයන් දැනුම් දීම SLB අරමුණුකොට ගෙන ඇත.

SLB සමීක්ෂණය ප්‍රජා සහ විශේෂඥ උපදේශන හරහා සංවර්ධනය කරන ලද සංකල්පීය රාමුවක් මත පදනම් වූ ප්‍රමාණාත්මක, ව්‍යුහගත ප්‍රවේශයක් භාවිතා කරයි. සංහිඳියාව පිළිබඳ පටු අර්ථ දැක්වීමක් අනුගමනය කිරීම වෙනුවට, මෙම රාමුව අන්තර් සම්බන්ධිත මානයන් අටක් හරහා එය ග්‍රහණය කරයි: අතීතය සමඟ කටයුතු කිරීම, සැමට යුක්තිය සහතික කිරීම, අනන්‍යතාවය සහ අයත් වීම, විශ්වාසය, අවස්ථා සමානාත්මතාවය, ක්‍රියාකාරී පුරවැසිභාවය, වගවිය යුතු පාලනය සහ ආරක්ෂාව සහ යහපැවැත්ම් මෙම මානයන්, ඒවායේ උපමානයන් සහ දර්ශක සමඟ, සංහිඳියාවට අදාළ මහජන සංජානන සහ අත්දැකීම් ක්‍රමානුකූලව මැනීම සඳහා වන පදනම ලෙස කටයුතු කරයි.

2025 සමීක්ෂණය සඳහා වයස අවුරුදු 18 සහ ඊට වැඩි ශ්‍රී ලාංකිකයන් 3,876 දෙනෙකු නියැදි ගත් අතර, ජාතික නියෝජනයක් ඇති නියැදි රාමුවක් භාවිතයෙන් අහඹු ලෙස තෝරා ගන්නා ලද අතර, 95% විශ්වාසනීය මට්ටමක් සහ ජාතික මට්ටමින් 1.6% ක දෝෂ සීමාවක් ඇත. දත්ත රැස් කිරීම 2025 ජනවාරි සහ පෙබරවාරි මාසවලදී සිදු විය.

SLB ක්‍රියාත්මක වන්නේ The Insights Initiative, යුක්තිය සහ ප්‍රතිසන්ධානය පිළිබඳ ආයතනය (IJR) සහ ශ්‍රී ලංකාවේ සමාජ සහජීවනය සහ සාමය ශක්තිමත් කිරීමේ වැඩසටහන (SCOPE) අතර සහයෝගී හවුල්කාරිත්වයක් හරහා වන අතර එය යුරෝපා සංගමය සහ ජර්මානු ෆෙඩරල් විදේශ කාර්යාලය විසින් සම-මූල්‍ය අනුග්‍රහයෙන් ශ්‍රී ලංකා රජය සමඟ සහයෝගයෙන් GIZ විසින් ක්‍රියාත්මක කරනු ලැබේ.

මෙම වාර්තාවෙන් ලබාගත් ප්‍රධාන සොයාගැනීම් පහත සාරාංශගත කර ඇති සොයාගැනීම් සමහර අවස්ථාවල 0-10 පරිමාණයකින් මධ්‍යන්‍ය අගයන් ලෙස ඉදිරිපත් කර ඇති අතර, ඉහළ අගයන් මගින්, මනිනු ලබන සංකල්පය කෙරෙහි වැඩි ඇල්මක් නියෝජනය වේ තවත් ස්ථානවල සංඛ්‍යාත (ජනගහනයේ ප්‍රතිශතය) ලෙස, සොයාගැනීම් ඉදිරිපත් කෙරේ.

දේශපාලන සංක්‍රාන්තිය මධ්‍යයේ සංහිඳියාව

2024/2025 දේශපාලන සංක්‍රාන්තිය මධ්‍යයේ පුරවැසියන් සංහිඳියාව තේරුම් ගන්නා ආකාරය සහ අත්විඳින ආකාරය මෙම කොටස ගවේෂණය කරයි. එය සංහිඳියාව සඳහා මහජන ඉල්ලුම සහ එහි ප්‍රගතිය පිළිබඳ සංජානනය පරීක්ෂා කිරීම, සංහිඳියාව මහජනතාව විසින් තේරුම් ගන්නා ආකාරය ගවේෂණය කිරීම, එය සාක්ෂාත් කර ගැනීමට ඇති බාධක නිරාවරණය කිරීම, සහ එය ඉදිරියට ගෙන යාම සඳහා මූලික වගකීම දරන්නන් බවට පුරවැසියන් විශ්වාස කරන ක්‍රියාකාරීන් සහ ආයතන හඳුනා ගැනීම සිදුකරයි.

- 2020 සිට සංහිඳියාව සඳහා මහජන ඉල්ලුම අඛණ්ඩව ඉහළ මට්ටමක පැවතුනද (2025 දී ජාතික මධ්‍යන්‍ය අගය 8.1), ප්‍රගතිය පිළිබඳ සංජානනය දිගටම අඩු මට්ටමක පවතින බව (2025 දී ජාතික මධ්‍යන්‍ය අගය 6.4) පෙන්නුම් කරයි, එය අඛණ්ඩ සංහිඳියා ඌනතාවයක් ඉස්මතු කරයි. මෙම ඌනතාවය ශ්‍රී ලාංකික දෙමළ සහ උඩරට දෙමළ ජනතාව අතර වඩාත් කැපී පෙනේ.
- ප්‍රතිචාර දැක්වූවන්ගෙන් අඩක් පමණ (48.5%) සංහිඳියාවේ අර්ථය කණ්ඩායම් අතර එකමුතුකම සහ ධනාත්මක සබඳතා ලෙස තේරුම් ගෙන ඇති අතර, මෙය සංහිඳියාව පිළිබඳ සබඳතා මත පදනම් වූ අවබෝධයක් කරා එකඟතාවය වැඩිවීමක් සනිටුහන් කරයි.
- සංහිඳියාව සඳහා විශාලතම වගකීම දැරිය යුත්තේ කවුරුන්ද යන්න සලකා බැලීමේදී, මහජන මතය දේශපාලන ක්‍රියාකාරීන් (ජනාධිපතිවරයා, රජය හෝ දේශපාලනඥයන් ආදීන්, 50.7%) සහ සියලු ජනතාව (සාමූහික සමාජ වගකීමක් ලෙස, 40.5%) අතර බෙදී යයි. පිරිමින් දේශපාලන ආයතන සහ ක්‍රියාකාරීන් කෙරෙහි වැඩි අවධානයක් යොමු කරන අතර කාන්තාවන් බෙදාගත් මහජන වගකීම කෙරෙහි වැඩි අවධානයක් යොමු කරන බැවින්, මෙහිදී සමාජභාවය මත පදනම් වූ වෙනස් වීමක් මතු වන්නේය.
- 2025 දී සංහිඳියාවට ඇති දේශපාලන බාධක පිළිබඳ සංජානනය සැලකිය යුතු ලෙස අඩු වී ඇත. මෙය විශේෂයෙන් දේශපාලන අධිෂ්ඨානය නොමැතිකම (2020 දී 25.7% සිට 2025 දී 10.4% දක්වා) සහ බෙදුම්වාදී ජාතිකවාදී දේශපාලනය (2020 දී 37.5% සිට 2025 දී 6.0% දක්වා) සම්බන්ධයෙන් පෙනී යයි.
- ප්‍රතිසන්ධාන ආයතන වැදගත් ලෙස සලකනු ලබන අතර, එය ජාතික මධ්‍යන්‍ය අගය 7.8 කින් පෙන්නුම් කෙරේ, උතුරු සහ නැගෙනහිර පළාත්වල එය ඊටත් වඩා ඉහළ මධ්‍යන්‍ය අගයන් (පිළිවෙලින් 8.3 සහ 8.2) පෙන්වුම් කරයි.

පද්ධති, ව්‍යුහයන් සහ සංහිඳියාව සඳහා අවකාශය

මෙම කොටස මගින් පුරවැසියන් රටේ පාලන ව්‍යුහයන් සහ සංහිඳියාව සඳහා අවශ්‍ය ප්‍රජා අවකාශයන් සංජානනය කරන අයුරු පරීක්ෂා කරයි. එය දේශපාලන විශ්වාසය, දූෂණය සහ පුද්ගලික නිදහස පිළිබඳ මහජන අදහස් කෙරෙහි අවධානය යොමු කරන අතර, ආයතනවල සංජානනීය අඛණ්ඩතාව සහ ඵලදායීතාවය සහ ශ්‍රී ලංකාවේ පශ්චාත් යුධ ප්‍රජාතන්ත්‍රවාදී අවකාශයේ විවෘතභාවයේ මට්ටම පිළිබඳ අවබෝධයක් ලබා දෙයි.

- බොහෝ පළාත්වල දේශපාලන විශ්වාසය සැලකිය යුතු ලෙස වැඩි වී, 2020 සිට වාර්තා වූ ඉහළම මට්ටම් කරා ළඟා විය (2025 දී ජාතික මධ්‍යන්‍ය අගය 6.9) එනමුත්, මෙම ප්‍රවණතාවය මුළු රට පුරාම ස්ථාවර නොවන අතර, උතුරු සහ නැගෙනහිර පළාත්වල දේශපාලන විශ්වාසය අඩු වෙමින් පවතී.

- රාජ්‍ය අංශයේ දූෂණය පිළිබඳ සංජානනය මධ්‍යස්ථව ඉහළ ය (ජාතික මධ්‍යන්‍ය අගය 6.1). උතුරු සහ නැගෙනහිර පළාත්වල දූෂණ පිළිබඳ තරමක් ඉහළ සංජානනීය මට්ටම් වාර්තා කරයි (පිළිවෙලින් මධ්‍යන්‍ය අගයන් 6.5 සහ 6.4).
- තුනෙන් එකකට වඩා ජනතාව (38.7%) වත්මන් රජය දූෂණයට එරෙහිව එලදායී හෝ ඉතා එලදායී වනු ඇතැයි විශ්වාස කරන අතර, පෙර රජයන් එසේ කිරීමේදී එලදායී හෝ ඉතා එලදායී වූයේ යැයි විශ්වාස කරන්නේ 12.5% ක් පමණක් වේ.
- පුද්ගලික නිදහස පිළිබඳ සංජානනය 2025 දී තියුනු ලෙස ඉහළ ගොස් ජාතික මධ්‍යන්‍ය අගය 7.4 ක් විය. එය 2023 මට්ටම වූ 6.0 සිට ඉහළ ගොස් ඇති අතර, 2020 දී SLB දත්ත රැස් කිරීම ආරම්භ කිරීමෙන් පසු මෙම දර්ශකයේ පෙන්වුම් කළ ඉහළම අගය වේ.
- ප්‍රජා ආරක්ෂාව පිළිබඳ සංජානනය සඳහා ජාතික මධ්‍යන්‍ය අගය ඉහළ මට්ටමක පවතී (2025 දී 8.5), සාපේක්ෂව පහළ මට්ටම් වුවත්, උතුරු සහ නැගෙනහිර පළාත්වල සැලකිය යුතු දියුණුවක් වාර්තා වී ඇත.

සංහිඳියාව සඳහා ප්‍රජා සහභාගීත්වය

සංහිඳියාව සඳහා වෙනසක් ඇති කිරීමේදී ශ්‍රී ලාංකිකයන් තමන්ගේම කාර්යභාරය සංජානනය කරන අයුරු මෙම කොටස ගවේෂණය කරයි. එය සිවිල් සහ දේශපාලන කටයුතුවලට සහභාගී වීමට ඔවුන්ගේ විශ්වාසය (අභ්‍යන්තර දේශපාලන කාර්යක්ෂමතාව), දේශපාලන ප්‍රතිඵල කෙරෙහි බලපෑම් කිරීමේ හැකියාව (දේශපාලන නියෝජ්‍යත්වය), රාජ්‍ය ප්‍රතිචාර දැක්වීම පිළිබඳ අදහස් (බාහිර දේශපාලන කාර්යක්ෂමතාව) සහ දේශපාලනිකව නියැලීමට පෙළඹවීම කෙරෙහි අවධානය යොමු කරයි.

- අභ්‍යන්තර දේශපාලන කාර්යක්ෂමතාව ඉහළ ගොස් ඇත (2023 දී ජාතික මධ්‍යන්‍ය අගය 6.1 සහ 2025 දී 6.7). කෙසේ වෙතත්, සමාජභාවී විෂමතා දිගටම පවතින අතර, කාන්තාවන් පිරිමින්ට වඩා අඩු මට්ටම් වාර්තා කරති (පිළිවෙලින් 6.4 සහ 7.0 මධ්‍යන්‍ය අගයන්).
- දේශපාලන නියෝජ්‍යත්වය සඳහා ජාතික මධ්‍යන්‍ය අගය මධ්‍යස්ථව අඩුය (2025 දී 4.3 ක් විය), තවද උඩරට දෙමළ ජනතාව නියෝජ්‍යත්වය පිළිබඳ අවම හැකියාව වාර්තා කරයි (මධ්‍යන්‍ය අගය 3.8).
- 2025 දී බොහෝ පළාත්වල රාජ්‍ය ප්‍රතිචාර දැක්වීම පිළිබඳ සංජානනය පහත වැටී ඇත. 2023 සිට උතුරු පළාතේ තියුණුම පහත වැටීමක් වාර්තා විය (මධ්‍යන්‍ය අගය 8.5 සිට 7.5 දක්වා), නැගෙනහිර පළාතේ සමස්ත වශයෙන් ගත්කළ 2020 සිට දැඩිම පහත වැටීමක් පෙන්නුම් කරයි (මධ්‍යන්‍ය අගය 8.5 සිට 6.9 දක්වා).
- 2022 අර්බුදය අතරතුර උච්චතම අවස්ථාවට පත් වූ දේශපාලනිකව නියැලීමට ඇති පෙළඹවීම 2023 දී අඩු වූ නමුත් 2025 වන විට තරමක් යථා තත්ත්වයට පත් විය. වයස අවුරුදු 18 සිට 30 දක්වා තරුණ පුරවැසියන් නියැලීමට වැඩි පෙළඹවීමක් පෙන්නුම් කරති (39.8%), වයස අවුරුදු 61 සහ ඊට වැඩි පුද්ගලයින් වැඩිපුරම නියැලීමෙන් ඈත්වීම වීම වාර්තා කරයි (63.2%).
- පසුගිය සමීක්ෂණයේ සිට ක්‍රියාකාරී පුරවැසි මට්ටම් වැඩි වී ඇත (2023 දී ජාතික මධ්‍යන්‍ය අගය 1.1 සිට 2025 දී 2.1 දක්වා), ඉහළම මට්ටම් වාර්තා වී ඇත්තේ උතුරු පළාතේ ය.

අවසන් නිරීක්ෂණ

2025 SLB සමීක්ෂණයේ ප්‍රතිඵල මගින්, දේශපාලන සංක්‍රාන්තිය මධ්‍යයේ පුරවැසියන් වත්මන් සංහිඳියාවේ තත්ත්වය වටහා ගන්නා ආකාරය; සංහිඳියාවේ දියුණුවට අදාළව පාලන පද්ධති, ව්‍යුහයන් සහ අවකාශයන් පිළිබඳ ඔවුන්ගේ අදහස්; සහ සංහිඳියාව සඳහා වෙනසක් ඇති කිරීමේදී ඔවුන්ගේම ධාරිතාව සහ බලපෑම පිළිබඳ ඔවුන්ගේ තක්සේරු කිරීම් පිළිබඳ වැදගත් සහ අතිවිශිෂ්ට අවබෝධයක් ලබා දේ.

මෙම තේමාත්මක ක්ෂේත්‍ර තුළ සහ 2025 සමීක්ෂණ ප්‍රතිඵල පුරාවට, ආතතියක් පවතින සමහර ක්ෂේත්‍ර පැහැදිලිව පෙනේ. මේවාට මහජන ශුභවාදී බව සහ නොනවතින සැකය අතර වෙනස්කම්, අසමාන ජීවන අත්දැකීම් වලට සමගාමීව බෙදාගත් ප්‍රමුඛතා සහ ආයතනික ප්‍රතිචාර දැක්වීම පිළිබඳ සැකයන් වලට බඳුන් වන නැවත පණ ලබා ඇති ප්‍රජා සහභාගීත්වය ඇතුළත් වේ. මෙම නිරීක්ෂණ මගින් අපේක්ෂාවන් ඇති නමුත් ප්‍රවේශම් සහගත, බලාපොරොත්තු ඇතිමුත් දිගුකාලීන දේශපාලන හා පද්ධතිමය සීමාවන් පිළිබඳව දැනුවත්, මහජනතාවක් පෙන්නුම් කරයි.

සමාප්තියක් හෝ ඒකගතාවක් ලබා දීමට වඩා, සංහිඳියාව යන්න විධිමත් යාන්ත්‍රණයන් මගින් පමණක් නොව එදිනෙදා අන්තර්ක්‍රියා සහ දේශපාලන අවකාශයන්හි ඇතුළත්කරණය මගින් හැඩගැසෙන, පරිණාමය වන ක්‍රියාවලියක් ලෙස පවතින බව සොයාගැනීම්වලින් පෙනී යයි. ඒවා දේශපාලන සංක්‍රාන්තියක් තුලින් ගමන් කරන සමාජයක් පිළිබිඹු කරන අතර, එතුල ශ්‍රී ලාංකිකයන් රාජ්‍යය සහ පුරවැසියන් අතර විශ්වාසයේ නියමයන් නැවත සාකච්ඡා කරමින් සිටිති. අපේක්ෂාවන් වෙනස් වන විට, මෙම මොහොතේ කල්පැවැත්ම රඳා පවතින්නේ රාජ්‍ය ක්‍රියාකාරීන්ගේ විශ්වසනීයත්වය, ප්‍රතිචාර දැක්වීම සහ ඇතුළත්කරණ හැකියාව සහ කාලයත් සමඟ ඔවුන්ගේ ක්‍රියාවන් මත ය.

This report presents key findings from the 2025 Sri Lanka Barometer (SLB) National Public Opinion Survey on Reconciliation, offering insights into public perceptions of reconciliation, accountable governance, and active citizenship. Building on three earlier rounds of SLB data (2020, 2021, 2023), it provides a time series analysis that captures changing attitudes across a period of political and economic change.

Set against the backdrop of the country's pivotal political transition in 2024, the report examines Sri Lankans' opinions on where the country stands today in terms of reconciliation and related issues. It explores people's aspirations, expectations, needs, and priorities as they navigate a period of change and uncertainty. This contributes to a deeper understanding of both the evolving relationship between citizens and the state, and the prospects for inclusive and sustainable reconciliation in Sri Lanka. By capturing these perspectives through the survey, the SLB aims to inform policymaking, public discourse, and civil society efforts to advance reconciliation and social cohesion in the country.

The SLB Survey uses a quantitative, structured approach grounded in a conceptual framework developed through community and expert consultations. Instead of adopting a narrow definition of reconciliation, the framework captures it through eight interconnected dimensions: Dealing with the Past, Justice for All, Identity and Belonging, Trust, Equality of Opportunity, Active Citizenship, Accountable Governance, and Security and Wellbeing. These dimensions, along with their sub-dimensions and indicators, serve as the foundation for systematically measuring public perceptions and experiences related to reconciliation.

The 2025 survey sampled 3,876 Sri Lankans aged 18 and above, randomly selected using a nationally representative sampling frame, with a 95% confidence level and a 1.6% margin of error at the national level. Data collection took place in January and February 2025.

The SLB operates through a collaborative partnership between The Insights Initiative, the Institute for Justice and Reconciliation (IJR), and the Strengthening Social Cohesion and Peace in Sri Lanka (SCOPE) programme, co-funded by the European Union and the German Federal Foreign Office and implemented by GIZ in collaboration with the Government of Sri Lanka.

Key findings from this report are summarised below. Findings are presented either as mean scores on a scale of 0–10, with higher scores representing greater sentiment towards the concept being measured, or as frequencies (percentage of the population).

Reconciliation Amid the Political Transition

This section explores how citizens understand and experience reconciliation amid the 2024/2025 political transition. It examines public demand and perceived progress of reconciliation, explores how reconciliation is understood by the public, sheds light on perceived barriers to its realisation, and identifies the actors and institutions that citizens believe bear primary responsibility for advancing it.

- While public *demand for reconciliation* has remained consistently high since 2020 (national mean score of 8.1 in 2025) *perceived progress* continues to lag (national mean score of 6.4 in 2025), highlighting a persistent reconciliation deficit. This deficit is most pronounced among Sri Lankan Tamils and Up-Country Tamils.
- Almost half of respondents (48.5%) understand the *meaning of reconciliation* as unity and positive relations between groups, marking an increasing convergence towards a relationship-based understanding of reconciliation.
- When considering who should bear the *greatest responsibility for reconciliation*, public opinion is split between political actors (50.7% citing the president, government, or politicians) and all people (40.5% citing collective societal responsibility). A gendered divergence emerges in that men look more to political institutions and actors, while women place more emphasis on shared public responsibility.
- Perceptions of political *barriers to reconciliation* have decreased significantly in 2025, particularly regarding a lack of political will (from 25.7% in 2020 to 10.4% in 2025) and divisive nationalist politics (from 37.5% in 2020 to 6.0% in 2025).
- *Reconciliation institutions* are viewed as important, indicated by a national mean score of 7.8, with even higher mean scores in the Northern and Eastern Provinces (8.3 and 8.2 respectively).

Systems, Structures, and Space for Reconciliation

This section examines how citizens perceive the country's governance structures and the civic spaces necessary for reconciliation. It focuses on public views of political trust, corruption, and personal freedoms, offering insight into the perceived integrity and effectiveness of institutions and the degree of openness in Sri Lanka's post-war democratic space.

- *Political trust* increased significantly across most provinces, reaching the highest levels recorded since 2020 (national mean score of 6.9 in 2025). However, this trend is not consistent across the entire country, with political trust declining in the Northern and Eastern Provinces.
- Perceptions of *corruption in the public sector* are moderately high (national mean score of 6.1). The Northern and Eastern Provinces report slightly higher levels of perceived corruption (mean scores of 6.5 and 6.4 respectively).
- More than a third of people (38.7%) believe the current government will be *effective or very effective in addressing corruption*, compared to only 12.5% who believe previous governments were effective or very effective in doing so.
- Perceptions of *personal freedom* rose sharply in 2025 to a national mean score of 7.4, up from 6.0 in 2023, marking the highest score in this indicator since SLB data collection commenced in 2020.

- National mean scores for perceived *community safety* are high (8.5 in 2025), with lower levels yet significant improvements reported in the Northern and Eastern Provinces.

Civic Participation for Reconciliation

This section explores how Sri Lankans perceive their own role in driving change for reconciliation. It focuses on their confidence to participate in civic and political matters (internal political efficacy), sense of influence over political outcomes (political agency), views on state responsiveness (external political efficacy), and motivation to engage politically.

- *Internal political efficacy* has increased (national mean score of 6.1 in 2023 and 6.7 in 2025). However, gender disparities persist, with women reporting lower levels than men (mean scores of 6.4 and 7.0 respectively).
- The national mean score for *political agency* is moderately low (standing at 4.3 in 2025), with Up-Country Tamils reporting the lowest sense of agency (mean score of 3.8).
- Perceptions of *state responsiveness* have declined in most provinces in 2025. The Northern Province recorded the sharpest drop since 2023 (from a mean score of 8.5 to 7.5), while the Eastern Province shows the steepest overall decline since 2020 (from a mean score of 8.5 to 6.9).
- *Motivation to engage politically*, which peaked during the 2022 crisis, dipped in 2023 but recovered somewhat by 2025. Younger citizens aged 18 to 30 show more motivation to engage (39.8%), while people aged 61 and older report the most disengagement (63.2%).
- *Active citizenship* levels have increased since the last survey iteration (from a national mean score of 1.1 in 2023 to 2.1 in 2025), with the highest levels recorded in the Northern Province.

Concluding Observations

The results of the 2025 SLB Survey provide important and unique insights into how citizens perceive the current state of reconciliation amid the political transition; their views on governance systems, structures, and spaces as they relate to the advancement of reconciliation; and their assessments of their own capacity and influence in driving change for reconciliation.

Within these thematic areas and across the 2025 survey results, some areas of tension become apparent. These include contrasts between public optimism and persistent scepticism, shared priorities alongside disparate lived experiences, and renewed civic engagement tempered by doubts about institutional responsiveness. These observations point to a public that is expectant yet cautious, hopeful yet aware of long-standing political and systemic limitations.

Rather than offering closure or consensus, the findings suggest that reconciliation remains an evolving process shaped not only by formal mechanisms but by everyday interactions and the inclusiveness of political spaces. They reflect a society navigating political transition, in which Sri Lankans are renegotiating the terms of trust between state and citizenry. As expectations shift, the durability of this moment will depend on the credibility, responsiveness, and inclusivity of state actors and their actions over time.

1. அறிமுகம்

1. அறிமுகம்

இவ் அறிக்கையானது நல்லிணக்கம் தொடர்பில் SLBஇனால் நடாத்தப்பட்ட தேசியளவிலான பொதுமக்கள் கருத்துக்கணிப்பின் பிரதான கண்டுபிடிப்புக்களை முன்வைக்கின்றது. இது நல்லிணக்கம், பொறுப்புக்கூறலுடன்கூடிய ஆட்சி மற்றும் செயல்முனைப்புள்ள பிரஜைகள் போன்றவிடயங்களைக் குறித்து மக்களின் கண்ணோட்டங்களில் கவனஞ்செலுத்தியுள்ளது.

இக்கண்டடைவுகள் SLBஇனால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து (2020,2021,2023) பெறப்பட்ட தரவுகளை உள்வாங்கி மேற்கொள்ளப்பட்ட காலத்தினை மையப்படுத்திய பகுப்பாய்வாக அமைவதுடன், காலப்போக்கில் பொதுமக்களின் கருத்து மாறுபடும் விதம் தொடர்பிலான பார்வைகளையும் முன்வைக்கின்றது.

2024இல் நாட்டில் ஏற்பட்ட மிகமுக்கியமான அரசியல் மாற்றத்தின் பின்னணியில், இவ் அறிக்கையானது இலங்கை நல்லிணக்கம் மற்றும் அத்துடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் இன்று எத்தகைய நிலையில் உள்ளது என்பது குறித்த இலங்கையர்களின் கருத்துக்களை ஆய்வுசெய்கின்றது. மாற்றம் நிகழும் காலகட்டத்தினையும், நிச்சயமற்றதன்மையினையும் எதிர்கொள்கையில் மக்களின் அபிலாசைகள், எதிர்பார்ப்புக்கள், தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் போன்றவற்றினை ஆய்வுசெய்கின்றது. இது குடிமக்கள் மற்றும் அரசுக்கிடையிலான மாற்றமடைந்துவரும் உறவினையும், இலங்கையில் உள்வாங்குதலுடன்கூடிய நிலைபேறான நல்லிணக்கத்திற்கான வாய்ப்புகளையும் ஆழமாகப் புரிந்துகொள்வதற்குப் பங்களிப்புச்செய்கின்றது. SLB இக்கருத்தாய்வினூடாக மக்களின் கண்ணோட்டங்களை இனங்காண்பதன்மூலம் நாட்டில் நல்லிணக்கத்தையும் சமூக ஒருமைப்பாட்டினையும் மேம்படுத்துவதற்கு கொள்கையுருவாக்கம், பொதுக் கருத்தாடல்கள் மற்றும் சிவில் சமூக முனைப்புக்கள் போன்றவற்றிற்குத் தேவையான தகவல்களை வழங்குவதனை நோக்காகக்கொண்டுள்ளது.

இவ் அறிக்கையின் ஆரம்பப் பகுதியானது 2025ஆம் ஆண்டுக்கான SLBஇன் கருத்துக்கணிப்பு நடாத்தப்பட்ட சூழமைவு, அது உருவாக்கப்பட்டதற்கான காரணம், அதற்கான கருத்துருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல் முதலான விடயங்களை முன்வைக்கின்றது. அத்தியாயம் இரண்டானது கருத்தாய்வு மேற்கொள்ளப்பட்ட முறைமை பற்றி மேலோட்டமாக அறிமுகம்செய்கின்றது. அத்தியாயம் மூன்றானது அரசியல் மாற்றத்தின் மத்தியில் நல்லிணக்கத்தின் நிலைபற்றிய ஆய்வின் கண்டடைவுகளை முன்வைக்கின்றது.

அத்தியாயம் நான்கானது நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான பொறிமுறைகள், கட்டமைப்புக்கள் மற்றும் வெளிகள் போன்றவற்றில் கவனத்தினைச் செலுத்துகின்றது. அத்தியாயம் ஐந்தானது நல்லிணக்கத்திற்கான உந்துசக்தியாக குடிமக்களின் பங்களிப்பு இருப்பதனை ஆய்வுசெய்கின்றது. பகுதி ஆறானது, தரவுகளிலிருந்து தோன்றும் போக்குகள் தொடர்பிலான ஒட்டுமொத்த முடிவுரையினையும் வழங்குகின்ற அதேவேளை, 3 தொடக்கம் 5 வரையான பகுதிகள் சிறிய சுருக்கங்களுடன் முடிவடைகின்றன. கண்டடைவுகளை அடிப்படையாகக்கொண்ட கொள்கைகளுக்கான பரிந்துரைகள் அத்தியாயம் ஏழில் முன்வைக்கப்படுகின்றன.

1.1. சூழமைவு: இலங்கையில் நல்லிணக்கம்

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையிலான ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்ததிலிருந்து பல்வேறுபட்ட பங்காளர்களுக்கும் போருக்கு பின்னரான நல்லிணக்கம் என்பது முன்னுரிமையான விடயமாக இருந்துவருகின்றது. 2018ம் ஆண்டில் ஏற்பட்ட அரசியலமைப்புச்சட்ட நெருக்கடி மற்றும் 2019ம் ஆண்டில் ஏற்பட்ட ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள், 2020/2021இல் கோவிட் பெருந்தொற்று மற்றும் 2022இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி போன்ற நாட்டினைப் பாதிக்கும் ஏனைய விடயங்களை நோக்கியும் கவனம் திசைதிரும்பியபோதும், இலங்கையானது அரசின் நல்லிணக்கத்திற்கான நிகழ்ச்சிநிரலின் பகுதியாக பல்வேறுபட்ட முறைசார் நடவடிக்கைகளையும் உள்வாங்கிக்கொண்டது, இவை தேசியளவிலான கொள்கைரீதியான முனைப்புக்கள் மற்றும் சர்வதேச வாக்குறுதிகள் ஆகிய இரண்டினையும் குறிக்கின்றன.

2022ம் ஆண்டின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு (LLRC) இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு 2015ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) தீர்மானம் 30/1இற்கு இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியிருந்தமை தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் மற்றும் இழப்பீட்டிற்கான அலுவலகம் போன்ற அத்தீர்மானத்துடன் தொடர்புடைய நிலைமாறுகால நீதிப்பொறிமுறையினை ஆரம்பித்தமை போன்ற பிரதான உத்திகள் மற்றும் நிறுவனங்கள் போன்றவற்றினை உருவாக்கியமையும் உள்வாங்கிக்கொண்டமையும் ஆரம்பகால செயற்திட்டங்களாக அமைந்தன.

ஆயினும், ஒன்றுடனொன்று போட்டியிடும் அளவிலான முக்கியத்துவமிக்க மற்றும் மாறுபடுகின்ற அரசியல் முன்னுரிமைகள் மற்றும் நடைமுறைசார் கட்டுப்பாடுகள் போன்றவை இத்தகைய முயற்சிகளின் தொடர்ச்சியிலும் விளைவுகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கின்றன (மனித உரிமைகள் கண்காணிப்பகம், 2022; திமுது குமாரி, 2024).

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) தீர்மானம் 30/1இற்கு இணை அனுசரணை வழங்கியபின்னர், 2022இல் இலங்கையானது தேசிய நலன்களைக் கருத்தில்கொள்ளவில்லை என்பதனை அடிப்படையாகக்கொண்டு அத்தீர்மானத்தினை மீளப்பெற்றுக்கொண்டது (ஐரோப்பிய ஆணைக்குழு, 2020; சர்வதேச மன்னிப்புச்சபை 2020; வெறிட்டே ஆய்வு, 2024). அதன்பின் அரசாங்கமானது ஒரு உள்நாட்டு செயன்முறையினை அறிவித்து, 2024ம் ஆண்டில் பாராளுமன்றச் சட்டமொன்றினூடாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தினை மீளுருவாக்கம் செய்து உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவினை உருவாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்ட அதேவேளை, இம்முயற்சிகள் பரவலாக விமர்சிக்கப்பட்டன. உதாரணமாக, வடகிழக்கிலுள்ள சிவில் சமூக அமைப்புக்கள் முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் அர்த்தமுள்ளவிதத்தில் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளாமையினையும், அதன் நம்பகத்தன்மை தொடர்பிலான சந்தேகங்களையும் சுட்டிக்காட்டி அரசாங்கத்திற்கு கடிதங்களை அனுப்பி வெளிப்படையாகவே அதனை நிராகரித்தன (டெய்லி எப்டி 2024).

அதேவேளை, காணிப்பிணக்குகள், காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான சம்பவங்கள், மற்றும் அதிகாரப் பரவலாக்கத்திற்கான கோரிக்கைகள் (கொடிகார, 2023; CPA, 2024a; அகிலன், 2024), போன்ற யுத்தத்தின்பின்னர் நிலவிய தீர்க்கப்படாத மனக்குறைகள் தொடர்ந்தும் அரசாங்கத்திற்கும் பிரஜைகளுக்குமிடையில் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்குத் தடையாக அமைந்தன. வெறுப்பு பேச்சு, முஸ்லிம்களை குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட கலவரங்கள், கிறிஸ்தவ மற்றும் இந்து வழிபாட்டிடங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் போன்ற வன்முறைச் சம்பவங்கள் மேலும் நல்லிணக்கச்செயன்முறைகளை நலிவுறச்செய்தன (வெறிட்டே ஊடகம், 2024; இலங்கை காடியன், 2024). தொடரும் பொருளாதார நெருக்கடியானது நல்லிணக்கத்தினை முன்னோக்கிக்கொண்டுசெல்வதற்கான முனைப்புக்களை சிக்கலானதாக மாற்றுகின்றவகையில் மேலதிக அழுத்தத்தினை உருவாக்கியிருக்கின்றது (SLB 2024இனைப் பார்க்கவும்).

2022இல் அரகலய அசைவியக்கத்தின் தோற்றம் மற்றும் 2024இல் இடம்பெற்ற முக்கியத்துவம்மிக்க தேர்தல் போன்றவற்றினால் அடையாளப்படுத்தப்படுகின்ற குறிப்பிடத்தக்க அரசியல் மற்றும் பொருளாதார நிலைமாற்றங்களின் பின்னணியில் நல்லிணக்கத்துடன் தொடர்புடைய முயற்சிகளும் பின்னடைவுகளும் தொடர்கின்றன (பரீடம் கௌஸ், 2022 ஆசியா மன்றம், 2022; CPA, 2023). சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் முதன்முதலாக ஒரு இடதுசாரி அரசியற்கட்சி அதிகாரத்திற்கு வருவதற்கு மக்கள் வாக்களித்திருக்கின்றமையானது பிரஜைகளின் அரசியல் செயலாண்மையினைச் சுட்டிக்காட்டுவதுடன் இத்தேர்தலும் அம்மாற்றத்தினைப் பிரதிபலிக்கின்றது. (பேனர்ஜி, 2024; எலிஸ்-பீற்றசன், 2024; அமர், 2024; சில்வா, 2025).

புதிய அரசாங்கமானது தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் உள்வாங்குதலுடன்கூடிய அபிவிருத்தி ஆகியவற்றுக்கான மிகவும் வலுவான அர்ப்பணிப்பினை வெளிப்படுத்துவதுடன் இவ் அண்மைக்கால அரசியல் மாற்றமானது இலங்கையின் நல்லிணக்கத்திற்கான பாதையில் குறிப்பிடத்தக்க தருணமாக அமைகின்றது. இது புதிய அரசாங்கத்தின் கொள்கைச் சட்டகங்கள், ஜனாதிபதியின் உரைகள் மற்றும் தேர்தல் தந்திரோபாயங்கள் போன்றவற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன (ஐநா இலங்கை, 2024; ஹட்டோடுவ, 2024; திசனாயக்க, 2025). அரசாங்கத்தின் விஞ்ஞாபனமானது சமத்துவம், ஜனநாயகம் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் போன்ற கொள்கைகளின் அடிப்படையில் நலன்களைச் சமமாகப் பகிர்வதனை உறுதிப்படுத்துகின்ற உற்பத்தியினை மையமாகக்கொண்ட பொருளாதாரத்தினை உருவாக்குவதற்கான பிரச்சாரத்தை முன்னெடுப்பதனூடாக தேசிய அபிவிருத்தியில் அனைத்து சமூகங்களையும் உள்ளடக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்துகின்றது (தே.ம.ச, 2024).

ஜனாதிபதி அனுர குமார திசநாயக்க தனது முதலாவது பாராளுமன்ற உரையின்போது முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களினதும் துயரங்களை அங்கீகரித்ததோடு பிரித்தாளும் அரசியல் கருத்தாடல்களிலிருந்து உள்வாங்குதலுடன்கூடிய அரசியற்கருத்தாடல்களைநோக்கி மாறுவதற்கான அழைப்பினைவிடுத்ததன்மூலம் இத்தரிசனத்தினை வலியுறுத்தினார் (பெரேரா, 2025). பிராந்தியரீதியான வேறுபாடுகளைக் குறைத்து சமநிலையான வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இலக்குவைத்து முதலீடுகளை மேற்கொள்வதனை உள்ளடக்கிய பொருளாதாரக் கொள்கைவரை இவ் ஆரம்பஉரை தொடர்கின்றது (ஸ்ரீ லங்கா ப்ரீவ், 2025). ஆட்சிக்குவந்த முதலாவது மாதத்திலேயே, அரசாங்கமானது 34 வருடமாக இராணுவத்தினரால் மூடப்பட்டிருந்த பளை-அச்சுவேலி வீதியினைத் திறந்துவிட்டமை (ஜனாதிபதி செயலகம், 2024), பருத்தித்துறை இராணுவமுகாமினை மூடியமை, சிறியளவிலான காணித்துண்டுகளை உரிமையாளர்களான மக்களுக்கு மீளளித்தமை (மாதவ், 2024; பாதுகாப்பு அமைச்சு, 2025) போன்ற ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

நிறுவனரீதியான மற்றும் கட்டமைப்புரீதியான கடந்தகாலத் தோல்விகளை ஏற்றுக்கொண்டு நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கு மீளுறுதிசெய்யப்பட்ட அர்ப்பணிப்புடன் இச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன (ஐநா இலங்கை, 2024; கத்தொட்டுவ, 2024; திசநாயக்க, 2025). உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவிற்கான ஆரம்பகட்ட செயற்பாடுகளைச் செய்வதற்கான ஒரு அமைப்பாக உருவாக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான இடைக்கால செயலகமானது (ISTRM) தற்போது கைவிடப்பட்டுள்ள நிலையில், புதிய அரசாங்கமானது, வரலாற்றுரீதியாக மேற்கொள்ளப்பட்ட அநீதிகளை எதிர்கொள்வதற்கு

நம்பகத்தன்மையானதும் ஆலோசனைகளைக்கேட்டறிகின்றதுமான உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையினை உருவாக்குவதற்கான அர்ப்பணிப்பினை வெளிப்படையாகவே உறுதிசெய்திருக்கின்றது (தே.ம.ச 2024; ஸ்ரீ லங்கா ப்ரீவ், 2025).

இந்த சமிக்ஞைகள் ஆரம்பத்தில் எச்சரிக்கையுடன்கூடிய நம்பிக்கையினை உருவாக்கினாலும், 2025ம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் நல்லிணக்கத்துடன் தொடர்புடைய வாக்குறுதிகளை உரியகாலத்தில் அர்த்தமுள்ளவிதத்தில் பூர்த்திசெய்வதற்கான அரசாங்கத்தின் இயலுமை தொடர்பில் சந்தேகங்கள் அதிகரித்தன(CPA, 2025a). சர்ச்சைக்கிடமான பயங்கரவாதத்தடைச் சட்டத்தினை நீக்குவதில் தாமதம், புதிய அரசாங்கத்தினால் பல சந்தர்ப்பங்களில் அச்சட்டம் பயன்படுத்தப்படுகின்றமை, நிலைமாறுகால நீதிக்கான தெளிவான திட்டமின்மை போன்றன அரசாங்கத்தின் அர்ப்பணிப்பின் தீவிரம் மற்றும் நீடிக்கும்தன்மை போன்றவைதொடர்பில் கேள்விகளை எழுப்பியுள்ளன(CPA, 2025a).

தற்போதுள்ள இந்த அரசியற்சூழலில், இலங்கையர்கள் தமது செயலாண்மையினை அரசியல், சமூக, பொருளாதார வெளிகளில் பயன்படுத்துவதுடன், கட்டமைப்புரீதியான மாற்றத்திற்கான தமது எதிர்பார்ப்பினை வெளிப்படுத்துகின்றனர். 2025 SLB கருத்தாய்வானது இந்த நிலைமாற்ற காலகட்டத்தில் மாற்றமடைந்துவரும் முன்னுரிமைகள், தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பில் ஆதாரத்தினை அடிப்படையாகக்கொண்ட பார்வைகளை முன்வைப்பதனூடாக நம்பிக்கையின்மைக்கும் நிச்சயமற்றதன்மைக்கும் இடையில் பொதுமக்களின் உணர்வுகள் எவ்வாறு காணப்படுகின்றன என்பதைப் பதிவுசெய்கின்றது.

1.2. ஸ்ரீ லங்கா பரோமீட்டர் உருவாக்கப்பட்டமைக்கான காரணம்

இலங்கையில் இடம்பெற்ற நீண்டகால உள்நாட்டு யுத்தத்தின் பின்னர், நடைபெற்றுக்கொண்டிருக்கும் அரசியல் நிலைமாற்றத்தின் மத்தியிலும், நீதியினை உறுதிப்படுத்துதல், பொறுப்புக்கூறலுடன்கூடிய ஆட்சியினை மேம்படுத்துதல் மற்றும் தீர்க்கப்படாத மனக்குறைகளை எதிர்கொள்ளுதல் போன்றவற்றிற்கான சவால் தொடர்ந்தும் பிரதானமானதாக இருக்கின்றது. கடந்தகால முயற்சிகள் அத்தியாவசியமான அடிப்படைக்கட்டமைப்புக்களை உருவாக்கியிருப்பினும் அவற்றின் விளைவுகள் பெரும்பாலும் மாறிக்கொண்டிருக்கும் அரசியல் முன்னுரிமைகள் மற்றும் சமமற்ற நடைமுறைப்படுத்தல் போன்றவற்றினால் தீர்மானிக்கப்படுபவையாக இருக்கின்றன. நாடானது அரசியல்ரீதியான மீளமைப்புக்கான காலகட்டத்திற்கூடாகச் செல்லும்போது, அங்கு நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்கான, ஜனநாயகரீதியான பொறுப்புக்கூறலினை வலுப்படுத்துவதற்கான, மற்றும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான முனைப்புக்களை மக்களை மையமாகக்கொண்டு உருவாக்குவதற்கான, புதுப்பிக்கப்பட்ட வாய்ப்பு இருக்கும் உணர்வு ஏற்படுகின்றது. இச்செயன்முறைகளை வெவ்வேறுபட்ட சமூகங்களைச் சேர்ந்த மக்கள் எவ்வாறு நோக்குகின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்வது முன்னேற்றத்தினை அளவிடுவதற்கு மட்டுமல்லாது அர்த்தமுள்ள செயற்பாட்டினை வழிநடாத்துவதற்கும் அவசியமாகும்.

SLB பொதுமக்களின் கருத்துக்களை அறிந்துகொள்வதற்கும் பொதுக் கருத்தாடல்களில் அவர்களின் குரல்களை தந்திரோபாயமானமுறையில் ஒலிக்கச்செய்வதற்கும் பதிலளிக்கும்தன்மையானதும் அனைவரையும் உள்வாங்குகின்றதுமான கொள்கையுருவாக்கத்தினை ஆதரிப்பதற்கும் வலுவானதும் ஆதாரத்தினை அடிப்படையாகக்கொண்டதுமான ஒரு கருவியை வழங்குவதன்மூலம் இத்தேவையினை எதிர்கொள்கின்றது.

பல்வேறுபட்ட சூழமைவுகளிலுள்ள சமூகப் பிரச்சனைகளை அளவிடுவதற்கு சமூக விஞ்ஞானத் துறையில் பயன்படுத்தப்படும் ஒரு கருவியினை இந்த 'பரோமீற்றர்' எனும் பதம் விபரிக்கின்றது. உதாரணமாக, யூரோபரோமீற்றர் (1973ஆம் ஆண்டிலிருந்து), லற்றினோபரோமீற்றர் (1995இல் இருந்து), அ/ப்ரோபரோமீற்றர் (1999இல் இருந்து) அமெரிக்காஸ் பரோமீற்றர் (2004இல் இருந்து) போன்றவற்றினைக் குறிப்பிடலாம். முரண்பாடுகளினால் பாதிக்கப்பட்ட சூழல்களில் காலப்போக்கில் நல்லிணக்கத்தினை அளவிடுவதற்கு பரோமீட்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன, உதாரணமாக, தென்னாபிரிக்க நல்லிணக்க பரோமீற்றர் (2003ஆம் ஆண்டிலிருந்து) அவுஸ்ரேலிய நல்லிணக்க பரோமீற்றர் (2008இல் இருந்து) கனடா நல்லிணக்க பரோமீற்றர் (2016இல் இருந்து) போன்றவற்றினை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். பரோமீற்றரின் பெறுபெறுகள் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைகள், கொள்கைகள் மற்றும் இடையீடுகள் போன்றவற்றிற்குத் தேவையான தகவல்களை வழங்குகின்றன, சமூகத்தில் நிலவும் பிரதான பிரச்சனைகளை அடையாளங்காண்கின்றன, அத்துடன் முன்னேற்றம் தொடர்பான கண்காணிப்புக்களையும் மேற்கொள்கின்றன (கோல் மற்றும் பிச்சோ 2019).

பொதுமக்கள் கருத்தாய்வினூடான தரவுகள் சேகரிப்பினை, குறிப்பாக குடும்ப மட்டங்களிலான தனிநபர் தரவுச் சேகரிப்பினை, அடிப்படையாகக் கொண்ட இப்பரோமீற்றர் கருத்தாய்வுகள் மாற்றமடையும் அரசியல், சமூக மற்றும் பொருளாதார சூழமைவுகளில் மக்களின் தனிப்பட்ட அனுபவங்களில் கவனம் செலுத்துவதனூடாக அவர்களின் அபிப்பிராயங்கள், மனப்பாங்குகள், நடத்தைகள் மற்றும் உறவுமுறைகள் போன்றவற்றைப் பதிவுசெய்யும் பல குறிகாட்டிகளைக் கொண்டுள்ளன.

காலத்துக்குக் காலம் நடாத்தப்படும் இந்த ஆய்வுகள் காலவோட்டத்தில் போக்குகளைக் கண்காணித்து குறித்த காலப்பகுதியில் அல்லது வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பெறுமதிமிக்க தகவல்களை வழங்குவதுடன் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளவும் உதவுகின்றன (கோல் மற்றும் பிச்சோ 2019).

உலகலாவிய பரோமீற்றர் முறைமைகள்மீது கட்டியெழுப்பப்பட்டுள்ள SLB ஆனது இலங்கையில் பொதுமக்களின் தேசியரீதியிலான பிரதிநிதித்துவத்துடன்கூடிய கருத்துக்கணிப்புக்களை (பகுதி 2இனைப் பார்க்கவும்) ஒழுங்கான காலஇடைவெளிகளில் மேற்கொள்வதன் மூலம் வெவ்வேறுபட்ட சமூகங்கள் மத்தியில் நல்லிணக்கம் தொடர்பான அனுபவம் எவ்வாறானதாக இருக்கின்றது, அவர்கள் நல்லிணக்கத்தினை எவ்வாறு புரிந்துகொள்கின்றார்கள் என்பதுதொடர்பான விரிவான தகவல்களை வழங்குகின்றது.

இந்த கருத்தய்வுகளின் கண்டடைவுகளை பொதுமக்களுக்கும் கிடைக்கச்செய்வதன்மூலம் SLB இலங்கையர்கள் நல்லிணக்கத்தையும் அதன் முக்கிய பரிமாணங்களையும் எவ்வாறு நோக்குகின்றார்கள் எனும் புரிதலை விரிவுபடுத்துவதையும் நல்லிணக்கச் செயன்முறை எந்தளவிற்கு முன்னோக்கி நகர்ந்துள்ளது என்பதனைக் கண்காணிப்பதையும் பொதுக்கருத்தாடல்களுக்கும், கொள்கை உருவாக்கத்திற்கும் தேவையான பெருமளவிலான தரவுகளை வழங்குவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

மேலும் SLB அரசு, சிவில்சமூகம், கல்விப்புலம் மற்றும் ஊடகத்துறை சார்ந்த பங்காளர்களுக்கு பொருத்தமான தரவுகளை வழங்கும் பொது மூலமாக செயற்பட்டு நல்லிணக்கம் தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களையும் அனுபவங்களையும் சேமிக்கும் தரவுக்களஞ்சியத்தை உருவாக்குவதற்கு எதிர்பார்த்துள்ளது.

இந்தவகையில், SLBஆனது வெளிநாடுகளில் காணப்படும் சிறந்த நடைமுறைகளுடனும் நல்லிணக்கச் செயல்முறையில் நாட்டின் குடிமக்களை மையமாகக்கொண்டு செயற்படுமாறு உள்நாட்டுப் பங்காளர்களால் விடுக்கப்படும் கோரிக்கைகளுடனும் உடன்படுகிறது. இது அனைத்து சமூகங்களையும் சேர்ந்த மக்களது தேவைகளையும் முன்னுரிமைகளையும் முறையாகக் கருத்திற்கொள்வதற்கும் புரிந்துகொள்வதற்கும், நல்லிணக்கம் வெற்றியடைவதற்கு அவசியமான அனைவரையும் உள்ளடக்கிய தீர்வுகளை வகுப்பதற்கும் பங்காளர்களுக்கு உதவுகிறது (சில்வா 2018).

1.3. ஸ்ரீ லங்கா பரோமீட்டரின் கருத்தியல் அடிப்படை

SLB தனது நோக்கத்தினை அர்த்தமுள்ளவகையில் செயற்படுத்துவதற்கு, வெறுமனே சர்வதேச மாதிரிகளை மீளுருவாக்கஞ்செய்யாது இலங்கைச்சூழலில் ஆழமாக வேரூன்றியிருக்கவேண்டியிருந்தது. குறிப்பாக இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கான நிறுவகத்தால் (IJR) நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தென்னாபிரிக்க நல்லிணக்க பரோமீற்றர் போன்ற சர்வதேச முனைப்புக்களிலிருந்து ஊக்கத்தினைப் பெற்றுக்கொண்டபோதும் SLBஆனது, உள்நாட்டில் அதன் முக்கியத்துவத்திற்கும், உள்வாங்கும் தன்மைக்கும், உரியதரப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் தன்மைக்கும் தொடர்ச்சியாக முக்கியத்துவமளித்து வந்திருக்கின்றது.

SLBஆனது IJRஇன் தொழில்நுட்ப உதவி மற்றும் வழிகாட்டுதலுடன், தன்னை இலங்கைச் சூழலில் நிலைநிறுத்திக்கொள்ளவும் இலங்கையிலுள்ள மக்களின் நல்லிணக்கம் பற்றிய அபிலாஷைகளுடன் தம்மை இணைத்துக்கொள்ளவும், கருத்துக்களைக் கேட்டறிகின்ற பங்கேற்பு முறைமையினைக் கைக்கொண்டது.

SLBஇன் கருத்தியல் சட்டகமானது, 2018 தொடக்கம் 2019ஆம் ஆண்டுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் நாடு முழுவதும் ஆய்வாளர்கள், சமாதானத்தினைக் கட்டியெழுப்பும் முனைப்புக்களில் ஈடுபடுவோர், மற்றும் சமூகத்தினரை உள்ளடக்கிய 250இற்கும் மேற்பட்ட தனிநபர்களின் கருத்துக்களை உள்வாங்கி நடாத்தப்பட்ட நிபுணத்துவ ஆலோசனைகள் மற்றும் சமூகங்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட உரையாடல்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

SLBஇன் கருத்தியலானது, இலங்கையர்களின் வாழ்வியல் யதார்த்தங்களையும் உரிய கல்விப்புல கருத்தியலினையும் பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்துவதற்கு இவ் உரையாடல்கள் இன்றியமையாதவையாக இருந்தன. அத்துடன் இவை நல்லிணக்கம் தொடர்பான மக்களின் சிந்தனைகளும் அனுபவங்களும் பல்வகைப்பட்டவை; மாறிக்கொண்டிருப்பவை; குறிப்பான சூழமைவுடன் தொடர்புபட்டவை; அகவயமானவை; மிகவும் தனிநபர் சார்ந்தவை என்பதனை வெளிப்படுத்தின.

தேசியளவிலான இக்கலந்துரையாடற் செயன்முறையானது இலங்கையர்களுடனும் இலங்கைச் சூழலுடனும் தொடர்புடையவை எனக் கருதப்பட்ட நல்லிணக்கத்தின் எட்டுப் பரிமாணங்களை அடையாளம் காண்பதற்கு உதவின. அவையாவன: கடந்த காலத்தைக் கையாளுதல், அனைவருக்குமான நீதி, அடையாளமும் உடைமையுணர்வும், நம்பிக்கை, சமமான வாய்ப்பு, செயல்முனைப்புள்ள குடிமக்கள், பொறுப்புக்கூறலுடன்கூடிய ஆட்சி, பாதுகாப்பும் நல்வாழ்வும் (பின்னிணைப்பு 1ஐப் பார்க்கவும்) ஆகும்.

இப்பரிமாணங்கள் SLBஇன் கோட்பாட்டுரீதியான கட்டமைப்பிற்கான அடித்தளத்தை உருவாக்கின. அத்துடன் நல்லிணக்கம் தொடர்பான மக்களின் அன்றாட அனுபவங்களை அர்த்தமுள்ளவிதத்தில் ஆய்வுசெய்வதற்கான கருத்தியல்ரீதியான அடித்தளங்களாக இவை உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு முக்கிய எண்ணக்கருக்களுக்கும் வாதங்களுக்குமான தகவல்களை வழங்குகின்றவகையில் இந்த எட்டுப்பரிமாணங்களின் ஒவ்வொரு கருத்தியல் பரிமாணத்திற்கும் எண்ணக்கரு ஆய்வுகள் உருவாக்கப்பட்டன.

1.4. ஸ்ரீ லங்கா பரோமீட்டரை நடைமுறைப்படுத்துதல்

SLBஆனது, இலங்கையில் நல்லிணக்க செயன்முறைகளை வலுப்படுத்தல் (SRP) எனும் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் 2018 - 2022 காலப்பகுதியில் முதன்முறையாக பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டு, தற்போது இலங்கையில் நல்லிணக்கத்தினையும் சமாதானத்தினையும் வலுப்படுத்தல் (SCOPE) எனும் திட்டத்தினால் ஆதரவளிக்கப்படுகின்றது. SRP மற்றும் SCOPE ஆகிய இரண்டு திட்டங்களும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மன் சமஷ்டி வெளிநாட்டு அலுவலகம் ஆகியவற்றினால் இணைநிதியனுசரணை அளிக்கப்பட்டு, இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து GIZஇனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்களை மூலோபாயப் பங்குதாரர்களாகக்கொண்டு செயற்படுத்தப்படும் SLB அதன் செயற்பாடுகள் பரந்தளவிலான கண்ணோட்டங்களை உள்வாங்கியதாகவும் பல்வேறு நிபுணத்துவங்களினால் செழிப்பூட்டப்பட்டதாகவும் இருக்கவேண்டும் என்பதனை உறுதிப்படுத்துகின்றது. இவ் ஒன்றிணைந்த கட்டமைப்பானது, முறைமைசார் ஸ்திரத்தன்மையினை மேம்படுத்துவது மட்டுமல்லாது இம்முனைப்பின் நோக்கம் மற்றும் பாரபட்சமற்றதன்மை போன்றவற்றினையும் பாதுகாக்கின்றது. தற்போது, SLBஇன் பங்காளர்களாக SCOPE, தென் அமெரிக்காவிலுள்ள IJR மற்றும் த இன்சைட்ஸ் இனிசியேட்டிவ்[1] போன்றவை காணப்படுகின்றன. SLBயானது, வறுமை பகுப்பாய்வு மையத்துடன் (CEPA) இணைந்து இளம் ஆய்வாளர்கள் நிகழ்ச்சித்திட்டத்தினை முன்னெடுத்திருக்கின்றது, இத்திட்டமானது நல்லிணக்கம் தொடர்பான ஆய்வில் ஈடுபட ஆரம்பித்திருக்கும் இளம் ஆய்வாளர்களுக்கு தொடர்வழிகாட்டுதலினை வழங்கியது. அத்துடன் SLBயானது, தேசிய சமாதானப் பேரவையுடன் இணைந்து சமூகத்தினை மையப்படுத்திய செயற்பாடுகளையும், ஊடக தர்மத்துடனான ஊடகச்செயற்பாடு தொடர்பில் ஊடகங்களில் பணிபுரிவோர் மற்றும் ஊடககற்கையில் ஈடுபடும் மாணவர்களுக்கான பயிற்சிப்பட்டறைகளை வெறிட்டே ஆய்வுடன் இணைந்தும் மேற்கொண்டது. மேலும், SLBயானது, கல்வியியலாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் தன்னார்வத்தொண்டர்களைக்கொண்ட வளர்ந்துவரும் வலையமைப்புடனும் சேர்ந்து செயற்படுகின்றது.

ளுடுடீஇன் ஆரம்பநிலைக் கருத்தாய்வானது 2020இல் மேற்கொள்ளப்பட்டதோடு அதனைத் தொடர்ந்து 2021ஆம் ஆண்டுக்கான கருத்துக்கணிப்பு ஆரம்பிக்கப்பட்டது. இது வழக்கமான இரண்டுவருடத்திற்கொருமுறை எனும் காலப்பகுதியின் ஆரம்பத்தினைக் குறித்தது. 2020, 2021, 2023 மற்றும் 2025 ஆகிய அனைத்து SLB கருத்தாய்வுகளும் கருத்தாய்வு லங்காவினால் (Survey Research Lanka) சமூகமட்டத்தில்/களத்தில் மேற்கொள்ளப்பட்டது.

2022இல் ஒரு சிறியளவிலான இடைக்கால துரிதமுறைக்(Snapshot) கருத்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. அது 2022ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடியானது சமூக ஒற்றுமையில் ஏற்படுத்திய தாக்கங்களை ஆராய்வதில் கவனம் செலுத்தியது. இது வெறிட்டே ஆய்வினால் (Verité Research) நடைமுறைப்படுத்தப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை SLB இனால் நடாத்தப்படும் கருத்தாய்வுகளுக்கு மேலதிகமாக, கருத்தாய்விலிருந்து கண்டடைந்த சில தேர்வுசெய்யப்பட்ட விடயங்களை ஆழமாக ஆராயும் பொருட்டு பிரதானமாக பண்புசார் முறைமைகளை பயன்படுத்தி மேலதிக ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. 2021 மற்றும் 2025ஆம் ஆண்டுகளுக்கு இடையில் உள்நாட்டு ஆய்வாளர்களுடன் இணைந்து பத்து மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. SLB இன் அனைத்து கருத்தாய்வுகளும் ஏனைய பிரசுரங்களும் இங்கு காணப்படுகின்றன: www.srilankabarometer.lk/publications.

SLB ஆனது பிரதான பங்குதாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் கண்டடைவுகளைப் பகிர்ந்துகொள்வதையும், SLBஇன் இம்முயற்சியினையும், கருத்தாய்விற்கு பயன்படுத்தப்படும் கருவியினையும் (பகுதி 1.3ஐயும் பார்க்கவும்) தொடர்ந்தும் விருத்திசெய்வதில் சமூகத்திலுள்ளோரின் குரல்களையும் உள்வாங்குவதனையும் நோக்காகக்கொண்டு, தொடர்பாடல் மற்றும் சமூகத்தினை மையப்படுத்திய முனைப்புக்களை மேற்கொண்டுவருகின்றது. இவ் அறிக்கையினை எழுதிக்கொண்டிருக்கும்போது, 6000இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் இத்தகைய சமூகத்தினை மையப்படுத்திய செயற்பாடுகளில் பங்குபற்றி, SLB இன் கண்டடைவுகள் தொடர்பில் ஈடுபட்டு அல்லது தமது பணிகளில் SLB இன் தரவுகள் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் எனத்தேடியிருக்கின்றார்கள். நிகழ்வுகள் SLB இன் இணையத்தளத்திலும் Facebook, (முகநூல்) மற்றும் Instagram (இன்ஸ்ரகிராம்), X போன்ற சமூகவலைத்தளங்களில் பிரசுரிக்கப்படும்.

1.5. அறிக்கையின் அமைப்பு

SLB ஆனது நல்லிணக்கத்தின் எட்டுப் பரிமாணங்களையும் அளவிடுவதற்கு பரந்தளவிலான குறிகாட்டிகளைப் பயன்படுத்துகின்ற அதேவேளை, இந்த அறிக்கையானது, தேர்வுசெய்யப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக ஆழமாக ஆய்வுசெய்வதற்காக உபகுறிகாட்டிகளிலும் கவனஞ்செலுத்துகின்றது. ஏனைய பிரதான குறிகாட்டிகளுடன் தொடர்புடைய பிரதான போக்குகள் குறித்த சுருக்கமொன்று 2025 SLBஇன் பிரதான குறிகாட்டிகள் தொடர்பான மேலோட்டமான பார்வை அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலதிக கண்டடைவுகளை SLBஇன் இணையவழியான தரவுப் பகுப்பாய்வுக் கருவி மூலம் பெற்றுக்கொள்ள முடியும். கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட SLBஇன் கருத்தாய்வுகளுக்குரிய முழுமையான தரவுத்தொகுதிகளையும் பொதுமக்கள் கருத்தாய்விற்கான ரோபர் மையத்தில் (Roper Center for Public Opinion Research) பெற்றுக்கொள்ளமுடியும்.

முன்னர் குறிப்பிடப்பட்டதுபோல, இவ்அறிக்கையானது 2024இல் இடம்பெற்ற அரசியல் மாற்றத்தின் சூழமைவில் ஆளுகை மற்றும் செயல்முனைப்புள்ள பிரஜைகளாயிருத்தல் போன்றவற்றில் அது ஏற்படுத்தும் தாக்கத்தின் மத்தியிலும் நல்லிணக்கம் தொடர்பான மாற்றமடைந்துவரும் பரிமாணங்களை எதிர்கொள்ள முயல்கின்றது. இவ் ஆய்வானது மூன்று பிரதான ஆய்வுக்கேள்விகளை மையப்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது.

- தற்போதைய அரசியல் மாற்றத்தின் சூழமைவில் பிரஜைகள் நல்லிணக்கம் என்பதை எவ்வாறு புரிந்துகொள்கின்றார்கள்? இப்பகுதியானது, உணரப்பட்ட நல்லிணக்கத்திற்கான தேவை, அதன் முன்னேற்றம், நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதிலுள்ள தடைகள், நல்லிணக்கத்தினை முன்னோக்கி நகர்த்துவதற்கான பொறுப்பு யாருக்குரியது? (பகுதி 3) போன்றவை உள்ளடங்கலாக இலங்கையில் தற்போது நல்லிணக்கத்தின் நிலை தொடர்பான விடயங்களை மையப்படுத்திய குறிகாட்டிகள் பற்றி ஆராய்கின்றது.

- பிரஜைகள் நல்லிணக்கத்தினை முன்னோக்கி நகர்த்துவதற்கான ஆட்சிச் சட்டகங்கள், கட்டமைப்புக்கள் மற்றும் சிவில் வெளி போன்றவற்றினை எவ்வாறு நோக்குகின்றார்கள்? இப்பகுதியானது பொறுப்புக்கூறலுடன்கூடிய ஆட்சி எனும் பரிமாணத்தில் கவனஞ்செலுத்துவதனூடாக நல்லிணக்கத்துடன் தொடர்புடைய முயற்சிகளுக்கு தற்போதுள்ள ஆட்சிச் சட்டகங்கள் மற்றும் கட்டமைப்புக்களின் பதிலளிக்கும்தன்மையும் பொறுப்புக்கூறும்தன்மையும் பிரஜைகளினால் எவ்வாறு பார்க்கப்படுகின்றது என்பது தொடர்பான விபரங்களை வழங்குவதற்கு அரசியல் நம்பிக்கை, ஊழல்தொடர்பான கண்ணோட்டங்கள் மற்றும் தனிப்பட்ட சுதந்திரங்கள் போன்ற குறிகாட்டிகளைப் பகுப்பாய்வுசெய்கின்றது (பகுதி 4).

- நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதில் தமது பங்கு எத்தகையது என தனிநபர்கள் நினைக்கின்றார்கள்? இப்பகுதியானது சட்டகங்களிலிருந்து கவனத்தினை தனிநபர்களைநோக்கித் திருப்புவதனூடாக நல்லிணக்கத்தினை முன்னோக்கி நகர்த்துவதற்கான பங்களிப்பினை மேற்கொள்வதற்கு பிரஜைகள் எந்தளவிற்கு வலுப்படுத்தப்பட்டவர்களாக உணர்கின்றார்கள் என மதிப்பிடுவதற்கு செயல்முனைப்புள்ள பிரஜையாயிருத்தல், அரசியல் செயலாண்மை மற்றும் அரசியல் வினைத்திறன் (உள்ளக மற்றும் வெளிப்புற) போன்ற குறிகாட்டிகளை ஆய்வுசெய்கின்றது (பகுதி 5).

இவ் அறிக்கையானது மூன்று கருப்பொருட்பரப்புகளுடனும் தொடர்புபட்ட போக்குகளை (பகுதி 6) எடுத்துக்காட்டி கொள்கைப் பரிந்துரைகளை (பகுதி 7) முன்வைப்பதுடன், பிரதான கண்டடைவுகளின் தொகுப்புடன் நிறைவடைகின்றது.

1 த இன்சைட்ஸ் இனிசியேட்டிவ் ஆனது உள்நாட்டினைச்சேர்ந்த அரசுசாரா ஆய்வு நிறுவனமாகும், இது SLB செயல்முனைப்பினை நிறுவனரீதியாக்குவதற்கும் அதனை முன்னெடுப்பதற்குமாக 2025ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

2. ஆய்வு முறைமை

பரந்த அளவிலான சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாசாரத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து மக்களின் மனப்பாங்குகள், கருத்துக்கள் மற்றும் நம்பிக்கைகள் எவ்வாறானதாக இருக்கின்றது என்பதை அளவிடுவதற்கு SLBஆனது ஒரு அளவுசார் ஆய்வு முறையைப் பயன்படுத்துகின்றது. பொதுமக்கள் கருத்தாய்வின் விசேடபிரிவின் ஓர் பகுதியாக பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் கருத்துக்களைப் பற்றிய நுணுக்கமான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

SLBஆனது அதன் கருத்தியல் கட்டமைப்பின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட ஆய்வு வினாக்கொத்துக்களை பயன்படுத்தி தரவுகளை சேகரிக்கின்றது (பின்னிணைப்பு 1ஐப் பார்க்கவும்). SLBஇன் முதலாவது கருத்தாய்வினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட விரிவான சமூகமட்டத்திலான மற்றும் நிபுணர்களுடனான ஆலோசனைக்கலந்துரையாடல்கள், ஆய்வுகள் என்பவற்றிலிருந்தே இக் கருத்தியல் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சட்டகமானது, எட்டு கருத்தியல் பரிமாணங்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கருத்தியல் பரிமாணமும் பல துணைப் பரிமாணங்களையும் அவற்றிற்குள் வெவ்வேறு சமூக குறிகாட்டிகளையும் கொண்டுள்ளது. இக் குறிகாட்டிகள் பிரதான கருத்தியல் பரிமாணஙகள் தொடர்பில் மக்களின் கருத்துக்களைப் பிரதிபலிப்பதுடன், அளவுசார் பகுப்பாய்விற்கும் அடிப்படையாக அமைகின்றன.

காலமாற்றத்துடன், நல்லிணக்கம் தொடர்பான மக்களின் கண்ணோட்டங்களின் போக்குகளை அடையாளங்காண்பதற்கு ஒவ்வொரு கருத்தாய்விலும் பிரதான குறிகாட்டிகள் தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றன. புதிதாகத் தோற்றம்பெற்ற விடயங்களை உள்வாங்கிக்கொள்வதற்காக புதிய குறிகாட்டிகள் தொடர்ந்துவந்த கருத்தாய்வுகளில் சேர்க்கப்பட்டன. உதாரணமாக, கோவிட் பெருந்தொற்றின் தாக்கம் தொடர்பான குறிகாட்டிகள் 2021இலும், பொருளாதார நெருக்கடி தொடர்பான குறிகாட்டிகள் 2023இலும், தேர்தலுக்குப் பின்னரான காலத்திலுள்ள மாற்றங்கள் 2025இலும் மேற்கொள்ளப்பட்ட கருத்தாய்வுகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

2020இல் ஆரம்பகட்ட கருத்தாய்வினையும் முதலாவது பின்தொடர் கருத்தாய்வினை 2021இலும் மேற்கொண்ட பின்னர், SLBஆனது தென்ஆபிரிக்க மாதிரியினைப் பின்பற்றி கருத்தாய்வினை மேற்கொள்வதற்கான கால இடைவெளியினை இரண்டாண்டிற்கு ஒருமுறையாக எடுத்துக்கொண்டது. இக்கால இடைவெளியானது இவ் ஆய்வினை மேற்கொள்வதற்கான சாத்தியப்பாடு, பொருளாதாரரீதியான நடைமுறைச் சாத்தியம் மற்றும் நிலைத்திருக்கும்தன்மை போன்றவற்றினை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை, காலவோட்டத்தில் சமூகப்போக்குகளை அளவிடுவதற்கும் போதுமானதாக இருக்கின்றது.

ஒவ்வொரு கருத்தாய்வின்போதும், நாடுமுழுவதும் கருத்தாய்வினை மேற்கொள்வதற்கு முன்னர் 60 பங்குபற்றுனர்களுடன் பரீட்சார்த்தமான கருத்தாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கருத்தாய்வில் பயன்படுத்தப்படும், கேள்விகளின் செல்லுபடியாகும்தன்மை மற்றும் நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்படும்.

2025ம் ஆண்டுக்குரிய கருத்தாய்விற்கான தரவுகள் 2025ம் ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் சேகரிக்கப்பட்டன. பின்னிணைப்பு 2இல் தரவுச்சேகரிப்புச் செயன்முறை தொடர்பான விரிவான விளக்கம் வழங்கப்பட்டுள்ளது.

2.1. மாதிரிகளின் தெரிவுச் (Sampling) சட்டகம்

18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதைச்சேர்ந்த இலங்கையர்களிடமிருந்து மாதிரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

2012ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் கணக்கெடுப்பின்படி நாட்டின் மொத்த சனத்தொகையின் 70%ஆனோராக இவர்கள் இருந்தனர். அல்லது மொத்த மக்கள் தொகையானது 20,359,439ஆகவும், இவர்கள் 14,230,273 பேராகவும் இருந்தனர்.[2] SLBஇன் 2025ஆம் ஆண்டிற்கான கருத்தாய்வின் இறுதி மாதிரிகள் 3,876 பங்குபற்றுனர்கள் எனத் தீர்மானிக்கப்பட்டது.[3]

இம்மாதிரியானது தேசிய அளவில் 95% நம்பிக்கை மட்டத்தினையும் 1.58% வழுக்கள் ஏற்படுவதற்கான சாத்தியப்பாட்டினையும் கொண்டுள்ளது. கணக்கெடுப்பில் அடையாளங்காணப்பட்ட வயதுவந்தோரில் மாகாணவாரியான, இடவாரியான, இனத்துவரீதியான, மதரீதியான, பால்நிலை அடிப்படையிலான, மற்றும் வயதுவாரியான பல்வேறுபட்ட பிரிவுகளிலும் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கு உரிய அளவிலான மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. மாதிரித்தெரிவுக்கான சட்டகம் தொடர்பில் விரிவான விளக்கங்களுக்கு பின்னிணைப்பு 2இனைப் பார்க்கவும்.

2.2. தரவுப் பகுப்பாய்வும் விளக்கமும்

இவ்அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள பகுப்பாய்வானது, இரண்டுவிதமான அளவுகளைப் பயன்படுத்துகின்றது: ஒருங்கிணைந்த குறிகாட்டிகள் மற்றும் ஒரு விடயத்தினை மட்டும் அடிப்படையாகக்கொண்ட குறிகாட்டிகள்.

ஒருங்கிணைந்த குறிகாட்டியானது ஒரு கருத்தியலை மாத்திரம் அளவிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பல ஆய்வு வினாக்கொத்து விடயங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது (உதாரணமாக அரசியல் நம்பிக்கை, செயல்முனைப்புள்ள பிரஜை). பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒருங்கிணைந்த குறிகாட்டிகள் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆய்வு விடயங்களை உள்ளடக்கியவையாக இருக்கும். பதில் வழங்கியோர் 5-புள்ளிகளைக்கொண்ட அளவீட்டில் மதிப்பீடு செய்த இவ்விடயங்கள் தொடர்பில் எளிமையான விளக்கத்தை வழங்குவதற்காகவும், காட்சிப்படுத்துவதற்காகவும், 0 முதல் 10 வரையில் மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றன. இவை ஒவ்வொரு ஒருங்கிணைந்த குறிகாட்டிகளுக்கும், 0 முதல் 10 வரையான ஒற்றையான சராசரி மதிப்பீட்டு அளவுகளில் வழங்கப்பட்டுள்ளன. அதிக புள்ளிகள் என்பது அளவிடப்படும் கருத்தை நோக்கிய அதிக உணர்வைக் குறிக்கும்.

ஒரு விடயத்தினை மட்டும் அடிப்படையாகக்கொண்ட குறிகாட்டிகளானவை தனிப்பட்ட கருத்தாய்வு கேள்விக்கொத்தின் மூலம் உருவாக்கப்படுகின்றன. இவை குறிப்பிட்ட விடயங்களைப் புரிந்துகொள்வதற்காக தனிப்பட்ட கருத்தாய்வுக்குரிய ஒரு விடயமாக விசேடமாக வடிவமைக்கப்பட்டவையாகும் (உதாரணமாக, நல்லிணக்கம் என்பதன் அர்த்தம், நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதிலுள்ள சவால்கள்). ஒரு விடயத்தினை மட்டும் அடிப்படையாகக்கொண்ட குறிகாட்டிகளானவை நிகழ்வெண்களாக (சனத்தொகையின் விகிதாசாரம்) வடிவத்தில் வழங்கப்பட்டுள்ளன.

அறிக்கைமுழுவதும் குறிகாட்டிகளை எடுத்துக்காட்டும் வரைபுகளின் இலக்கங்களுடன் தொடர்புபட்டதாக ஒவ்வொரு குறிகாட்டியினையும் அளவிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கருத்தாய்வின் கேள்விகள் பின்னிணைப்பு 4இல் வழங்கப்பட்டுள்ளன.

---

2 இவ்அறிக்கையினைத் தயாரித்துக்கொண்டிருக்கும் அதேவேளையில், சனத்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2012ம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட கணக்கெடுப்பிலிருந்து பெறப்பட்ட எண்ணிக்கைகளே இறுதியாகவெளிவந்த சனத்தொகைக் கணக்கெடுப்பாக இருக்கின்றது. ஒரு புதிய சனத்தொகைக் கணக்கெடுப்பு தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது, அதன் முடிவுகள் நேரத்திற்கு வெளியிடப்படும்பட்சத்தில் 2027இற்கான SLB கருத்தாய்வின் மாதிரிகளைத் தெரிவுசெய்வதற்கு அது அடிப்படையாக அமையும்.

3 2020ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட கருத்தாய்வின் மாதிரிகளின் அளவு 3880ஆகவும், 2021ம் ஆண்டு 3860ஆகவும், 2023இல் 3876ஆகவும் இருந்ததுடன், இக்கருத்துக்கணிப்புகளை ஒப்பீடுசெய்வதையும் சாத்தியப்படுத்தியது.

2.3. மேலதிக குறிப்புக்கள்

இவ் ஆய்வறிக்கையானது, தவறவிடப்பட்ட பெறுமானங்கள் தவிர்ந்த ஏனைய கண்டடைவுகளை உரிய விகிதாசாரங்களில் அறிக்கையிடுகின்றது, ஆயினும், தவறவிடப்பட்ட தரவுகள் 15% இனை மீறும்போது அவை அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், தரவுகளை விபரிக்கும்போது அவை முன்னெச்சரிக்கையினை வழங்குகின்றன அல்லது தொடர்ந்துவரும் பகுப்பாய்வுகளுக்கு பொருத்தமானதாக அமைகின்றன. தவறவிடப்பட்ட பெறுமானங்களைக்கொண்ட விரிவான தரவுத்தொகுதிகளை மேலதிக பகுப்பாய்விற்காக ரோபர் மைய ஆவணத்தளத்தினூடாகப் (Roper Center Archives) பெற்றுக்கொள்ளலாம்.

மலையகத் தமிழர்[4] இனக்குழுவிற்கான ஒப்பீடானது, 2023ம்ஆண்டு இனக்குழுமப்பிரிவுக்கேற்றவகையில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தமையினால் அந்த ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது (விபரங்களுக்கு பின்னிணைப்பு 2இனைப்பார்க்கவும்).

இவ்அறிக்கையானது 2025இல் சேர்க்கப்பட்ட பல புதிய குறிகாட்டிகளை வெளிப்படுத்துகின்றது. போக்குகள் தொடர்பான பகுப்பாய்வு அல்லது முன்னைய ஆண்டுகளுடனான ஒப்பீடு இல்லாதபோதும், அவை புதிதாக அளவிடப்படுகின்ற கருத்தியல் தொடர்பில் ஆரம்பகட்ட விபரங்களை வழங்குகின்றன.

- நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான பாரிய பொறுப்பு (பிரிவு 3)
- ஊழல் தொடர்பான கண்ணோட்டம் (பிரிவு 4)
- ஊழலினை எதிர்கொள்வதில் அரசாங்கத்தின் வினைத்திறன் (பிரிவு 4)
- அதிகளவான ஊழலைக்கொண்ட நிறுவனம் (பிரிவு 4)
- அரசியல் செயலாண்மை (பிரிவு 5)

4 இலங்கையில் சனத்தொகைக் கணக்கெடுப்பானது இந்த இனக்குழுமத்தினை இந்தியத் தமிழராக வகைப்பிரிக்கின்ற அதேவேளை, இதுதொடர்பிலான ஆய்வுகள் மற்றும் சமூகமட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் இக்குழுமத்திலுள்ள அநேகர் தமது வேறுபட்ட கலாசார மற்றும் வரலாற்று அடையாளத்தினைப் பிரதிபலிக்கும் மாற்றுச் சொற்களை விரும்புகின்றார்கள். பொதுவாகப் பயன்படுத்தப்படும் சுயஅடையாளச் சொற்களாக, அப்-கன்றி *(Up-Country)* தமிழ், மலையகத் தமிழர்/மலையக மக்கள் மற்றும் இந்திய வம்சாவழித் தமிழர் போன்றவை உள்ளடங்குகின்றன. இச்சமூகம் தம் சுய-அடையாளப்படுத்தலுக்குப் பயன்படுத்தும் சொற்கள் அனைத்தையும் முழுமையாக ஏற்றுக்கொண்டு, அவற்றை மதிக்கின்ற அதேவேளை, இவ்விருப்பங்களை ஏற்றுக்கொள்ளும்விதத்தில், SLBஆனது மலையகத் தமிழர் எனும் சொல்லினைப் பயன்படுத்துகின்றது,

3. அரசியல் மாற்றங்களுக்கு மத்தியில் நல்லிணக்கம்

2009ஆம் ஆண்டில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்ததிலிருந்து இலங்கையின் நல்லிணக்கமானது, முன்னேற்றம், சந்தேகம், சமமற்ற அரசியல் ஈடுபாடு என்பவற்றைக்கொண்ட காலப்பகுதிகளைக் கடந்துவந்துள்ளது (பிரிவு 1.1ஐப் பார்க்கவும்). இவ்வாறானவொரு பின்னணியில் குறிப்பாக முரண்பட்ட சூழலில் SLB ஆனது 2020ஆம் ஆண்டிலிருந்து நாட்டு மக்களின் பார்வைக் கோணங்களை கண்காணித்து வந்துள்ளதோடு பதிலளிக்கும் தன்மை கொண்டதும் அனைவரையும் உள்ளடக்குவதுமான நல்லிணக்க முயற்சிகளை முன்னெடுப்பதற்கு, நல்லிணக்கம் என்று நாட்டு மக்கள் கருதுவது எதை என்பதையும் அதுகுறித்த அவர்களது அனுபவம் எவ்வாறுள்ளது எனும் புரிதலையும் பதிவுசெய்துள்ளது.

அந்த வகையில், இப்பகுதியானது அரசியல் மாற்றம் நிகழ்ந்துள்ள தற்போதைய சூழலில் மக்கள் நல்லிணக்கம் என்பதை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதில் கவனஞ்செலுத்துகிறது. மக்களின் நல்லிணக்கத்துக்கான தேவை மற்றும் இதுவரை உணரப்பட்டுள்ள முன்னேற்றம் என்பன தொடர்பிலான அவர்களின் பார்வை பற்றிய அவதானங்களை இது முன்வைப்பதோடு நல்லிணக்கம் என்பதால் இலங்கையர்கள் கருதுவது என்ன, அதனை அடைவதற்குத் தடையாக இருப்பவையாக அவர்கள் கருதுபவை யாவை, நல்லிணக்கத்திற்கான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான பெரும் பொறுப்பை ஏற்க வேண்டியவர்கள் என அவர்கள் கருதுவது யாரை போன்ற விடயங்களையும் ஆராய்கிறது.

3.1. இலங்கையில் நல்லிணக்கத்திற்கான பற்றாக்குறை

SLBஆனது 2020இல் இருந்து நல்லிணக்கத்துக்கான தேவை மற்றும் அதனை அடைவதில் உணரப்பட்ட முன்னேற்றம் தொடர்பான பொது மக்களின் பார்வையை மதிப்பிட்டு வருகிறது. மீளெழுச்சி என்பதை தேசிய நிகழ்ச்சிநிரலாக மாற்றிய 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட அனைத்து நெருக்கடிகளிலும் நல்லிணக்கத்திற்கான தேவை அதிகமாகவும் ஏற்பட்ட மாற்றம் மந்தமாகவும் இருப்பதை ஆய்வின் கண்டடைவுகள் காட்டி நிற்கின்றன (உரு 1). 2025ஆம் ஆண்டிலும் இதே போக்கு காணப்படுவதை அவதானிக்கலாம். குறிப்பாக 2023ஆம் ஆண்டு இந்நிலைமைகள் சிறிய சரிவினைக் கண்டிருந்த நிலையில் நல்லிணக்கத்தின் தேவையிலும் உணரப்பட்ட மாற்றத்திலும் தேசிய அளவில் முன்னேற்றம் ஏற்பட்டு அவை 2020ஆம் ஆண்டில் இருந்த நிலைக்கு மீண்டும் சென்றிருப்பதை கண்டடைவுகள் காட்டுகின்றன.

நல்லிணக்கத்துக்கான தேவை சிறியளவிலும் முன்னேற்றம் குறிப்பிடத்தக்களவிலும் அதிகரித்திருப்பதானது 2024 அரசியல் மாற்றத்தின் பின்னர் நல்லிணக்கம் பற்றிய மக்களின் அவதானம் மாறியிருப்பதையும் புதிய அரசாங்கத்திடமிருந்து அதன் தொடக்க காலத்தில் சாதகமான சமிக்ஞை ஒன்று கிடைத்திருப்பதையும் காட்டுகிறது. இக்கண்டடைவுகள் பொருளாதார நெருக்கடியின்போதும், அரசியல் மாற்றத்தின்போதும், தேசிய முன்னுரிமைகள் மாறுபடும்போதும், மக்களுக்கு நல்லிணக்கமானது தொடர்ந்தும் ஒரு பிரதான விடயமாக இருப்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது.

உரு 1: நல்லிணக்கத்திற்கான தேவையும் உணரப்பட்ட முன்னேற்றமும், தேசியளவில், சராசரி, 2020-2025



அதே நேரத்தில், நல்லிணக்கத்துக்கான அதிகரித்த தேவைக்கும் - மக்கள் தேவை என்று நினைப்பதற்கும் - குறைந்த அளவிலான உணரப்பட்ட முன்னேற்றத்திற்கும் - அடையப்பட்டதாக அவர்கள் நம்பும் நல்லிணக்கத்துக்கும் இடையேயான இடைவெளி தொடர்ந்தும் காணப்படுகிறது. "நல்லிணக்கப் பற்றாக்குறை" (லெடரக், 1997; உயங்கொட, 2011) எனக் குறிப்பிடப்படும் இந்த வேறுபாடு, பொதுமக்களின் அபிலாசைக்கும் உணரப்பட்ட முன்னேற்றத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கான தேவை தொடர்ந்தும் காணப்படுவதை தெளிவாகக் காட்டுகிறது. நல்லிணக்க முயற்சிகளில் மக்களுக்கு இருக்கக்கூடிய அதிருப்தியின் அளவையும் அவற்றிலிருந்து அந்நியப்படுவதற்கான வாய்ப்பையும் அளவிடுவதற்கான ஒரு அளவையாக இது செயற்படுகிறது. பற்றாக்குறை அதிகரித்துச் செல்வது நல்லிணக்க முயற்சிகள் குறித்து மக்களிடையே வளர்ந்து வரும் ஏமாற்றத்தையும் அவநம்பிக்கையையும் காட்டுவதோடு இது எதிர்கால முயற்சிகளையும் மோசமாகப் பாதிக்கவல்லது. மாறாக, பற்றாக்குறை குறைந்து செல்வது மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு இணங்க நல்லிணக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதையும் அதன் மூலம் நல்லிணக்க முயற்சிகளில் மக்களின் தொடர்ச்சியான நம்பிக்கையை வளர்ப்பதோடு நல்லிணக்க முயற்சிகளுக்கு பங்களிக்கும் உந்துதலையும் வழங்குகிறது.

மேலும், தேவை மற்றும் முன்னேற்றம் ஆகிய இரண்டிற்குமான பெறுபேறுகள் வெவ்வேறு இனக்குழுக்களிடையே பெருமளவில் ஒரே மாதிரியாக இருப்பதைக் கண்டடைவுகள் காட்டுகின்றன (உரு 2 மற்றும் 3). இது நல்லிணக்கம் என்பது சிறுபான்மை மக்களின் பிரச்சினை என்பதைவிட அது ஒட்டுமொத்த மக்களின் தேசிய முன்னுரிமை என்பதை உறுதிப்படுத்துகிறது. ஆயினும், சில வேறுபாடுகள் வெளிப்படுகின்றமையையும் காணமுடிகிறது. குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களிடையே நல்லிணக்கத்துக்கான தேவை சற்று அதிகமாக காணப்படுகின்றமை அவர்களது வரலாற்றுரீதியானதும் தொடர்ச்சியானதுமான முரண்பாட்டு அனுபவங்களைக் காட்டுவதோடு அவர்களுக்கு நல்லிணக்கச் செயற்பாட்டிலுள்ள உடனடியானதும் ஆழமானதுமான பங்கையும் காட்டுகிறது. (CPA, 2024b; சேப்பால, 2025). மலையகத் தமிழர்களிடையேயான பெறுபேறுகள், மற்ற அனைத்து குழுக்களைப் போலல்லாமல், 2023 மற்றும் 2025ஆம் ஆண்டுகளுக்கு இடையில் எந்த மாற்றமும் இல்லாமல், உணரப்பட்ட முன்னேற்றம் குறைவாகவே இருப்பதைக் காட்டுகின்றன. இந்த தேக்கநிலை, தேசிய நல்லிணக்க முயற்சிகள் மற்றும் உரையாடலில் அவர்கள் தொடர்ச்சியாக ஓரங்கட்டப்பட்டுவருவதனைக் காட்டுவதாகக்கூட இருக்கலாம். (திரணகம, 2013; CSCS, 2017; மீநிலங்கோ மற்றும் பலர் 2025).

சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்களை விட (1.6 புள்ளிகள்) இலங்கைத் தமிழர்கள் (2.2 புள்ளிகள்) மற்றும் மலையகத் தமிழர்கள் (2.1 புள்ளிகள்) மத்தியில் நல்லிணக்கப் பற்றாக்குறை அதிகமாகக் காணப்படுகிறது. வரலாற்று ரீதியாக புறக்கணிக்கப்பட்டுவரும் இச்சமூகங்களை கொள்கை தொடர்பான உரையாடல்களில் இணைத்துக்கொள்ள உளமார்ந்த முயற்சிகள் தேவை என்பதை இந்த வேறுபாடுகள் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. மேலும் இவை இனங்களிடையே ஒத்த அபிலாசைகளையும் முன்னேற்றம் தொடர்பான சமமற்ற அனுபவங்களையும் கருத்திற்கொண்ட நல்லிணக்க உத்திகளின் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டுகின்றன.

உரு 2: நல்லிணக்கத்திற்கான தேவை, இனரீதியாக, சராசரி, 2020-2025



உரு 3: நல்லிணக்கத்தில் ஏற்பட்ட முன்னேற்றம், இனரீதியாக, சராசரி, 2020-2025



3.2. நல்லிணக்கம் என்பதால் இலங்கையர்கள் கருதுவது யாது?

நல்லிணக்கத்திற்கான தேவை மற்றும் முன்னேற்றத்தை அளவிடும்போது, இலங்கையர்கள் நல்லிணக்கம் என்ற சொல்லை எவ்வாறு பொருள்கொள்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமாகும். ஏனெனில் இப்பொருள்கோடல்கள்தான் எதிர்பார்ப்புகளையும் செயல்களையும் தீர்மானிப்பவையாகக் காணப்படுகின்றன. 2020 முதல், நல்லிணக்கத்திற்கான பொதுமக்களின் பொருள்கோடல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து இன மற்றும் மதக் குழுக்களுக்குமிடையிலான ஒற்றுமையே/நல்லுறவே நல்லிணக்கம் எனப் புரிந்துகொள்ளும் இலங்கையர்களின் வீதம் சடுதியாக அதிகரித்துள்ளமை மிகவும் குறிப்பிடத்தக்க போக்காக காணப்படுகிறது. இது 2021இல் 28.8% இலிருந்து 2025இல் 48.5% ஆக உயர்ந்துள்ளது (உரு 4). SLB ஆய்வுகள் தொடங்கியதன் பின்னர் பதிவான மிக உயர்ந்த பெறுமானமாக இது காணப்படுவதோடு நல்லிணக்கம் என்பது முரண்பாடுகள் இல்லாதிருப்பது மட்டுமல்ல, என்றும் மாறாக சமூக ஒற்றுமையை தீவிரமாகக் கட்டியெழுப்புவதற்கு சமூக ஒழுங்கை மீளக்கட்டியெழுப்புவதை தாண்டிய ஒரு தூரநோக்காக விளங்கும் உண்மையான சகவாழ்வு மற்றும் குழுக்களுக்கு இடையேயான ஒற்றுமையே நல்லிணக்கம் என்று புரிந்துகொள்ளப்படுவதையும் இது காட்டுகிறது.

ஒருவருக்கொருவர் உதவுதல், ஆதரவளித்தல், நம்புதல் (9.3%), அனைவருக்கும் சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் (7.8%), மற்றும் பொருளாதார மேம்பாடு/செல்வச் செழிப்பு (3.8%) போன்ற பிற புரிதல்கள் நல்லிணக்கமானது சமூக, கட்டமைப்புரீதியாக மற்றும் பொருளாதார பரிமாணங்களிலும் பரந்த அங்கீகாரத்தைப் பெற்றுவருவதனைக் காட்டுகின்றன. 2025இல் பதிலளித்தவர்களில் 6.5% பேர் மட்டுமே நல்லிணக்கம் என்பது அமைதி/சமூக ஒத்திசைவு/முரண்பாடற்ற நிலை என ஓரளவுக்குச் சரியாக வரையறுக்கின்றனர். அமைதி மற்றும் அகிம்சை என்பன இன்றியமையாதவை என்றாலும், அவை நல்லிணக்கத்திற்குப் போதுமானதாக இல்லை (லெர்ச், 2000; பில்போட், 2012) என்பதால் இந்தப் புரிதல் முக்கியமானதாகும். நல்லிணக்கத்திற்கும் சமூகத்தின் பரந்த அபிலாசைகளுக்கும் இடையில் அதிகரித்துவரும் தொடர்பானது, வெறுமனே சமூகப் பதற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக உறவுகளை சரிசெய்வதில் கவனம் செலுத்தும் பெருமாற்றத்தை ஏற்படுத்தவல்ல நிலைமாற்றச் செயன்முறைகளுக்கான எதிர்பார்ப்புகள் அதிகரித்து வருவதனைக் காட்டிநிற்கின்றது.

நல்லிணக்கம் நல்லது/முக்கியமானது/தேவையானது என்றவாறு பொதுப்படையாக விளக்கமளித்தவர்களின் விகிதம் கணிசமானளவு குறைந்துள்ளது. 2020ஆம் ஆண்டு 15.9% ஆக காணப்பட்ட இந்நிலைமை 2025இல் வெறும் 5.9%ஆக குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நல்லிணக்கத்திற்கான ஆதரவு குறைந்து வருவதாக இதனைக் கருதலாகாது (உரு 1 மற்றும் 2 இல் காணப்படுவதுபோல அதிக அளவிலான தேவை நிலவுகின்றது). மாறாக, ஒற்றுமை, சுதந்திரம், சமத்துவம் மற்றும் அமைதியான சகவாழ்வின் முக்கியமான கூறுகளை வலியுறுத்தும் பதில்களின் பின்னணியில், இந்த மாற்றங்கள் நல்லிணக்கம் எதைக் குறிக்கின்றது என்பது பற்றிய பக்குவமானதும் காத்திரமானதுமான புரிதலைப் பிரதிபலிக்கின்றன.

உரு 4: நல்லிணக்கத்திற்கான அர்த்தம், தேசியளவில், %, 2025



சில முக்கிய கருப்பொருள்களைச் சுற்றி பதில்கள் அதிகரித்து வரும் நிலையில், 12% இலங்கையர்கள் 'ஏனையவை' என குறியிடப்பட்டுள்ள பதிலை வழங்கினர். 'ஏனையவை' என்ற வகைப்பாடு எந்தவொரு முக்கிய வகைகளுடனும் ஒத்துப்போகாத மிகவும் வேறுபட்ட பதில்களைக் கொண்டுள்ளது. நல்லிணக்கம் பற்றிய அனேகமானோரின் ஒத்த புரிதல்கள் கவனத்தை ஈர்த்துவருகின்றபோதும், அது பற்றிய பன்முகப்பட்ட புரிதல்கள் தொடர்ந்த வண்ணம் இருப்பது நல்லிணக்கம் என்ற கருத்து வேறுவிதமாகவும் சில நேரங்களில் தெளிவற்ற வகையிலும் பொருள்கொள்ளப்படுகிறது என்பதைக் குறிக்கிறது. நல்லிணக்கம் குறுகிய பொருளில் அல்லாமல் அர்த்தமுள்ள, பரவலாக ஆதரிக்கப்படும் செயலாக பொருள்கொள்ளப்பட வேண்டுமானால் பொதுமக்களுடன் தொடர்ச்சியான உரையாடல்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அனைத்து மக்களையும் உள்ளடக்க வேண்டியதன் அவசியத்தையும் இந்த வேறுபாடு உணர்த்துகிறது.

பதிலளித்தவர்களில் 6% பேர் பதில்சொல்வதற்கு போதுமான அறிவு இல்லை/புரிந்து கொள்ள முடியவில்லை என்று குறிப்பிட்டனர். அதேநேரத்தில் 22% பேர் பதிலளிக்கவே இல்லை (தரவு இல்லை). இதனை சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் (සංහිඳියාව *[saṁhiňdiyāva]* மற்றும் நல்லிணக்கம்) இப்பதம் பற்றிய பரிச்சயமின்மையை அல்லது அதன் அரிதான அன்றாட பயன்பாட்டை காட்டுவதாகக் கொள்ளலாம். இருப்பினும், இதன்மூலம் இந்நபர்கள் நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை நிராகரிப்பதாக எடுத்துக்கொள்ளலாகாது. உண்மையில், பதிலளித்தவர்களின் இந்த உப குழு கடந்த காலத்தை கையாளுதல் (இந்தக் குழுவிற்கு சராசரிப் புள்ளி 7.2), கடந்த கால அநீதிகளை ஏற்றுக்கொள்ளுதல் (7.3), நினைவுகூருதல் (7.2) மற்றும் இலங்கையர் என்ற கூட்டு அடையாளம் (7.9) போன்ற நல்லிணக்கத்தின் பிற முக்கிய கூறுகளை மிகவும் பெறுமதியானவையாகக் கருதியதாக பிற குறிகாட்டிகள் வெளிப்படுத்துகின்றன. 'நல்லிணக்கம்' என்ற பதத்தின் வரைவிலக்கணம் தெரியாதவர்களுக்குக்கூட, அதன் அடிப்படைக் கொள்கைகளைப் பற்றிய உள்ளார்ந்த புரிதலும் ஆதரவும் இருப்பதை இது குறிக்கிறது.

3.3. பொறுப்பு, தடைகள், நல்லிணக்க நிறுவனங்கள்

இந்த நாட்டில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதில் யார் மிகப்பெரிய பொறுப்பை வகிக்கிறார்கள் என்பதை மதிப்பிடும் பொருட்டு 2025ஆம் ஆண்டு SLB ஒரு புதிய கணக்கெடுப்புக் குறிகாட்டியை அறிமுகப்படுத்தியது. இந்தக் கேள்வி அடிக்கடி விவாதப் பொருளாக மாறிய SLBஇன் சமூகமட்டத்திலான கலந்துரையாடல்களும் அதே போல் பொறுப்பு மற்றும் செயற்படுத்தலுக்கான மாறுபட்ட அணுகுமுறைகளை எடுத்துக்காட்டிய 2024 தேர்தல் பற்றிய உரையாடல்களும் இக்குறிகாட்டிக்கான தகவல் மூலங்களாக காணப்பட்டன. இந்த உரையாடல்கள் மக்கள் நல்லிணக்கத்தை எவ்வாறு கருத்துருவாக்கம் செய்கிறார்கள் என்பதிலும் அதற்கு செயலுருவம் கொடுக்கக்கூடிய தலைமையாக யாரை அவர்கள் பார்க்கிறார்கள் என்பதிலும் கூடுதல் கவனம் செலுத்தியதன்மூலம் மக்கள் நல்லிணக்கத்திற்கான பொறுப்பை எவ்வாறு வழங்குகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டின.

நல்லிணக்கத்தின் பொருள் குறித்த கேள்விக்கு பதிலளித்தவர்களில்,[5] 50.7% பேர், அரசாங்கம் (24.1%), ஜனாதிபதி (22.8%) மற்றும் அரசியல்வாதிகள் (3.8%) உள்ளிட்ட அரசியல் நிறுவனங்களும் அரசியல்வாதிகளும் அதை முன்னெடுப்பதற்கான முதன்மைப் பொறுப்பைக் கொண்டுள்ளனர் என்று கருதுகின்றனர். இதற்கு நேர்மாறாக, 40.5% பேர் இந்தப் பொறுப்பு அனைத்து மக்களுக்கும்/சமூகங்களுக்கும்/பொதுமக்களுக்கும் உண்டு எனக் கூறுகின்றனர். அனைத்து இன மக்களின் நிலைப்பாடுகளும் பொதுவாக ஒரே மாதிரியாக இருந்தாலும், மலையகத் தமிழர்களில் (51.9%) அதிகளவானோர் இது மக்களின்/சமூகத்தின்/பொதுமக்களின் முதன்மைப் பொறுப்பு எனக் கருதுவதோடு இலங்கைத் தமிழர்களில் 29.9% பேரும் மலையகத் தமிழர்களில் 27.4% பேரும் மற்றும் முஸ்லிம்களில் 25.5% பேரும் ஜனாதிபதிக்கே மிகப்பெரிய பொறுப்பு இருப்பதாக கருதுகிறார்கள். இவ்வாறிருக்க 20.7% சிங்களவர்களே இது ஜனாதிபதியின் பொறுப்பு என்கிறார்கள் (உரு 5). இது ஜனாதிபதியின் பொறுப்பு என கணிசமானோர் கருதுவதற்கு, அண்மைய தேர்தல்கள் மீதான கவனம் அதிகரித்திருந்தமை மற்றும் இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறையுடன் தொடர்புடைய அதிகாரங்கள் என்பன செல்வாக்குச் செலுத்தியிருக்கலாம். மேலும், வரலாற்றுத் தவறுகளை நிவர்த்தி செய்வதற்கு வலுவான தலைமை ஒன்றை சிறுபான்மை சமூகங்கள் எதிர்பார்க்கின்றமையும் இதன்மூலம் புலனாகிறது. ஆகமொத்தத்தில் ஆய்வின் கண்டடைவுகள் யாவும் நல்லிணக்கத்தை ஒரு சமூக மற்றும் அரசியல் செயன்முறை என்ற இரட்டைக் கருத்தாக்கமாக குறிப்பிடுகின்றன.

சுவாரஸ்யமானவிதத்தில், பதிலளித்தவர்களில் 3.5% பேர் மட்டுமே நல்லிணக்கத்திற்கான முதன்மைப் பொறுப்பு மதத் தலைவர்களுக்கு இருப்பதாகக் கூறுகின்றனர். இது மதத் தலைவர்கள் நல்லிணக்க முயற்சிகளில் முக்கியமற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள் என்பதைக் குறிக்கவில்லை. மாறாக இந்த செயல்முறையை முன்னெடுத்துச்செல்வதற்கு அவர்கள் பொறுப்பானவர்களாகக் கருதப்படாமல் இருக்கக்கூடும் என்பதைக் குறிக்கிறது. இது அண்மைக் காலங்களில் மதகுருமார் சிலர் தேசியவாத இயக்கங்களில் அங்கம்வகித்து சிறுபான்மையினருக்கு எதிரான இனவாத கலவரங்களுக்கு அல்லது வன்முறைக்கு பங்களித்தமையின் பிரதிபலிப்பாகக்கூட இருக்கலாம் (கீனன், 2022; அசோசியேட்டட் பிரஸ், 2022).

5 பதிலளித்தோரில் நல்லிணக்கம் எனும் பதத்தினைப் புரிந்துகொள்ளவில்லை எனக்குறிப்பிட்டவர்கள்/முன்னைய கேள்விக்குப் பதிலளிக்காதவர்கள், தாம் புரிந்துகொள்ளாத/அறிந்திராத ஓர் கருத்தியலுக்கான பொறுப்பு யாருக்குரியதெனக் கேட்பது அர்த்தமுடையதாக இருக்காது என்பதால் அவர்கள், "பொறுப்பு யாருக்குரியது" எனும் கேள்வியிலிருந்து நீக்கப்பட்டனர்.

உரு 5: நல்லிணக்கத்தினை முன்னோக்கி நகர்த்துவதற்கான பாரிய பொறுப்பு, தேசியளவிலும் இனரீதியாகவும், %, 2025



இந்தக் கேள்விக்கான பதில்களை பால்நிலை அடிப்படையில் வகைபிரிக்கும்போதுகூட சில குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் காணக்கூடியதாகவுள்ளது (உரு 6). பெண்களுடன் ஒப்பிடுகையில் (45.2%) அதிகமான ஆண்கள் (56.2%) நல்லிணக்கத்திற்கான முதன்மைப் பொறுப்பை ஜனாதிபதி, அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்கம் போன்ற அரசியல் நிறுவனங்களிடமும் அரசியல்வாதிகளிடமும் வழங்கியிருக்கிறார்கள். இதற்கு நேர்மாறாக, அதிகமான பெண்கள் கூட்டு சமூகப் பொறுப்பை வலியுறுத்துகின்றனர். குறிப்பாக ஆண்களுடன் ஒப்பிடும்போது (33.9%) பெண்கள் 47% அதிகளவாக நல்லிணக்க முயற்சிகளுக்கான பொறுப்பு அனைத்து மக்களுக்கும்/சமூகங்களுக்கும்/பொதுமக்களுக்கும் காணப்படுவதாக கருதுகிறார்கள். மேலும், பதிலளித்தோரில் எண்ணிக்கையில் சிறிய பிரிவினைச்சேர்ந்தோராக இருந்தாலும், மதத் தலைவர்களுக்கு முதன்மைப் பொறுப்பு இருப்பதாக பெண்களைவிட இரண்டு மடங்குக்கும் அதிகமான ஆண்கள் கூறுகிறார்கள் (பெண்கள் - 1.9% ஆண்கள் - 5.2%). பால்நிலை அடிப்படையில் நல்லிணக்கத்திற்கான பொறுப்பு எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகிறது என்பதை இக்கண்டடைவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இதில் பெரும்பாலான ஆண்கள் ஆட்சியாளர்களையும் அதிகார மையங்களையும் பொறுப்பாக்கியிருக்க பெரும்பாலான பெண்கள் இது ஒவ்வொரு நபரினதும் அனைத்துச் சமூகங்களினதும் கூட்டுப் பொறுப்பு என வலியுறுத்துகின்றமை கவனிக்கத்தக்கது. இந்த மாறுபட்ட புரிதல்கள் இலங்கைச் சமூகத்தில் ஆழமாகப் பதிந்துள்ள பால்நிலையினை அடிப்படையாகக்கொண்ட கட்டமைப்புகளைப் பிரதிபலிப்பவையாக காணப்படுகின்றன எனலாம் (FOKUS, 2016; பொன்சேகா மற்றும் ஷெல்ஸ், 2020). அரசியல் செயற்பாடுகளில் பெண்களின் பங்கேற்பு மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதால் அது அவர்களின் சமூக ஈடுபாட்டின் மீதான முக்கியத்துவத்தை தீர்மானிப்பதையும் அரசியல் செயற்பாடுகளில் ஒப்பீட்டளவில் அதிக ஈடுபாடு கொண்ட ஆண்கள் உறவுமுறை அல்லது சமூக அடிப்படையிலான நல்லிணக்க பரிமாணங்களுக்கு குறைந்த முக்கியத்துவத்தை வழங்குவதையும் இது காட்டுகிறது.

உரு 6: நல்லிணக்கத்தினை முன்னோக்கி நகர்த்துவதற்கான பாரிய பொறுப்பு, தேசியளவிலும் பால்நிலைரீதியாகவும், %, 2025



நல்லிணக்கத்துக்கான தடைகள் பற்றிய கருத்துக்களிலும் இதேபோன்ற பால்நிலை அடிப்படையிலான மாறுபட்ட பார்வைகள் வெளிப்படுகின்றன (உரு 7). பெண்கள் பெரும்பாலும் நல்லிணக்கமின்மை (21.6%), பொருளாதார அசமத்துவம் (15.2%), பாகுபாடு (12.8%), மொழித் தடைகள் (4.4%) மற்றும் மக்களின் மனப்பாங்கு (13.1%) முதலான சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளை நல்லிணக்கத்துக்கான தடைகளாக அடையாளம் காண்கிறார்கள். இந்நிலைப்பாட்டை கொண்டிருக்கும் ஆண்களின் எண்ணிக்கை 49.1% வீதமாகவும் பெண்களின் எண்ணிக்கை 67.1% வீதமாகவும் இருப்பது கவனிக்கத்தக்கது. மாறாக, அதிகமான ஆண்கள் (39.1%) அதிகார துஷ்பிரயோகம் (16.6%), அரசியல் விருப்பின்மை (13.1%), பிளவுபடுத்தும் தேசியவாத அரசியல் (7.2%) மற்றும் ஊழல் (2.2%), போன்ற அரசியல்சார் சவால்களை தடைகளாக அடையாளம் காண்கிறார்கள். இந்நிலைப்பாட்டை 23.2% பெண்களே கொண்டிருப்பது நோக்கத்தக்கது.

உரு 7: நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பாரிய தடைகள், தேசியளவிலும் பால்நிலைரீதியாகவும், %, 2025



இந்த பால்நிலை அடிப்படையிலான பார்வை பரந்த தேசிய போக்குகளுடன் தொடர்புபடுகின்றது. 2020ஆம் ஆண்டு SLBஇன் தரவு சேகரிப்பு தொடங்கியதிலிருந்து, அரசியல் காரணிகளே நல்லிணக்கத்திற்கான தடைகளாகக் கருதப்பட்டு வந்திருக்கின்றன. 2023ஆம் ஆண்டில், மொத்தம் 53.6% இலங்கையர்கள் அரசியல் அதிகார துஷ்பிரயோகம்/அதிகாரம் மையப்படுத்தப்பட்ட அரசியல்/அரசியல் செல்வாக்குகள், அரசியல் விருப்பின்மை/பிளவுபடுத்தும் தேசியவாத அரசியல் போன்ற அரசியல் பிரச்சினைகளை குறிப்பிடத்தக்க தடைகளாக அடையாளம் கண்டுள்ளனர். 2025 ஆம் ஆண்டளவில், இந்த எண்ணிக்கை 29.2% ஆகக் கணிசமாகக் குறைந்துள்ளது. குறிப்பாக இது 2020 இல் 25.7% ஆக இருந்த அரசியல் விருப்பின்மை என்ற கருத்து 2025 இல் 10.4% ஆகவும், 2020இல் 37.5% ஆக இருந்த பிளவுபடுத்தும் தேசியவாத அரசியல் என்ற கருத்து 2025 இல் 6.0% ஆகவும் சரிவடைந்துள்ளமை கவனிக்கத்தக்கது (உரு 8). அரசியல் பிரச்சினைகள் பலருக்கு முக்கியமான காரணமாக தெரிந்தாலும் இந்த மாற்றங்கள் பொதுமக்களின் உணர்வுநிலையில் ஒரு பாரிய மாற்றம் ஏற்பட்டிருப்பதை குறிப்பாக 2024ஆம் ஆண்டு அரசியல் மாற்றத்திற்குப் பின்னர் மக்களுக்கு அரச இயந்திரத்தின் பதிலிறுக்கும்தன்மை மீது நம்பிக்கை அதிகரித்து வருவதனை காட்டுகிறது.

உரு 8: நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பாரிய தடைகள், அரசியல் விருப்பின்மை மற்றும் பிளவுபடுத்தும் தேசியவாத அரசியல் போன்றவற்றிற்கான பதில்கள், தேசியளவில், %, 2020-2025



அரசியல்வாதிகள் மீதான முக்கியத்துவம் இனங்காணப்பட்ட ஒரு தடையாகக் கருதப்படும் நிலை மாறியிருந்தாலும், நல்லிணக்கச் செயற்பாட்டுக்கு அரசியல்ரீதியான முன்னுரிமை காணப்பட வேண்டும் என்ற கருத்தைப் பிரதிபலிக்கிறது எனலாம். இப் பொருள்கோடல் நல்லிணக்கத்திற்கு அதிக அளவிலான தேவை இருப்பதையும் (பிரிவு 3.1 ஐப் பார்க்கவும்) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, OMP, OR மற்றும் முன்மொழியப்பட்ட CTUR உள்ளிட்ட நல்லிணக்க நிறுவனங்களுக்கு (2025 இல் தேசிய சராசரிப் புள்ளி 7.8) காணப்படும் அதிக முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகிறது (உரு 9).

இந்த நிறுவனங்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் மாகாணங்கள் முழுவதும் ஒப்பீட்டளவில் ஒரே மாதிரியாக உள்ள போதும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சற்று அதிகமாகவுள்ளது. உள்நாட்டுப் போரின் வடுக்களைச் சுமந்துள்ள இந்தப் பிராந்தியங்கள் காணிப்பிரச்சினைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் போன்ற பல தீர்க்கப்படாத பிரச்சினைகளைத் தொடர்ந்து எதிர்கொண்டுவருகின்றன (மனித உரிமைகள் கண்காணிப்பகம், 2018; வணிகசூரிய, 2020; மனித உரிமைகள் கண்காணிப்பகம், 2024). எனவே இந்த நிறுவனங்கள் கடந்த கால பாதிப்புகளை நிவர்த்தி செய்வதற்கும் நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டுவரும் தீர்வுகளை வழங்குவதற்கும் முக்கியமானவை எனலாம்.

உரு 9: நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கு நல்லிணக்க நிறுவனங்களின் முக்கியத்துவம், தேசியளவிலும் மாகாணரீதியாகவும், சராசரி, 2020-2025



பதிலளித்தவர்களில் 10.1% பேர் இக்குறிகாட்டிக்கு பதிலளிக்கவில்லை என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும் (தரவின்மை). இதனை பதிலளித்தவர்களில் பத்தில் ஒருவருக்கு இந்த நிறுவனங்கள் பற்றிய பரிச்சயம் இல்லை எனக் கொள்ளலாம். இது அவர்கள் மீது வைக்கப்பட்டுள்ள அதிக எதிர்பார்ப்புகளுக்கும் அவர்களுக்கு தங்களின் வகிபாகங்கள் மற்றும் ஆணை பற்றிய விழிப்புணர்வு இல்லாதிருப்பதற்கும் இடையில் இருக்கக்கூடிய இடைவெளியைக் குறிக்கிறது. இச்செயற்பாடுகளின் புலப்பாடு, செயற்திறன் மற்றும் சட்டபூர்வமான தன்மை என்பவற்றை அதிகரிக்கும் பொருட்டு அதிகளவிலான மக்கள் பங்களிப்பையும் பெற்றுக்கொள்வதற்கு இவ்விடயங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டியதன் அவசியத்தையும் இயலளவை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் இது சுட்டிக்காட்டுகிறது (SLB 2024 அறிக்கையையும் பார்க்கவும்).

3.4. சுருக்கம்

இந்தப் பகுதியில் வழங்கப்பட்ட SLBஇன் கண்டடைவுகள் யாவும் இலங்கையில் நல்லிணக்கம் என்ற விடயத்தையும் அதன் நடைமுறையையும் சுற்றியுள்ள பல்வேறு கண்ணோட்டங்களையும் குழப்பங்களையும் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் அவை நல்லிணக்கத்துக்கான பற்றாக்குறை தொடர்ச்சியாக இருந்து வருவதை வெளிப்படுத்துவதோடு நல்லிணக்கத்தையும் நிலையான அமைதியையும் மேம்படுத்துவதில் - அல்லது தடுப்பதில் - சமூக, அரசியல் மற்றும் நிறுவன பொறிமுறைகளின் பங்கு பற்றிய சிக்கலான புரிதல்களையும் எடுத்துக்காட்டுகின்றன. நல்லிணக்கத்திற்கான பொதுமக்களின் தேவை அதிகமாக இருந்தாலும், அதன் முன்னேற்றம் பற்றிய மதிப்பீடுகள் தொடர்ந்து தேக்க நிலையிலேயே காணப்படுகின்றன. இன்னும், அரசியல் மையங்களும் கூட்டு சமூக முயற்சிகளும் இந்தப் பயணத்தின் மையமாக இருப்பதையும் கண்டடைவுகள் காட்டுகின்றன.

மேலும், ஆண்களும் பெண்களும் நல்லிணக்கத்தையும் அதற்கு இருக்கக்கூடிய தடைகளையும் எவ்வாறு புரிந்துகொள்கிறார்கள், அதனை எவ்வாறு அனுபவிக்கிறார்கள் என்பதில் வேறுபாடுகள் காணப்படுவதையும் கண்டடைவுகள் வெளிப்படுத்துகின்றன. அதிகமான ஆண்கள் நல்லிணக்கத்தை அரச இயந்திரங்கள் மற்றும் அதிகார மையங்களைச் சார்ந்த ஒரு அரசியல் செயல்முறையாகக் கருதுகின்ற அதேவேளை அதிகமான பெண்கள் அதை சமூகத்தால் இயக்கப்படுவதும் ஆண், பெண் என சமூகத்திலுள்ள அனைவரினதும் கூட்டு ஈடுபாடு தேவைப்படுவதுமான ஒரு சமூகச் செயல்முறையாகக் கருதுகின்றனர். இப்பிளவுகளை இன்னும் வலுப்படுத்துவதைவிடுத்து நல்லிணக்க முயற்சிகளானவை, நிறுவன மற்றும் அரசியல் தளங்களில் பெண்களின் ஈடுபாட்டை உறுதி செய்வதன் மூலமும், சமூக மற்றும் சமூக அடிப்படையிலான செயல்முறைகளில் ஆண்களின் ஈடுபாட்டை ஊக்குவிப்பதன் மூலமும் அவற்றைச் சரிசெய்ய வேண்டும்.

4. நல்லிணக்கத்திற்கான சட்டகங்கள், கட்டமைப்புக்கள் மற்றும் வெளி

யுத்தம் முடிவுற்றதிலிருந்து நல்லிணக்கம் தொடர்பில் இலங்கையின் முன்னேற்றமானது மெதுவானதாகவும், சமமற்றதாகவும் இருக்கின்றது (அலிப், 2016; பெர்னாண்டோ,2020; உபுல்தெனிய மற்றும் பலர், 2022), பெரும்பாலும் இது அரசியல்ரீதியான முன்னுரிமைகள் மற்றும் தொடர்ந்துவந்த அரசாங்கங்கள் இருக்கின்ற கொள்கைகளை நம்பகத்தன்மையானமுறையில் நடைமுறைப்படுத்தாமை (டிமுது குமாரி, 2024; எகொனமி நெக்ஸ்ட், 2024; த மோர்னிங், 2025). ஆளுகை மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புகள் தொடர்பில் பிரதிபலிக்கையில், நல்லிணக்கத்தின் எட்டுப்பரிமாணங்களில் ஒன்றாக பொறுப்புக்கூறலுடன்கூடிய ஆட்சி SLBஇனால் அளவிடப்படுகின்றது. இது அனைத்துப் பிரஜைகளுக்கும் சமத்துவமாகச் சேவையாற்றுகின்ற அரசின் உள்வாங்குதல், நம்பகத்தன்மை, நிலையானதன்மை, பதிலளிக்கும்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் போன்றவை தொடர்பான விடயங்களைக் கருத்தில்கொள்கின்றது (ஸ்ரீ தேவபுர, 2024).

இப்பின்னணியில், இப்பகுதியானது பின்வரும் கேள்வி தொடர்பில் ஆய்வுசெய்கின்றது: நல்லிணக்கத்தினை முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கு அவசியமான ஆளுகைச்சட்டகங்கள், கட்டமைப்புக்கள் மற்றும் சிவில்வெளிகளை பிரஜைகள் எவ்வாறு புரிந்துகொள்கின்றார்கள்? இன்று இலங்கையில் நல்லிணக்கத்தினைத் தீர்மானிக்கும் அரசியல் மற்றும் நிறுவனரீதியான நிலை தொடர்பில் பிரஜைகள் எவ்வாறு புரிந்துகொள்கின்றார்கள் என்பதனை அரசியல் நம்பகத்தன்மை, ஊழல் மற்றும் தனிப்பட்ட சுதந்திரங்கள் போன்றவற்றினை மையப்படுத்தி ஆய்வுசெய்கின்றது. இக்குறிகாட்டிகள் தொடர்பான பகுப்பாய்வானது ஆளுகைச் சட்டகங்கள், நிறுவனரீதியான கட்டமைப்புக்களின் வினைத்திறன், யுத்தத்திற்குப் பிந்திய சூழமைவில் சிவில் வெளிகளின் வெளிப்படைத்தன்மை போன்றவை தொடர்பில் பிரஜைகளின் மதிப்பீடுதொடர்பான கண்ணோட்டத்தினை வழங்குகின்றது.

4.1. அரசியல் நம்பிக்கை மற்றும் பிராந்திய வேறுபாடுகளில் ஏற்படும் மாற்றங்கள்

பிரிவு 3ஆனது, முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது நல்லிணக்கத்திற்கான ஒரு தடையாக அரசியல் விருப்பு குறித்த கண்ணோட்டங்களானவை குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளன என்பதைச் சுட்டிக்காட்டியது. இம்மாற்றமானது தேசிய அரசாங்கம், உள்ளூராட்சி சபை, பிரதேச செயலகம், பொலிஸ் மற்றும் நீதிமன்றங்கள் உள்ளிட்ட நிறுவனங்கள்மீதான நம்பிக்கைத்தன்மையினை அளவிடுகின்ற - அரசியல் நம்பிக்கை தொடர்பான போக்குகளால் ஈடுசெய்யப்படுகின்றன. இது 2025இன் ஆரம்பத்தில் தரவுதிரட்டப்பட்ட காலகட்டத்தில் அரசியல் அர்ப்பணிப்பு மற்றும் நம்பிக்கை தொடர்பான கண்ணோட்டங்களில் காணப்படும் நம்பிக்கையினைப் பிரதிபலிக்கின்றது.

தேசிய அளவில் அரசியல் நம்பிக்கைக்கான புள்ளிகளானவை 2023இல் 5.9இலிருந்து ஒரு புள்ளியினால் அதிகரித்து 6.9ஐ அடைந்ததன்மூலம் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளன. இது 2020இலிருந்து பதிவுசெய்யப்பட்ட அரசியல் நம்பிக்கை தொடர்பான SLBஇன் பதிவுகளிலேயே மிகவும் உயர்ந்தமட்டத்தினை அடைந்துள்ளது (உரு 10). இப்பெறுபேறுகள் 2021இல் 4.8 எனும் குறைவான புள்ளியிலிருந்து தொடர்ச்சியாக மீண்டிருப்பதனைக் குறிப்பிடுவதுடன், குறிப்பாக 2022இன் அரகலய இயக்கம் மற்றும் 2024இல் புதிய அரசாங்கத்தின் பாரிய வெற்றி போன்ற பல பிரதான நிகழ்வுகளைத் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்ட பொதுமக்களின் நம்பிக்கையினையும் பிரதிபலிக்கின்றது,

உரு 10: அரசியல் நம்பிக்கை, தேசியளவில், சராசரி, 2020-2025



இத்தேசிய அளவிலான போக்கானது பெருமளவிலான மாகாணங்களில் பிரதிபலித்துள்ளது. வடமேல் மாகாணமானது அதிகளவிலான அரசியல் நம்பிக்கையினைப் பதிவுசெய்துள்ளதுடன் (சராசரிப் புள்ளி 7.2) தென் மற்றும் சபரகமுவ மாகாணங்கள் ஒவ்வொரு வருடமும் 1.3புள்ளி அதிகரித்து குறிப்பிடத்தக்க வருடாந்த அதிகரிப்பினைக் காட்டுகின்றன (உரு 11). ஆயினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசியல் நம்பிக்கை குறைவடைந்துள்ளமையானது மிகவும் சிக்கலான பிராந்தியளவிலான வேறுபாடுகளைக் காட்டுகின்றன. தேசிய மக்கள் சக்தியானது குறிப்பிடத்தக்க வெற்றியினை ஈட்டியிருந்த 2024ம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் இதற்குப் பங்களிப்புச்செய்யக்கூடிய ஒரு காரணியாக இருக்கக்கூடும். யாழ்ப்பாணம் போன்ற பாரம்பரியமாக தமிழரைப் பெரும்பான்மையாகக் கொண்ட இடங்களில் அவர்கள் வெற்றியீட்டியிருந்தமையானது தமிழர்-அல்லாத ஒரு கட்சியானது இப்பிரதேசங்களில் வெற்றியீட்டுவது இதுவே முதன்முறையாக இருப்பதனைப் பதிவுசெய்கின்ற அதேவேளை (இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு, 2024) அந்த நேரத்தில் தமிழ் அரசியற் கட்சிகளுக்குள் அதிகரித்திருந்த பிளவுடனும் இது பெருமளவில் தொடர்புபடுத்தப்படுகின்றது (தமிழ் காடியன், 2025; குருவிட்ட, 2025)

மேலும், யுத்தத்துடன் தொடர்புபட்ட நீதிக்கான கோரிக்கைகள் நீண்டகாலமாக தீர்க்கப்படாமலேயே இருப்பதுடன், தொடர்ந்தும் தமிழ் சமூகத்திற்கும் அரசுக்குமிடையிலான நம்பிக்கையினைக் குறைத்து அவர்களுக்கிடையிலான பிளவுபட்ட உறவினைப் பிரதிபலிப்பதாக அமைகின்றது (சற்குணநாதன், 2025). இப்போக்குகள் யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவில் பிராந்தியரீதியான நுட்பமான வேறுபாடுகளையும் அரசியல் நம்பிக்கை தொடர்பான சிக்கற்தன்மையினையும் எடுத்துக்காட்டுகின்றன.

உரு 11: அரசியல் நம்பிக்கை, தேசியளவிலும் மாகாணரீதியாகவும், சராசரி, 2020-2025



4.2. ஊழலும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதில் அதன் தாக்கமும்

அண்மைக்காலங்களில் பாரியளவில் பொருளாதார நெருக்கடியினால் உந்தப்பட்ட பொது உரையாடல்களில் ஊழல் என்பது குறிப்பிடத்தக்களவிற்கு முக்கியத்துவத்தினைப் பெற்றுள்ளது (ICG, 2024; CPA, 2023a). அது பொருளாதார வீழ்ச்சிக்கும் அதன்விளைவாக பிரஜைகள் அனுபவித்த துயரங்களுக்குமான பரவலாக அடையாளங்காணப்பட்ட பிரதான காரணியாக இருந்துவருகின்றது (CEPA, 2024; CPA, 2025b; உலக வங்கி, 2025; எகொனமி நெக்ஸ்ட், 2025). பொருளாதார தாக்கங்களுக்கு அப்பால் ஊழலானது அரசியல் நம்பிக்கையினை சிதைப்பதன்மூலமும், தனிநபர் செயலாண்மையினை சிதைப்பதன்மூலமும், அரசியல் வினைத்திறனைக் குறைப்பதன்மூலமும் நல்லிணக்கச் செயன்முறைக்கு ஊறுவிளைவிக்கின்றது (றிச்சி, 2010; ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல், 2014; ஜா மற்றும் பலர், 2025).

2024இல் இலங்கையானது ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனலினால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மலிவுச் சுட்டியில் (CPI)[6], 100இற்கு 32 புள்ளிகளைப் பெற்றிருந்தது. இதில் குறைந்த புள்ளிகள் அதிகளவிலான ஊழல் தொடர்பான கண்ணோட்டங்களைக் குறிக்கின்றன. இது பிராந்தியளவிலான சராசரிப் புள்ளியான 44இனைவிடக் குறைவாக இருப்பதால் பொதுத்துறை ஊழல் பற்றி ஓரளவிற்கு உயர்வான மதிப்பீடு காணப்படுவதைப் பிரதிபலிக்கின்றது. இலங்கையானது 180 நாடுகளில் 121ஆவதாகக் கணிக்கப்பட்டு உலகளாவியரீதியில் கடைசியிலிருந்து முன்றாவது இடத்தினைப் பெற்றிருந்தது (ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல், 2025a; 2025c).

இச்சூழமைவில், தே.ம.ச. இன் ஊழல் ஒழிப்பு நிகழச்சிநிரல் பொதுமக்கள் கவனத்தை ஈர்ப்பதில் முக்கிய பங்குவகித்தது (ஆமர், 2025a; ஹத்தொட்டுவ, 2025). இவ்விடயங்களைக் கருத்திற்கொண்டு SLBஆனது 2025இல் ஊழல் எந்தளவிற்கு காணப்படுகின்றது, அதன் தாக்கம் என்பவை தொடர்பான மக்களின் பார்வையினை அளவிடுவதற்கு ஊழல் தொடர்பான ஒருதொகைக் குறிகாட்டிகளை அறிமுகஞ்செய்திருந்தது. 2025இல் தேசியளவில், சராசரிப் புள்ளி 6.1உடன் பொதுத்துறையில் ஊழல் தொடர்பான கண்ணோட்டங்கள் ஓரளவிற்கு அதிகரித்திருக்கின்றன. மாகாண மட்டத்தில் நோக்கும்போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் (முறையே 6.5 மற்றும் 6.4) ஊழல்தொடர்பான கண்ணோட்டங்கள் மெதுவான உயர்வினைக் காட்டுகின்ற அதேவேளை, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களில் (முறையே 5.6 மற்றும் 5.7) தேசியரீதியான சராசரிப்புள்ளியினைவிடவும் மெதுவான வீழ்ச்சியினைக் காட்டுகின்றன (உரு 12).

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசியல் நம்பிக்கை மற்றும் அரசின் பதிலளிக்கும்தன்மை தொடர்பான கண்ணோட்டங்கள் குறைந்த மட்டங்களில் இருப்பதுடன் இக்கண்டடைவுகளும் ஒரேமாதிரியானதாக இருந்தன (பிரிவு 4.1, 5.1இனைப் பார்க்கவும்). குறைந்தளவிலான பொறுப்புக்கூறலுடன்கூடிய அல்லது பதிலளிக்கும்தன்மையுள்ள நிறுவனங்கள் தொடர்பான கண்ணோட்டங்களைக் கொண்டிருக்கும் பிரதேசங்களில் ஊழல் அதிகளவில் இருப்பதனை இதுபோன்ற வேறு ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன (டானிஷ் மற்றும் பலர், 2024). அரசியல் நம்பிக்கை, அரசின் பதிலளிக்கும்தன்மை, ஊழல்தொடர்பான கண்ணோட்டம் - போன்ற குறிகாட்டிகளின் ஒருங்கிணைவானது - இத்தோற்றப்பாடுகள் எவ்வாறு ஒன்றுடனொன்று தொடர்புபடுகின்றதென்பது தொடர்பில் மேலதிக ஆய்வுகள் தேவை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் SLBஇன் கருத்தாய்வுகளானவை காலவோட்டத்தில் இப்போக்குகளை அடையாளங்காண்பதற்கும், அவற்றை ஒப்பீடுசெய்யவும் உதவும்.

உரு 12: அரச பொதுச்சேவைகளில் ஊழல்தொடர்பான கண்ணோட்டம், தேசியளவிலும் மாகாணரீதியாகவும், சராசரி, 2025



6 ஊழல் மலிவுச் சுட்டெண் என்பது பொதுவான பொதுமக்கள் கருத்தாய்வுகளை அடிப்படையாகக் கொண்டிராமல், லஞ்சம், தவறான பயன்பாடு, உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் வழங்கப்படும் தனிச் சலுகை போன்ற காரணிகளைக் கருத்திற்கொண்ட நிபுணர்களின் மதிப்பீடுகள் மற்றும் வியாபார கருத்தாய்வுகள் போன்றவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதாகும். SLBஇன் அளவீடுகள் இக்கண்டடைவுகளுக்கு வலுச்சேர்க்கின்றன.

எந்த நிறுவனங்கள் அதிகளவிலான ஊழலினை வெளிப்படுத்துகின்றன எனக்கேட்கப்பட்டபோது, பதிலளித்தோரில் அரைவாசிப்பேர் பாராளுமன்றத்தினையும் (43.4%), அதன்பின் பொலீசாரையும் (14.5%), மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள், கிராம சேவையாளர் அலுவலகங்கள் உட்பட உள்ளூராட்சி அரச அமைப்புக்களையும் (12.5%) சுட்டிக்காட்டினர். இப்பெறுபேறுகள் நிறுவனரீதியான நம்பகத்தன்மையினை வலுப்படுத்தி ஜனநாயகக் கட்டமைப்புக்களின்மீது பொதுமக்களின் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்கான தொடர்முயற்சிகளின் முக்கியத்துவத்தினைச் சுட்டிக்காட்டுகின்றன.

இத்தகைய கரிசனைகளின் மத்தியில், SLBஇன் 2025 கருத்தாய்வானது, மாற்றம் ஏற்படுவதற்கான சாத்தியம் தொடர்பில் மக்களின் நம்பிக்கைபற்றிய பார்வையினை முன்வைத்து, முன்னரிருந்த அரசாங்கங்களுடன் ஒப்பிடும்போது ஊழலை வினைத்திறன்மிக்க வகையில் கையாள்வதற்கு தற்போதுள்ள அரசாங்கத்தின் இயலுமை தொடர்பிலான எதிர்பார்ப்புக்களை ஒப்பீடுசெய்யுமாறு பதிலளித்தோரைக் கேட்டுக்கொண்டது.

தேர்தல் முடிவுற்றதிலிருந்து சிலமாதங்களே கடந்த நிலையில் ஜனவரி 2025இல் கருத்தாய்விற்கான தரவுச் சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டது என்பதனைக் கருத்தில்கொள்வது அவசியமானதாக இருக்கின்ற அதேவேளை, 38.7%ஆனோர் ஊழலினை எதிர்கொள்வதில் தற்போதைய அரசாங்கத்தினை வினைத்திறன்மிக்கதாகவோ அல்லது மிகவும் வினைத்திறன்மிக்கதாகவோ கூறியதுடன் (உரு 13), ஆய்வின் பெறுபேறுகளானவை பிரஜைகள் மத்தியில் குறிப்பிடத்தக்களவிலான நம்பிக்கை நிலவுவதனை வெளிப்படுத்துகின்றன. மாறாக, பதிலளித்தோரில் 12.5% ஆனோர் மட்டுமே இதற்கு முன்னிருந்த அரசாங்கங்கள் இந்தவிடயம் தொடர்பில் வினைத்திறன்மிக்கதாய் இருந்ததாக நம்புகின்றனர். மாறாக, வினைத்திறனற்றிருக்கும், மிகவும் வினைத்திறனற்றிருக்கும் ஆகிய பதில்களைச்சேர்க்கும்போது, பதிலளித்தோரில் 10.2% ஆனோர் மாத்திரமே தற்போதைய அரசாங்கம் வினைத்திறனற்றதாக இருக்கும் என எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டனர். முன்னைய அரசாங்கங்கள் தொடர்பில் இதேபோன்ற உணர்வினைப் பகிர்ந்துகொண்ட 45.8%ஆனோருடன் ஒப்பிடும்போது, இது குறிப்பிடத்தக்களவிற்கு குறைவானதாகும். இக்கண்ணோட்டங்கள் 2025இல் அவதானிக்கப்பட்ட அரசியல் நம்பிக்கை குறித்து ஏற்பட்ட பரவலான அதிகரிப்புடன் பொருந்திப்போவதுடன், ஒன்றிலொன்று பரஸ்பர செல்வாக்குச்செலுத்துகின்ற உறவினையும் எடுத்துக்காட்டுகின்றன. ஊழல் போன்ற பாரிய பிரச்சினையினை எதிர்கொள்ளுவதற்கு அரசாங்கத்திற்கிருக்கும் இயலுமையானது நம்பிக்கை அதிகரிப்பிற்குப் பங்களிப்புச் செய்வதுபோல அதிகளவிலான நம்பிக்கையானது அரசாங்கத்தின் ஊழலை எதிர்கொள்வதிலுள்ள வினைத்திறன் தொடர்பில் மிகவும் சாதகமான கண்ணோட்டத்தினை உருவாக்கக்கூடும். அவதானிக்கப்பட்ட இந்த நம்பிக்கையானது ஊக்குவிப்பளிக்கின்ற அதேவேளை புதிய அரசாங்கத்தின் தேர்தலுக்குப்பிந்திய ஆதரவு மற்றும் புதுமையுடன் தொடர்புபட்டிருக்கின்றது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் SLBஇன் கருத்தாய்வுகளில் இத்தகைய கண்ணோட்டங்கள் தொடர்ந்தும் நிலைத்திருக்கின்றதா என்பதை நோக்குவது அவசியமானதாகும்.

உரு 13: ஊழலினை எதிர்கொள்வதில் முன்னிருந்த மற்றும் தற்போதுள்ள அரசாங்கங்களின் வினைத்திறன், தேசியளவில், %, 2025



4.3. ஜனநாயக வெளிகள் தொடர்பான கண்ணோட்டம்

உள்வாங்குதல், நம்பகத்தன்மை, ஸ்திரத்தன்மை, பதிலளிக்கும்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற இயல்புகளைக் கொண்டிருக்கும் வினைத்திறன்மிக்க ஆட்சிச் சட்டகங்கள் நல்லிணக்கத்தினை முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கும், வலுவான ஜனநாயகக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கும் இன்றியமையாதவைகும் (கிறின்டில், 2010). அத்துடன், ஜனநாயக வெளிகளின் பலத்தினையும், நல்லிணக்கத்தினையும் மேம்படுத்துவதற்கு வெளிப்படையானதும் பாதுகாப்பானதுமான ஜனநாயக வெளிகள் இன்றியமையாத பங்குவகிக்கின்றன (கோமேஸ், 2019; கறோதர்ஸ் மற்றும் ஹாட்நெட், 2021). இத்தோற்றப்பாடுகளை ஆய்வுசெய்வதற்கு, SLBஆனது நாட்டில் தனிப்பட்ட சுதந்திரங்கள் மற்றும் சமூகங்களின் பாதுகாப்பு தொடர்பான கண்ணோட்டங்களை ஆய்வுசெய்கின்றது.

தனிப்பட்ட சுதந்திரங்கள் தொடர்பான கண்ணோட்டங்கள் 2023இல் சராசரிப் புள்ளியான 6.0இலிருந்து 2025இல் சராசரிப் புள்ளி 7.4ஆக குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்துள்ளது - SLBஆனது தரவுச் சேகரிப்பினை ஆரம்பித்ததிலிருந்து பதிவுசெய்யப்பட்ட மிகவும் உயர்வான மட்டம் இதுவாகும் (உரு 14). முன்னர் மேற்கொள்ளப்பட்ட SLBஇன் கருத்தாய்வுகளில் தனிப்பட்ட சுதந்திரங்கள் தொடர்பான குறைவான மதிப்பீடுகள் ஏனைய தரவுகளுடன் பொருந்தியிருப்பதுடன்[7], 2025இல் ஏற்பட்ட துரிதமான அதிகரிப்பானது அண்மையிலேற்பட்ட அரசியல் மாற்றத்தைச்சுற்றியுள்ள ஜனநாயக வெளிகளை மேம்படுத்துவது தொடர்பிலும் நிலையான மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பிலும் பொதுமக்கள் மத்தியில் நிலவும் அதிகரித்த எதிர்பார்ப்புக்களைக் காட்டுகின்றது. இம்மாற்றங்கள் 2025இல் அவதானிக்கப்பட்ட அரசியல் நம்பிக்கையிலேற்பட்ட அதிகரிப்புடன் ஒத்திருப்பதானது, கட்டமைப்புரீதியான மாற்றங்களையும், அதிகளவிலான சிவில் சுதந்திரங்களையும் தற்போது அடைந்துகொள்ள முடியுமானதாயிருக்கும் என்கின்ற பொதுமக்களின் கூட்டு அபிப்பிராயத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது.

SLBஇன் சமூக பாதுகாப்பு தொடர்பான கண்டடைவுகளும் நேர்மறையான உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றன. இக்குறிகாட்டியானது சட்ட அமுலாக்கத்தினரின் முன்னிலையில், இராணுவத்தினரின் முன் மற்றும் அரச புலனாய்வு அதிகாரிகளின்முன் மக்களின் பாதுகாப்புணர்வினை அளவிடுகின்றது. சமூகபாதுகாப்பு குறித்த தேசியளவிலான சராசரியானது 2025இல் சிறியளவிலான அதிகரிப்புடன் தொடர்ந்தும் அதிகமானதாகவே காணப்படுகின்றது (2023இல் 8.3இலிருந்து 2025இல் 8.5இற்கு) (உரு 14).

7 மனித சுதந்திரச் சுட்டியில் இலங்கையானது 10இற்கு 5.2புள்ளிகளைப் பெற்று, உலகளாவியரீதியில் கடைசி மூன்றாவது இடத்தினைப் பிடித்திருக்கின்றது (வாஸ்கஸ் மற்றும் பலர், 2024). மனித சுதந்திரச் சுட்டியானது பொதுமக்களின் கருத்துக்களைவிட பல்வேறுபட்ட சட்டரீதியான குறிகாட்டிகள் உட்பட (உதாரணமாக, உலகவங்கி, ப்ரீடம் கௌஸ் சுட்டி) மூன்றாம் தரப்பினரின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதனால், SLBஇன் தரவு மற்றும் மனித சுதந்திரச் சுட்டி போன்றவை வெவ்வேறுபட்ட தகவல்களைப் பிரதிபலிக்கின்ற வலுச்சேர்க்கும் தரவுகளாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

உரு 14: தனிப்பட்ட சுதந்திரங்கள் மற்றும் சமூகங்களுக்கான பாதுகாப்பு, தேசியளவில், சராசரி, 2020-2025



தரவுகளின் மாகாணரீதியான பகுப்பாய்வானது, கண்ணோட்டங்களில் வேறுபாடுகளைக் காட்டுகின்றது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏனைய மாகாணங்களைவிடவும் சமூக பாதுகாப்பு தொடர்பான கண்ணோட்டங்கள் குறைவானவையாகக் காணப்படுகின்ற அதேவேளை, 2025ம் ஆண்டு சேகரிக்கப்பட்ட தரவானது குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டுகின்றது (உரு 15). இவ்வேறுபாடுகள் இப்பிரதேசங்களில் தொடரும் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு முகவர்களின் இருப்பு போன்றவற்றுடன் தொடர்புபட்டவையாக இருக்கக்கூடும் (ஐக்கிய அமெரிக்க அரசதிணைக்களம், 2023; மனித உரிமைகள் கண்காணிப்பு, 2024b). அதேவேளை, அண்மையிலேற்பட்ட அரசியல் மாற்றத்தினைத் தொடர்ந்து அதிகரித்த பொதுமக்களின் நம்பிக்கையானது பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்குவதற்கான முன்மொழிவு, சமூகங்களின் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகளுடன் நெருங்கிய தொடர்புடைய கொள்கை முன்மொழிவு, மற்றும் ராணுவ சோதனைச் சாவடிகளை அகற்றுவதன்மூலம் வடகிழக்கு மாகாணங்களில் பாதுகாப்புப்படையினரைக் குறைப்பதற்கான ஆரம்பகட்ட முயற்சிகள் போன்ற சாதகமான மாற்றங்களின் எதிர்பார்ப்பில் பிரதிபலிக்கப்படக்கூடும் (தமிழ் காடியன், 2025b; பட்டநாயக், 2025). ஆயினும், நடைமுறைச்சாத்தியமான, உரியநேரத்திற்கு மேற்கொள்ளப்படும் மாற்றமாக அது இல்லாதபட்சத்தில், அத்தகைய நம்பிக்கையானது குறுகியகாலத்தில் இல்லாமலாகிவிடும் என்பதை ஏற்றுக்கொள்வது அவசியமானதாகும். நிலையான செயற்பாடுகள் இல்லாமல், தரவுகளில் அவதானிக்கப்படும் மக்களின் நம்பிக்கை அதிகரிப்பினை நிலைத்திருக்கச்செய்வது சிரமமானதாகும்.

உரு 15: சமூகங்களுக்கான பாதுகாப்பு, தேசியளவிலும் மாகாணரீதியாகவும், சராசரி, 2020-2025



4.4. சுருக்கம்

இப்பகுதியானது மக்களின் நம்பிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கு ஆளுகை தொடர்பில் தொடரும் சவால்கள் ஆகியவற்றிற்கிடையிலான சிக்கலான இடைத்தொடர்பினைச் சுட்டிக்காட்டுகின்றது. 2025இல் அரசியல் நம்பிக்கையிலும், தனிப்பட்ட சுதந்திரங்கள் தொடர்பான கண்ணோட்டங்களிலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது முன்னெச்சரிக்கையுடன்கூடிய நம்பிக்கையினையும் தேர்தலின்பின் பொதுமக்கள் மத்தியில் எதிர்பார்ப்புக்கள் கூடியிருப்பதனையும் பிரதிபலிக்கின்றது. அதுபோல, சமூகங்களின் பாதுகாப்பு தொடர்பான புள்ளிகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் சட்ட அமலாக்கத்தினர் மற்றும் அரச அதிகாரிகளின் பங்கு தொடர்பில் அதிகரித்திருக்கும் நம்பிக்கையினைக் காட்டுகின்றது,

அதேவேளை, ஊழல் தொடர்பான கண்ணோட்டங்களினடிப்படையில் பாராளுமன்றமானது ஊழல் அதிகளவில் நிலவும் நிறுவனமாக அடையாளங்காணப்படுவதுடன், ஊழல் தொடர்ந்தும் மிகமுக்கியமான தடையாக விளங்குகின்றது. இது அத்தியாவசியமான பொது மற்றும் அரச நிறுவகங்களின்மீதான பொதுமக்களின் நம்பிக்கையினை அதிகரிப்பதற்கு தீர்மானகரமான ஊழலுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தேவையினை எடுத்துக்காட்டுகின்றது. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், நிலவும் பிராந்தியரீதியான வேறுபாடுகள் நல்லிணக்கம் மற்றும் ஆளுகை தொடர்பான மாற்றங்களுக்கேற்ப தேவைக்கமைய வடிவமைக்கப்பட்ட அணுகுமுறைகளைக் கோரிநிற்கின்ற நுட்பமான வேறுபாடுகளை வெளிப்படுத்துகின்றன.

இலங்கையானது அரசியல் மாற்றத்திற்குள்ளாகிக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், நல்லிணக்கத்தினை அர்த்தமுள்ளவகையில் முன்னோக்கி நகர்த்தக்கூடிய உள்வாங்குதலுடன்கூடிய, நிலையான ஆளுகைச் சட்டகங்களை நோக்கிய நிலையான முன்னேற்றத்தினை உறுதிப்படுத்துவதற்கு ஊழல், வெளிப்படைத்தன்மை, அசமத்துவம், மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற கட்டமைப்புரீதியான பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதன்மூலமும், முறையான செயற்பாடுகள் மூலமும், பொதுமக்களின் நம்பிக்கையினைத் தக்கவைத்துக்கொள்வேண்டும்.

5. நல்லிணக்கத்திற்கான பொதுமக்களின பங்குபற்றுதல்

ஒரு தேசத்தினுள் நல்லிணக்கத்தையும், நிலையான சமாதானத்தினையும் மேம்படுத்துவதற்கு பிரஜைகளின் செயல்முனைப்புடன்கூடிய பங்குபற்றுதல் அவசியமானதாகும் (வலன்ஸ்ரீன், 2013). அது பொதுவாகவே பல நடத்தைகளையும், செயற்பாடுகளையும் உள்ளடக்குகின்றது. குறிப்பாக சமூகப்பிரச்சினைகளை வெளிப்படுத்துதல், தலைவர்களையும், அரசாங்கத்தினையும் பொறுப்புக்கூறச்செய்தல் மற்றும் வாக்களித்தல் போன்ற சிவில் கடமைகளை நிறைவேற்றுதல் போன்றவை (கோமெஸ், 2019). 2018/2019இல் SLBஇனால் மேற்கொள்ளப்பட்ட சமூகமட்டத்திலான கலந்துரையாடல்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களானவை, இலங்கையர்கள் நேர்மறையான மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கான இயலுமை மற்றும் பொதுமக்கள் பங்குபற்றுவதற்கான சமமான வாய்ப்புக்கள் போன்ற இரண்டும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான காரணிகள் என்ற அடிப்படையில் அவற்றுக்கு முக்கியத்துவமளிக்கின்றார்கள் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது (பின்னிணைப்பு 1ஐப் பார்க்கவும்).

அரசியல் நிலைமாற்றத்தின் மத்தியில் மக்கள் நல்லிணக்கத்தினை எவ்வாறு பார்க்கின்றார்கள், அரச கட்டமைப்புக்கள் மற்றும் சட்டகங்கள் தொடர்பில் அவர்களின் கண்ணோட்டங்கள் போன்றவை முன்னைய பிரிவுகளில் பகுப்பாய்வுசெய்யப்பட்ட அதேவேளை, இப்பகுதியானது, தனிநபரைநோக்கி கவனத்தினைத் திருப்பி பின்வரும் கேள்வியினை ஆய்வுசெய்கின்றது: நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதில் தமக்கிருக்கும் பொறுப்பு/பங்கு எத்தகையது என தனிநபர்கள் நினைக்கின்றனர்? சிவில் மற்றும் அரசியல் செயற்பாடுகளில் (உள்ளக அரசியல் வினைத்திறன்) ஈடுபடுவதில் அவர்கள் எந்தளவிற்கு தன்னம்பிக்கையுடன் செயற்படுகின்றார்கள், அரசியல் தீர்மானங்களில் தமது பங்களிப்பு குறித்த உணர்வு (அரசியல் செயலாண்மை), தமது தேவைகளை அர்த்தமுள்ளவிதத்தில் பூர்த்திசெய்வதுதொடர்பில் இக்கட்டமைபைப்புக்கள்மீதான நம்பிக்கை (வெளிப்புற அரசியல் வினைத்திறன்), மற்றும் அரசியலில் ஈடுபடுவதற்கான ஊக்கம் போன்றவற்றில் கவனஞ்செலுத்தி, இக்கட்டமைப்புக்களுக்குள் தமது பங்கு எத்தகையதென இலங்கையர்கள் நினைக்கின்றார்கள் என்பதனை இது ஆய்வுசெய்கின்றது.

5.1. உள்ளக மற்றும் வெளிப்புற அரசியல் வினைத்திறன்

அரசியல் கட்டமைப்புக்களுடன் ஈடுபடுவதற்கு ஒருவருக்குள்ள திறன்மீதான தன்னம்பிக்கையானது, ஜனநாயகச் செயன்முறையில் ஈடுபடுவதற்கும் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கும் பிரஜைகளுக்குள்ள விருப்பு தொடர்பில் பிரதான பங்கினை வகிக்கின்றது (அபெர்பக், 1969; படில்லா மற்றும் பலர், 2020). இலங்கையில் இவ்விடயத்தினைப் புரிந்துகொள்வதற்கு, SLB சமூக மற்றும் அரசியல் பிரச்சனைகளில் ஈடுபடுவதற்குத் தனிநபர்கள் எந்தளவிற்கு அறிவானவர்களாகவும், தன்னம்பிக்கையுடனும் உணர்கின்றார்கள் என்பதனை அளவிடுகின்ற ஒன்றிணைந்த குறிகாட்டிகளைப் பயன்படுத்தி, உள்ளக அரசியல் வினைத்திறனினை அளவிடுகின்றது. இக்குறிகாட்டியானது சமூக மற்றும் அரசியல் முடிவுகளில் செல்வாக்குச்செலுத்துவதற்கான அர்த்தமுள்ள முறையாக வாக்களிப்பதனைக் கருதுவதுதொடர்பில் பிரஜைகளின் மனப்பாங்கினையும் அளவீடுசெய்கின்றது.

2025இல் பெற்றுக்கொள்ளப்பட்ட SLBஇன் தரவுகளானவை உள்ளக அரசியல் வினைத்திறன் மிதமாக அதிகரித்து மேம்பட்டு வருவதனைக் காட்டுகின்றன. அந்தவகையில் 2023இலிருந்து தேசியளவிலான சராசரிப் புள்ளி 0.6 புள்ளிகளால் அதிகரித்து 2020இல் முதன்முதலில் பதிவுசெய்யப்பட்ட புள்ளியினை சற்றே தாண்டிச் செல்வதனை அவதானிக்கமுடிகிறது (உரு 16). இந்த மேல்நோக்கிய போக்கானது அரசியல் கட்டமைப்புக்களில் ஈடுபடுவதற்குப் பிரஜைகள்மத்தியில் அவர்களுக்கிருக்கும் நம்பிக்கை அதிகரித்துவருவதனையே காட்டுகின்றது. இது 2024இல் இடம்பெற்ற தீர்மானகரமான தேர்தலின் தாக்கமாக இருக்கலாம். இத்தேர்தலின் முடிவுகள் மக்களின் தெரிவுகளை நேரடியாகப் பிரதிபலித்ததுடன் தம்மால் கட்டமைப்புரீதியான மாற்றத்தினை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையினை மக்கள் மத்தியில் வலுப்படுத்தியிருந்தன.

அரசியல் வினைத்திறனில் அவதானிக்கப்பட்ட இவ் அதிகரிப்பானது பெண்கள் மற்றும் ஆண்கள் மத்தியிலும் முறையே 0.6 மற்றும் 0.5 புள்ளிகளால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆயினும், பெண்கள் தொடர்ந்தும் ஆண்களைவிடவும் குறைந்தளவிலான அரசியல் வினைத்திறனையே பதிவுசெய்திருப்பதுடன், அவர்களது புள்ளிகள் தேசியரீதியான சராசரியினைவிடவும் குறைவானதாகவே தொடர்கின்றது (உரு 16). இவ்வேறுபாடானது பெண்கள் மத்தியில் செயல்முனைப்புள்ள பிரஜைகள் தொடர்பான அளவுமட்டங்களும், 2025இல் 2.4 புள்ளிகளைக் கொண்டிருந்த ஆண்களுடன் ஒப்பிடும்போது பெண்கள் 1.7ஐக் கொண்டிருந்ததுடன், குறைவானதாகக் காணப்படுவதனை விபரிப்பதற்கும் உதவக்கூடும் (பிரிவு 5.2இனையும் பார்க்கவும்). பல்வேறுபட்ட காரணிகள் இவ்இடைவெளிக்குப் பங்களிப்புச் செய்கின்றன: இலங்கையில் அரசியல் அதிகாரமானது, வரலாற்றுரீதியாக ஆண்மையுடன் தொடர்புபட்டதாக இருந்துவருவது மட்டுமமன்றி பெரும்பாலும் ஆண்களின் கைகளிலும் இருந்துவருகின்றது, இது அரசியல் வெளிகளிலிருந்து பெண்கள் கட்டமைப்புரீதியாக புறந்தள்ளப்படுவதனைப் பிரதிபலிக்கின்றது (தேசிய ஜனநாயக நிறுவகம், 2023). உலகளாவியரீதியில் இலங்கைப் பெண்களே தேசிய சட்டமன்றத்தில் மிகக்குறைந்தளவில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுபவர்களாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றனர் (குளோபல் எகொனமி, 2023), அத்துடன் அரசியலில் பங்குபற்றுவதில் குறிப்பிடத்தக்க கட்டமைப்புரீதியான மற்றும் சமூகத் தடைகளை எதிர்கொள்கின்றனர் (அத்துகோரல மற்றும் பலர், 2022). இத்தடைகள் ஆழமாக வேரூன்றியிருக்கும் ஆணாதிக்க நியமங்களினாலும், புறக்கணிக்கும் அரசியல் நிறுவனங்களினாலும், பெரும்பாலும் பொதுவாழ்வில் பெண்களை இலக்குவைத்துப் பரப்பப்படும் பால்நிலையினை அடிப்படையாகக்கொண்ட போலியான தகவல்கள் மற்றும் பெண்வெறுப்பு மனப்பாங்குகள் போன்றவற்றினால் மீளவலியுறுத்தப்படுகின்றன (உலக சுகாதார நிறுவகம், 2018; சர்வதேச சிவில் சமூக செயற்பாட்டு வலையமைப்பு, 2013; பெண்கள் சமாதானமும் பாதுகாப்பும் உதவிமையம், 2022). ஆயினும், 2023இல் 5.3%ஆகப் பதிவுசெய்யப்பட்டிருந்த பெண்களின் பிரதிநிதித்துவத்தின் விகிதாசாரமானது ஏறக்குறைய 10.2%ஆக, இருமடங்கு அதிகரித்து 2024இல் 21 பெண்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டதுடன் இதுதொடர்பில் அளவிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகின்றது (ஸ்ரீ லங்கா ப்றீவ், 2024).

உரு 16: உள்ளக அரசியல் வினைத்திறன், தேசியளவிலும் பால்நிலைரீதியாகவும், சராசரி, 2020-2025



2023 மற்றும் 2025இற்கிடைப்பட்ட காலப்பகுதியில் சராசரிப் புள்ளி மாற்றமடையாமல் இருக்கும் வடமத்திய மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களிலும் உள்ளக அரசியல் வினைத்திறன் தேசியளவிலான அதிகரிக்கும் போக்கினையே பிரதிபலிக்கின்றன. ஆயினும், காலப்போக்கில் மேலும் நுட்பமான தகவல்களை வெளிப்படுத்துகின்றன: 2020இலிருந்து மேற்கு, மத்திய,கிழக்கு மற்றும் சபரகமுவ மாகாணங்களில் புள்ளிகள் ஒட்டுமொத்தமாக அதிகரித்திருக்கின்றன, ஆயினும் அவை ஏனைய அனைத்து மாகாணங்களிலும் முன்னர் பதிவுசெய்யப்பட்ட அளவுகளைவிட குறைவானவையாகவே இருந்துவருகின்றன (உரு 17). 2025இல் மிகவும் உயர்வான (சராசரிப் புள்ளி 7.2உடன்) உள்ளக அரசியல் வினைத்திறனானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது. இது இப்பகுதிகளில் அவதானிக்கப்பட்ட சராசரிக்கும் அதிகமான செயல்முனைப்புள்ள பிரஜைகளுடன் தொடர்புபட்டதாக இருக்கக்கூடும் (பிரிவு 5.2இனைப் பார்க்கவும்).

உரு 17: உள்ளக அரசியல் வினைத்திறன், தேசியளவிலும் மாகாணரீதியாகவும், சராசரி, 2020-2025



ஆயினும், இத்தகைய உள்ளார்ந்த நம்பிக்கையானது அரசியல் செயலாண்மை தொடர்பான கண்ணோட்டங்களுடன் பொருந்தவில்லை. அரசியல் செயலாண்மை என்பது தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்துவதற்கு, பொறுப்புக்கூறுதலைக் கோருவதற்கு மற்றும் ஆட்சித் தீர்மானங்களை வடிவமைப்பதற்கு ஒரு நபருக்கு அல்லது ஒரு குழுவிற்கு இருக்கக்கூடிய திறனைக் குறிப்பிடுகின்றது. இது அரசியல் நிறுவனங்களின் வெளிப்படைத்தன்மை, காணப்படும் சமூக நியமங்கள் மற்றும் காணப்படும் அதிகார வேறுபாடுகள் போன்றவற்றினால் செல்வாக்குச் செலுத்தப்படுகின்ற பல்பரிமாணமுள்ள ஒரு கருத்தியலாகும் (டால், 1971; சென், 1999). 2025இல் அரசியல் செயலாண்மையினை அளவிடுவதற்கு SLBஆனது புதியதொரு குறிகாட்டியினை அறிமுகஞ்செய்திருக்கின்றது. இது அரசியல்வாதிகள் மக்களின் கருத்துக்களுக்கு செவிமடுக்கின்றார்கள், சமூகத்தின் தேவைகளுக்காக ஆதரித்து வாதாடுகின்றார்கள், மக்களின் விருப்பங்களுடன் உடன்படுவதாக எந்தளவிற்கு மக்கள் நம்புகின்றார்கள் எனக்கேட்கின்றது. இக்கண்ணோட்டங்கள் ஜனநாயக கட்டமைப்பிற்குள் தமது குரல்களையும் கேட்கச்செய்வதன்மூலம் தனிநபர்கள் அரசியற் செயன்முறைகளில் தமது செல்வாக்கினை எவ்வாறு மதிப்பிடுகின்றார்கள் என்பது தொடர்பான விடயங்களை முன்வைக்கின்றது.

2025இல் அரசியல் செயலாண்மை தொடர்பான தேசியளவிலான சராசரிப் புள்ளியானது 4.3ஆக ஓரளவிற்கு குறைவானதாக இருந்தது (உரு 18). அரசியல் செயலாளுமைக்கான குறைந்தளவிலான சராசரிப் புள்ளிகள் மலையகத்தமிழர்கள் (3.8) மத்தியில் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன - இது தேசியளவிலான சராசரியினைவிடக் குறைந்ததாக இருக்கின்ற அதேவேளை, உயர்ந்தளவிலான சராசரிப் புள்ளிகள் முஸ்லிம்கள் (4.8) மத்தியில் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. மலையக மக்கள் மத்தியில் இத்தகைய குறைந்தளவிலான புள்ளிகளுக்குக் காரணங்களாக, மலையக மக்களின் வரலாற்றுரீதியான ஒடுக்குமுறை மற்றும் முறைசார் அரசியற் கட்டமைப்புக்களில் தொடர்ந்தும் குறைந்தளவிலான பிரதிநிதித்துத்தினைக் கொண்டிருத்தல் போன்றவை இருக்கக்கூடும் (நாடற்றிருத்தல் மற்றும் உள்வாங்குதலுக்கான சர்வதேச நிறுவகம், 2018; ராமசாமி, 2022; மீநிலங்கோ மற்றும் பலர், 2025).

சுவாரஷ்யமானமுறையில் பதிலளித்தோரில் 56.3%ஆனோர் நாட்டில் அதிகளவிலான அரசியல் அதிகாரமுள்ள ஒரு குழுவான சிங்களப் பெரும்பான்மையினராகத் தம்மை அடையாளப்படுத்தியிருந்தபோதும் - அரசியல் செயலாண்மைக்கான சராசரிப் புள்ளிகள் இலங்கைத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களைவிடவும் சிங்களவர்கள் மத்தியில் குறைவானதாகக் காணப்படுகின்றது.[8] இம்முரண்பாடானது, வெளிப்புறமாகத் தொடர்புபடுத்தப்படுகின்ற கட்டமைப்புரீதியான அதிகாரத்திற்கும், தமது செல்வாக்குச்செலுத்தும் தன்மைதொடர்பான தனிநபர் கண்ணோட்டங்களுக்குமிடையிலான வேறுபாட்டினைச் சுட்டிக்காட்டுகின்றது.

உரு 18: அரசியல் செயலாண்மை, தேசியளவிலும் இனரீதியாகவும், சராசரி, 2025



8 மற்றுமொரு SLB குறிகாட்டியானது, நாட்டில் எந்தக்குழு அதிகளவான அரசியல் அதிகாரத்தினைக் கொண்டிருப்பதாக அவர்கள் நம்புகின்றார்கள் எனும் ஒரு திறந்தமுனைக் கேள்வியினை முன்வைத்தது. 2025இல் 56.3% ஆனோர் சிங்களப் பெரும்பான்மையினராகவும், 27.6% ஆனோர் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த சிறியளவிலான மேட்டுக்குடியினரையும், 11.4%ஆனோர் சிங்கள மேட்டுக்குடியினரையும், 1.9%ஆனோர் அனைத்து மதங்களையும் சேர்ந்த மதத்தலைவர்களையும், 1.5%ஆனோர் சிறியளவிலான தமிழ் மேட்டுக்குடியினரையும், 1.2%ஆனோர் சிறியளவிலான முஸ்லிம் மேட்டுக்குடியினரையும் அடையாளப்படுத்தினர்.

உள்ளக அரசியல் வினைத்திறன் மற்றும் அரசியல் செயலாண்மை (2025இல் தேசியளவில் முறையே 6.7 மற்றும் 4.3) ஆகியவை தொடர்பான கண்ணோட்டங்களில் காணப்படும் இடைவெளியானது, மக்களுக்கு தமது அரசியல் திறன் தொடர்பில் காணப்படும் நம்பிக்கைக்கும் அரசியல் தீர்மானங்களில் செல்வாக்குச்செலுத்துவதில் தமக்குள்ள இயலுமையினை மதிப்பிடுவதற்குமிடையில் உள்ள பிளவினைக் காட்டுகின்றது. ஏனைய குறிகாட்டிகளினூடாகச் சுட்டிக்காட்டப்பட்ட மீளப்புதுப்பிக்கபட்ட பொதுமக்களின் நம்பிக்கைக்கு மத்தியிலும்கூட - இது அர்த்தமுள்ள அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பில் தொடரும் விமர்சனங்களைப் பிரதிபலிக்கக்கூடும் - அத்துடன் இது எதிர்கொள்ளாமல் விடப்படுகையில் இது ஜனநாயக ஈடுபாட்டினைப் பலவீனப்படுத்தக்கூடும்.

அரசியல் செயலாண்மை தொடர்பான குறிகாட்டியானது 2025இலேயே அறிமுகம் செய்யப்பட்டமையினால், காலவோட்டத்தில் அதன் போக்குகளை இப்போதைக்கு பகுப்பாய்வு செய்ய முடியாது. ஆயினும், வெளியக அரசியல் வினைத்திறன் போன்ற இணையான அளவீடுகள் மேலும் தகவல்களை வழங்குகின்றன. வெளிப்புற அரசியல் வினைத்திறனென்பது பொதுமக்களின் பங்களிப்புச்செய்யும்தன்மையில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அரசாங்கத்தின் பதிலளிக்கும்தன்மை குறித்த பிரஜைகளின் மதிப்பீட்டினை அடிப்படையாகக்கொண்டதாகும் (பிற்கின், 1967; பொவெல், 2004; டிஷ், 2011; சயாசன் மற்றும் பலர், 2013). வெளிப்புற அரசியல் வினைத்திறனின் அளவானது தொடர்ந்தும் ஒப்பீட்டளவில் அதிகமானதாகக் (2025இல் சராசரிப்புள்ளி 7.3) காணப்படுகின்ற அதேவேளை, புள்ளிகள் தேசிய அளவிலும் ஊவா தவிர்ந்த ஏனைய மாகாணமட்டத்திலும் சரிவடைந்துள்ளன (உரு 19). 2010இலிருந்து ஒட்டுமொத்தமான வீழ்ச்சியினை கிழக்குமாகாணம் (1.6 புள்ளியினால்) காட்டுவதுடன் காலவோட்டத்தில் கீழ்நோக்கிய போக்கு தொடர்கின்ற அதேவேளை, 2023இலிருந்து பதிவுசெய்யப்பட்ட துரிதமான வீழ்ச்சியானது வடமாகாணத்தில் (1.0 புள்ளியினால்) பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது. ஒப்பீட்டளவில், ஏனைய மாகாணங்களில் காலப்போக்கில் மேற்கொள்ளப்பட்ட அளவீடுகளின் புள்ளிகள் மாறுபடுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படும் மிகத்தெளிவான வீழ்ச்சியானது, வரலாற்றுரீதியாக புறக்கணிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் தேவைகளுக்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அரசின் இயலுமை தொடர்பில் மக்களின் நம்பிக்கையில் தெளிவான வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதனை எடுத்துக்காட்டுகின்றது.

உரு 19: அரசின் பதிலளிக்கும்தன்மை, தேசியளவிலும் மாகாணரீதியாகவும், சராசரி, 2020-2025



2025இல் இக்குறிகாட்டியினை அளவிடுவதற்கான விடயங்கள் முன்னர் அளவிடப்பட்ட உள்ளூர் அரச நிறுவனங்களுக்கும் (பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் கிராம சேவையாளர் அலுவலகங்கள்) மேலதிகமாக தேசிய அரசாங்கத்தையும் இணைத்து விரிவுபடுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இம்மாற்றமானது அரசின் பதிலளிக்கும்தன்மை தொடர்பான புள்ளிகளில் அவதானிக்கத்தக்க மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. இரண்டு முறைகளிலும் சராசரிப் புள்ளியானது குறைவாக இருந்த அதேவேளை, தேசிய அரசாங்கம் குறித்த விடயத்தினை உள்வாங்கியிருந்தமையானது 7.6இலிருந்த தேசிய சராசரிப் புள்ளியினை 7.3ஆக மேலும் வீழ்ச்சியடையச்செய்திருக்கின்றது. இது பிரஜைகள் உள்ளூராட்சியுடன் தொடர்புபட்ட அரசநிறுவனங்களைவிட தேசிய மட்டத்திலான நிறுவனங்களை அணுகுமுடியாதவைகளாகவும், குறைந்தளவிலான பதிலளிக்கும்தன்மை கொண்டவையாகவும் கருதுவதனை எடுத்துக்காட்டுகின்றது. இவ் உணர்வானது அண்மையிலுள்ள அணுகுவதற்குச் சாத்தியமான உள்ளூர் அமைப்புக்களுடன் ஒப்பிடும்போது ஒப்பீட்டளவில் தேசிய அரசாங்கத்தினை அணுகுவதிலுள்ள மட்டுப்பாடுகள் மற்றும் அதிகரித்த தூரம் போன்றவற்றினால் செல்வாக்குச்செலுத்தப்படக்கூடும்.

(உள்ளக மற்றும் வெளிப்புற) அரசியல் வினைத்திறன் மற்றும் அரசியல் செயலாண்மை தொடர்பான SLBஇன் கண்டடைவுகளானவை நுட்பமான பார்வையினை வழங்குகின்றன. அரசியல்ரீதியாக ஈடுபடுவதற்கான தமது இயலுமை தொடர்பில் பிரஜைகளின் நம்பிக்கை அதிகரித்துவருவதனை ஆய்வுகள் காட்டுகின்ற அதேவேளை, அரசியல் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்துவதற்கான அவர்களின் இயலுமை தொடர்பான மதிப்பீடு குறைவானதாகக் காணப்படுகின்றது, அத்துடன் ஒட்டுமொத்தமாக புள்ளிகள் தொடர்ந்தும் அதிகமானதாகவே காணப்படினும், 2025இல் அரசநிறுவனங்கள் ஓரளவுக்கு குறைவான பதிலளிக்கும் தன்மையினைக் கொண்டிருப்பதாகவும் பார்க்கப்படுகின்றது. இவ்வேறுபாடானது பிரஜைகளின் ஈடுபாடு ஏற்படுத்தக்ககூடிய மாற்றத்தினை எடுத்துக்காட்டும் 2024இல் ஏற்பட்ட பரவலான அரசியல் மாற்றத்தினைப் பிரதிபலிக்கக்கூடும், அதேவேளை இவ் ஈடுபாட்டினை அரச தீர்மானங்களாக மாற்றுவதற்கும், அரச நிறுவனங்களின் பதிலளிக்கும்தன்மையினை எடுத்துக்காட்டுவதற்கும் பாரிய முயற்சி தேவையாக இருக்கின்றதென்பதையும் எடுத்துக்காட்டுகின்றது.

5.2. அரசியல் ஈடுபாட்டிற்கான ஊக்கம்

2022இன் பொருளாதார நெருக்கடி மற்றும் அரகலய இயக்கம் போன்றவை இலங்கையில் குடிமக்களின் பங்குபற்றுதலுக்கான இன்றியமையாத தருணமாக அமைந்தது, இது ஒன்றுதிரள்வதற்கும் அரசியல் மாற்றத்தினைக் கோருவதற்கும் பொதுமக்களுக்கு இருக்கும் திறனினை எடுத்துக்காட்டுகின்றது (ப்ரீடம் கௌஸ், 2022; CPA, 2023a). ஆயினும், இவ்இயக்கமானது ஜனாதிபதியை பதவியிலிருந்து அகற்றுவதற்கு வழிகோலியபோதும் பல கட்டமைப்புரீதியான மாற்றங்கள் தொடர்ந்தும் நிறைவேற்றப்படாதவையாகவே இருந்துவருகின்றன. இது தொடர்ந்தும் பிரஜைகளின் தலையீட்டினைப் பேணுவதற்கான நிறுவனரீதியான பொறிமுறைகள் மட்டுப்பட்டிருக்கின்றமை உள்ளடங்கலாக ஆழமான ஜனநாயகரீதியான சவால்களைப் பிரதிபலிக்கின்றன. அந்தவகையில் அரகலாயாவானது கூட்டுச்செயற்பாட்டின் விளைவினையும், அர்த்தமுள்ளவிதத்தில் அமைந்த பங்குபற்றுதலுடன்கூடிய ஆட்சியினை ஏற்படுத்துவதிலிருக்கும் சவால்கள் ஆகிய இரண்டினையும் சுட்டிக்காட்டுகின்றது.

இந்த அழுத்தங்கள் காலப்போக்கில் அரசியல் ஊக்கம் மற்றம் ஈடுபாடு மாறுபடும் போக்கினைப் பிரதிபலிக்கின்றன. 2022இல், SLBயானது, சனத்தொகையில் அரைவாசிக்கும் (50.3%) மேற்பட்டோர் பொருளாதார நெருக்கடிக்குப் பதிலளிக்கும் முகமாக அரசியலில் ஈடுபடுவதற்கான ஊக்கத்தைக் கொண்டிருந்தனர் (உரு 20). ஆயினும், அதனைத் தொடர்ந்துவந்த கண்டுபிடிப்புக்கள், 20.7%ஆனோர் மட்டுமே அரசியலில் ஈடுபடுவதற்கான ஊக்கம் அதிகரித்திருப்பதாக அறிக்கையிட்டிருப்பதனை வெளிப்படுத்துவதும் அதேவேளை, குறிப்பிடத்தக்க அளவில் 67.3%ஆனோர் அரசியலிலிருந்து விலகியிருப்பதையும் காட்டுவதானது 2023 அளவில் இந்தத்தருணம் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைந்துவிட்டதைக் காட்டுகின்றது. அரசியலிலிருந்து விலகியிருக்கும் நபர்களின் விகிதாசாரம் 50.1%ஆகக் குறைந்து, 35.2%ஆனோர் அரசியலில் ஈடுபடுவதற்கு அதிகளவிலான ஊக்கத்தைக் கொண்டிருப்பதாக (இது கொஞ்சம் அதிகமான ஊக்கத்தைக் கொண்டிருத்தல் மற்றும் மிகவும் அதிகமான ஊக்கத்தைக் கொண்டிருத்தல் ஆகிய இரண்டு எண்ணிக்கைகளையும் ஒன்றிணைத்துப் பெறப்பட்ட தொகை) அறிக்கையிட்டிருப்பதுடன் இப்போக்கானது 2025இல் மீண்டும் மாறியிருக்கின்றது.

அரசியல்ரீதியான பொறுப்புக்கூறலுக்கும், உள்வாங்குதலுடன்கூடிய ஆட்சிக்கும் பிரஜைகளின் பங்குபற்றுதல் இன்றியமையாததாக இருக்கின்ற ஜனநாயகத்திற்கு இத்தகைய ஈடுபாடின்மையானது சவாலானதாக இருக்கின்றபோதும், 2025இல் மீண்டும் இதிலேற்பட்டுள்ள அதிகரிப்பானது பொதுவாகவே அதிகளவிலான பொதுமக்களின் ஈடுபாட்டுடன் தொடர்புடைய நிகழ்வுகளான 2024இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் ஆகிய இரண்டுடனும் தொடர்புபட்டதாக இருக்கக்கூடும் (எக்ஸ்டெய்ன் மற்றும் பலர், 2024). ஆயினும் இரண்டு தேர்தல்களிலும் வாக்காளர் வருகையானது முன்னர் இடம்பெற்ற தேர்தல்களைவிடவும் குறைவானதாக இருந்தது (சில்வா, 2025), இது வாக்காளர்கள்மத்தியில் நம்பிக்கையினையும் ஆர்வத்தினையும் கட்டியெழுப்புவதில் தொடரும் சவால்களைக் காட்டுகின்றது.

உரு 20: தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக அரசியலில் ஈடுபடுவதற்கான ஊக்கம், தேசியளவில், %, 2022-2025[9]



வெவ்வேறுபட்ட வயதுக்குழுக்களைச் சேர்ந்தோரில் அரசியல்ரீதியான ஈடுபாட்டிற்கான ஊக்கம் தொடர்பில் மேலும் நெருக்கமாகப் பார்க்கும்போது, 39.8%ஆனோர் அரசியல்ரீதியாக ஈடுபடுவதற்கு ஓரளவிற்கு அதிகம் அல்லது மிகஅதிகளவில் ஊக்கமடைந்தவர்களாகக் குறிப்பிடுவதுடன், 2025இல் 18-30 வயதுவரையான இளம்வயதுவந்தோரே அதிக ஊக்கமடைந்தோராகக் காணப்படுகின்றனர் (உரு 21). 46.1% ஆக உயர்ந்தளவில் இருக்கின்றபோதும், இந்தக்குழுவே குறைந்தளவான ஈடுபான்மையினையும் வெளிப்படுத்தியிருக்கின்றது. 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினையுடைய இலங்கையர்கள் 63.2%ஆன மிகவும் அதிகளவிலான ஈடுபாடின்மையினை வெளிப்படுத்துவதுடன், வயது அதிகளவான குழுக்களைச் சேர்ந்தோர் மத்தியில் ஊக்கமானது மேலும் படிப்படியாகக் குறைவடைவதனைத் தரவுகள் காட்டுகின்றன. இப்போக்கானது வயதுமுதிர்ந்த மக்கள்தொகையானது நீண்டகால அதிருப்தி மற்றும் பங்குபற்றுவதில் காணப்படக்கூடிய கட்டமைப்புரீதியான தடைகள் போன்றவற்றின் காரணமாக, அரசியற் செயன்முறைகளிலிருந்து மிகவும் விலகியநிலையில் உணரக்கூடும் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. அவை தலைமுறைரீதியான வேறுபாடுகளையும், 2024இல் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினைத் தொடர்ந்து பாரம்பரியமான அரசியற் கட்சிகளின் செல்வாக்கு குறைவடைந்தமையினால், குடும்ப ஆட்சி மற்றும் அரசியல்வாதிகளுக்கும் கட்சிகளுக்கும் மிகவும் விசுவாசமுடையவர்களாக இருக்கும் ஒரு காலகட்டத்தினால் செல்வாக்குச்செலுத்தப்படுகின்றவர்களான வயதுமுதிர்ந்த தலைமுறையினரில் ஏற்பட்ட தாக்கம் போன்றவற்றினையும் பிரதிபலிக்கக்கூடும் (ஆமர், 2024; ஜயசுந்தர - ஸ்மிற்ட்ஸ், 2022).

உரு 21: தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக அரசியலில் ஈடுபடுவதற்கான ஊக்கம், தேசியளவிலும் வயதுரீதியாகவும், %, 2025



2025இல் அரசியல்ரீதியான ஈடுபாட்டிற்கான ஊக்கம் புதுப்பிக்கப்பட்டமையானது, 1 தொடக்கம் 10 வரையான அளவுகோலில் இன்னும் குறைவான நிலையிலேயே இருந்தாலும், சராசரிப் புள்ளியானது 1.1இலிருந்து 2.1ஆக 1.0 புள்ளியினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருப்பதுடன், தேசியளவில் செயல்முனைப்புள்ள பிரஜைகளில் ஏற்பட்ட இவ்அதிகரிப்பில் பிரதிபலிக்கப்படுகின்றது. சிறுபான்மை இனக்குழுக்களைச் சேர்ந்தோர் சிங்களப் பெரும்பான்மையினரைவிடவும் அதிகளவிலான செயல்முனைப்புள்ள பிரஜைகளாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றனர் (உரு 22). வெவ்வேறுபட்ட வாழ்வியல் அனுபவங்கள், குறிப்பாக வரலாற்றுரீதியான முரண்பாடுகளினால் ஏற்பட்ட வாழ்வியல் அனுபவங்கள் அரசியல் ஈடுபாட்டின் போக்குகளில் குறிப்பிடத்தக்க செல்வாக்கினைச் செலுத்துவதாக ஆய்வுகள் கூறுகின்றன (அஸ்மி மற்றும் பலர், 2015). இத்தோற்றப்பாடு இலங்கைத் தமிழர்கள் மத்தியில் உண்மையானதாகக் காணப்படுகின்றது. இவர்களின் அரசியல் செயல்வாதம் பெரும்பாலும் வடகிழக்கு மாகாணங்களிலேயே மையப்படுத்தப்பட்டுள்ளமையானது யுத்தகாலத்திலும் அதற்குப் பிந்திய காலங்களிலும் மக்களின் மனக்குறைகளை எதிர்கொள்வதனை வரலாற்றுரீதியான நோக்காகக் கொண்டதாக இருந்துவருகின்றது (திரானகம, 2011; சில்வா மற்றும் பலர், 2018). இலங்கைத் தமிழர்கள்மத்தியில் செயல்முனைப்புள்ள பிரஜைகளுக்கான சராசரிப்புள்ளியானது 2025இல் 3.0ஆக இருக்கின்றது (உரு 23). இது தேசியரீதியான சராசரிப்புள்ளியினை 1.0 புள்ளியினால் கடந்து இதேபோன்று அதிகரித்த புள்ளிகளைக்கொண்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இணையாகக் காணப்படுகின்றது (உரு 23).

9 இக்குறிகாட்டிக்கான தரவுச்சேகரிப்பானது, துரிதமுறைக் (Snapshot) கருத்தாய்வுடன் 2022இல் ஆரம்பிக்கப்பட்டது. 2022இல் மேற்கொள்ளப்பட்ட இத் துரிதமுறைக் கருத்தாய்வின் குறைந்தளவிலான மாதிரி அளவினைக் கருத்தில்கொள்ளும்போது, பின்னர் மேற்கொள்ளப்பட்ட கருத்தாய்வுகளுடன் ஒப்பிடுவதற்காக தரவு மீள்மதிப்பீடுசெய்யப்பட்டது.

உரு 22: செயல்முனைப்புள்ள பிரஜைகள், தேசியளவிலும் இனரீதியாகவும், சராசரி, 2020-2025



உரு 23: செயல்முனைப்புள்ள பிரஜைகள், தேசியளவிலும் மாகாணரீதியாகவும், சராசரி, 2020-2025



5.3. சுருக்கம்

குடிமக்களின் ஈடுபாடு தொடர்பில் 2025ம் ஆண்டின் SLBஇன் தரவுகளிலிருந்து தோன்றும் போக்குகளானவை, இலங்கையின் மாறுபடும் அரசியல் பரப்பு தொடர்பான பார்வைகளை முன்வைக்கின்றன. அரசியற் செயன்முறைகளில் ஈடுபடுவதற்கான மக்களின் வலுவும் அதற்கான அவர்களது திறன்மீதான நம்பிக்கையும் படிப்படியாக அதிகரித்திருப்பதோடு (உள்ளக அரசியல் வினைத்திறன்) 2024 இடம்பெற்ற அரசியல் மாற்றத்தினால் மக்களின் அரசியல் ஈடுபாட்டிற்கான ஊக்கமும் புதுப்பிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அரச நிறுவனங்களின் பதிலளிக்கும்தன்மை தொடர்பான கண்ணோட்டங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையானது (வெளிப்புற அரசியல் வினைத்திறன்) இருவேறு யதார்த்தங்களைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. மேலும், பொதுமக்களின் குரல்கள் கொள்கைகளாக செயலுருப்பெறுவதை உறுதிசெய்வதிலும் (அரசியல் செயலாண்மை) சவால்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் போன்ற வரலாற்றுரீதியாக குறைந்தளவு பிரதிநிதித்துவத்தினைக் கொண்டிருக்கும் பிராந்தியங்களிலுள்ள வேறுபட்ட அனுபவங்கள் வரலாற்றுரீதியான மனக்குறைகள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட அரசியல் அபிலாசைகள் ஆகியவற்றுக்கிடையிலான சிக்கலான உறவினை எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கை முன்னோக்கிச்செல்கையில், நேர்மறையான தருணத்தினைப் பேணுவதற்கு குடிமக்களின் பங்குபற்றுதலுக்கான தன்னம்பிக்கையினை மேம்படுத்துவது மட்டுமே போதுமானதாக இருக்காது, ஈடுபாடுள்ள பிரஜைகளின் எதிர்பார்ப்புக்களுக்கு நிகராக அரசின் பதிலளிக்கும்தன்மை இருப்பதனை உறுதிப்படுத்துவதும் அவசியமாகும்.

இப்பகுதியில் முன்வைக்கப்பட்ட SLBஇன் தரவுகளானவை, நெருக்கடியான நேரங்களிலோ அல்லது தேர்தல் காலங்களிலோ மட்டுமல்லாது போதிய கட்டமைப்புகளாலும் சாத்தியப்படுத்துகின்ற சிவில் வெளிகளாலும் நிலையாகப் பேணப்படும் தொடர்ச்சியான ஜனநாயகச் செயன்முறைகளில் அர்த்தமுள்ளவிதத்தில் பங்குபற்றக்கூடிய வலுப்பெற்ற பிரஜைகளே அரசியல் ஈடுபாட்டிற்குத் தேவையாக இருப்பதனை மீளவலியுறுத்துகின்றன.

6. முடிவுரை

6. முடிவுரை

2025ம் ஆண்டிற்குரிய கருத்தாய்வின் பெறுபேறுகள், அரசியல் மாற்றத்தின் மத்தியில் நல்லிணக்கத்தின் தற்போதுள்ள நிலைதொடர்பில் மக்கள் எவ்வாறு நோக்குகின்றார்கள் நல்லிணக்கத்தினை முன்னோக்கி நகர்த்துவதுடன் தொடர்புடைய ஆட்சிச் சட்டகங்கள், கட்டமைப்புக்கள் மற்றும் வெளிகள் தொடர்பான அவர்களது பார்வைகள் நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கு தமக்கிருக்கும் ஆற்றல் மற்றும் செல்வாக்கு குறித்த அவர்களது மதிப்பீடு போன்றவை தொடர்பான முக்கியமானதும் தனித்துவமானதுமான தகவல்களை வழங்குகின்றன.

இம்மூன்று கருப்பொருட் பரப்புக்களுக்குள்ளும், 2025ம் ஆண்டிற்கான கருத்தாய்வின் பெறுபேறுகளிலும் சில விடயங்களில் குழப்பம்நிலவுவது தெளிவாகத் தெரிகின்றது. தொடர்ச்சியான சந்தேகத்தின் மத்தியிலும் பொதுமக்களின் அபிலாசைகளும், மாற்றத்திற்கான எதிர்பார்ப்புக்களும் அதிகரித்துள்ளமை, நல்லிணக்கம் தொடர்பான பிராந்தியரீதியான மற்றும் சமூகரீதியான அனுபவங்களிலுள்ள வேறுபாடுகளுக்கு மாறான ஒன்றுபட்ட தேவைகளும் முன்னுரிமைகளும், பிரஜைகளின் செல்வாக்கு மற்றும் நிறுவனங்களின் பதிலளிக்கும்தன்மை தொடர்பான சந்தேகங்களினால் மட்டுப்படுத்தப்படுகின்ற அதிகரித்துவரும் அரசியல் நம்பிக்கை போன்றவற்றினை உள்ளடக்குகின்றது.

இவ் அவதானங்கள் எதிர்பார்ப்புடைய அதேவேளை எச்சரிக்கையுடன்கூடிய நம்பிக்கையினைக் கொண்டிருக்கின்ற அதேவேளை நீண்டகால அரசியல் மற்றும் கட்டமைப்புரீதியான மட்டுப்பாடுகள் தொடர்பில் அறிந்திருக்கின்ற பொதுமக்களைச் சுட்டிக்காட்டுகின்றது.

இக்குழப்பங்களின் மத்தியிலும், SLBஇன் கண்டடைவுகள் நல்லிணக்கத்தினை முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கும், அரசியல் கட்டமைப்புக்களிலும் நிறுவனங்களிலும் நம்பிக்கையினை (மீளக்)கட்டியெழுப்புவதற்கும், உள்வாங்குதலுடன்கூடிய பொதுமக்கள் பங்குபற்றுதலை ஊக்குவிப்பதற்கும் உருவாகிவரும் வாய்ப்புக்களையும் நீண்டகாலமாக நிலவிவரும் சவால்களையும் சுட்டிக்காட்டுகின்றது.

Yusuf, S. (2017). *Generating Empathy, Restoring Dignity: The Curious Case of Sri Lanka.* South Asia Democratic Forum, SADF Focus, No.30. Available at: https://www.sadf.eu/wp-content/uploads/2017/02/30-FOCUS.N.30.Generating-Empathy-Restoring-Dignity_-Curious-Case-of-Sri-Lanka_.pdf

பின்னிணைப்பு

பின்னிணைப்பு 1 - நல்லிணக்கத்தின் எட்டுப் பரிமாணங்கள்

SLBஇன் கருத்தியல்ரீதியான கட்டமைப்பானது கல்வியாளர்கள், நிபுணர்கள் மற்றும் சமூகமட்ட ஆலோசனைகள் மற்றும் SLB கருத்தாய்வின் முதல் கருத்தய்வுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும். குறித்த கட்டமைப்பானது இவ்விடயங்களை உள்ளடக்கியதாக நல்லிணக்கத்தின் எட்டு கருத்தியல் பரிமாணங்களைக் (அல்லது பகுதிகளை) கொண்டுள்ளது. ஒவ்வொரு பரிமாணமும் பல உப பரிமாணங்களைக் கொண்டிருப்பதோடு அவ் உபபரிமாணங்கள் பல்வேறுபட்ட சமூகக் குறிகாட்டிகளைக் கொண்டுள்ளன. இக்குறிகாட்டிகள் முக்கிய எண்ணக்கருக்கள் மீதான மக்களின் பார்வைகளின் உண்மையான அளவீட்டினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் பல்வேறு கருப்பொருள் பகுதிகளில் அளவுசார் பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கான அடிப்படையையும் வழங்குகின்றன.

பரிமாணங்கள்	பரிமாணங்களை நடைமுறைப்படுத்தல்	கருத்தாய்வின் குறிகாட்டிகள்
1. கடந்த காலத்தைக் கையாளுதல்	அனைத்து இலங்கையர்களும் அவர்கள் எந்த அடையாளக் குழுவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்: • கடந்த காலத்தையும் போரின் போது இழந்த உயிர்களையும் நினைவுகூர்வதற்கும், துக்கங்கொண்டாடுவதற்குமான வாய்ப்புகளையும் சுதந்திரத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். • உளசமூக ஆதரவுச் சேவைகள் மற்றும் நலமடைவதற்கான மாற்றுவழிகள் என்பவற்றிற்கான அணுகலைக் கொண்டிருத்தல் வேண்டும். • கடந்த காலத்தைப் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கும் வரலாற்றில் இருந்து கற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பு உள்ளது என்பதோடு அவ்வரலாறு பற்றிய பல்வேறு பார்வைக் கோணங்களுக்கும் மதிப்பளிக்கப்பட வேண்டும். • பல உண்மைகள் இருப்பதை ஏற்றுக்கொள்ளும் சூழலில், ஆயுதப் போரை அவர்கள் எப்படி அனுபவித்தார்கள் என்பது பற்றிய அவர்களின் உண்மைகளைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பினைக் கொண்டுள்ளார்கள்.	o ஆயுதப் போராட்டம் தொடர்பான கடந்த காலத்தைக் கையாள்வதன் முக்கியத்துவம் o கடந்தகாலத்தில் இழைக்கப்பட்ட அநீதிகளை ஏற்றுக்கொள்ளல் o கடந்த காலத்தை கையாள்வதிலுள்ள தடைகள் o நினைவேந்துதல் o நல்லிணக்க நிறுவனங்களின் முக்கியத்துவம்
2. அனைவருக்குமான நீதி	• ஆயுதப் போராட்டத்தால் சின்னாபின்னமாக்கப்பட்ட சமூகங்கள் மீளுருவாக்கப்பட்டு போர் தொடர்பான அநீதிகளுக்கு நீதி வழங்கப்படுதல். • பாதிக்கப்பட்டவர்கள் நியாயமான இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்குப் போதுமான வழிவகைகளைக் கொண்டிருத்தல்: சொத்து இழப்புகள் அங்கீகரிக்கப்பட்டு ஈடுசெய்யப்படுதல் காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடத்தில் திருப்பிக் கொடுத்தல் மற்றும் வருமான இழப்புக்கான நட்டஈடுகளை வழங்குதல். • வலிந்து காணாமலாக்கப்பட்ட அன்புக்குரியவர்களைக் கொண்ட மக்கள் தம் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய உண்மையை அறிந்துகொள்வதற்கு வழிவகை செய்வதோடு அவர்களின் இழப்புகளை ஈடுசெய்வதற்கான ஆதரவினை வழங்குதல்.	o இழப்பீடுகளை வழங்குதல் o நீதியைப் பெற்றுக்கொள்ளல் (2025இல் சேர்த்துக்கொள்ளப்படவில்லை) o நீதியைப் பெற்றுக்கொள்வதிலுள்ள தடைகள் o குடிமக்களுக்கு எதிரான அரச வன்முறையை இயல்பாக்கம்செய்தல் (2023 இல் “வன்முறையை நியாயப்படுத்துதல்- என்பதிலிருந்து மாற்றப்பட்டது)
3. அடையாளமும் உடைமையுணர்வும்	• அனைத்துச் சமூகக் குழுக்களின் உறுப்பினர்களுக்கும் தேவைகளும் அபிலாசைகளும் உள்ளன என்பதை அங்கீகரித்தல். • சமூகக் குழுக்கள் தொடர்பான வேறுபாடுகள் இருந்தபோதிலும் இலங்கையர் எனும் அடையாளத்தை நேர்மறையான வரித்துக்கொள்ளல். • எந்தவொரு மக்களும் அல்லது குழுக்களும் தங்களை ‘இரண்டாம் தர’ குடிமக்கள் என்று உணரவில்லை என்பதை உறுதிப்படுத்துதல். • மக்கள் தங்கள் சொந்த அடையாளங்களைத் தழுவிக்கொள்ள சுதந்திரம் உண்டு. வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவை கண்ணியத்துடன் ஏற்றுகொள்ளப்பட்டு மதிக்கப்பட வேண்டும்.	o இலங்கையர் என்ற அடையாளத்தின் முக்கியத்துவம் o குழு அடையாளத்தின் மூலம் o பாரபட்சப்படுத்தப்படுவதன் அடிப்படை o பிறரை மதித்தல் o சமூகக் குழுகளைநோக்கிய சகிப்புத்தன்மை o வெவ்வேறு இன/மதக்குழுக்களைச்சேர்ந்த மக்களுடன் பழகுவதிலுள்ள தடைகள் o மதரீதியான சகிப்புத்தன்மையின்மை (2023 இல் சேர்க்கப்பட்டது) o பால்நிலை அடையாளம் தொடர்பான விழிப்புணர்வு (2023 இல் சேர்க்கப்பட்டது)
4. நபர்களுக்கிடையிலான நம்பிக்கை, சமூக மற்றும் அரசியல் நம்பிக்கை	• குழுரீதியான தொடர்பு அல்லது அடையாளத்தைப் பொருட்படுத்தாமல் மக்கள் ஒருவரையொருவர் நம்புகின்றார்கள். • மக்கள், ஜனநாயக செயன்முறைகளும் நிறுவனங்களும் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எனவும் பக்கச்சார்பற்ற முறையில் செயற்படும் எனவும், நம்புகின்றார்கள். • ஊடகங்கள் சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும் நம்பிக்கையையும் ஊக்குவிக்கிறது.	o நபர்களுக்கிடையிலான சமூக நம்பிக்கை (நபர்களுக்கிடையிலான நம்பிக்கை என்பதிலிருந்து 2025இல் மாற்றப்பட்டது) o பொதுவான சமூக நம்பிக்கை o அரசியல் நம்பிக்கை o அதிகளவில் நம்பப்படும் ஊடகமும் அதன் மொழியும் (ஊடக நம்பிக்கை என்பதிலிருந்து 2023இல் மாற்றப்பட்டது) o ஊடகங்களின் செல்வாக்கு
5. சம வாய்ப்பு	• குழுத் தொடர்பு அல்லது குழு அடையாளத்திற்கு அப்பால் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளுக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருத்தல் (நிதி, பொருளாதார, சமூக, கலாச்சார, கல்வி, இயற்கை வளங்கள்) • அனைத்து இலங்கையர்களுக்கும் சமமான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களது சாதனைகளை அனுபவிப்பதற்குமான உரிமை உண்டு என்ற கூட்டு நம்பிக்கை.	o சம வாய்ப்பு o பால்நிலை சமத்துவம் (2023ஆம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டது) o சாதியச் செல்வாக்கு (2023ஆம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டது) o LGBTQ+ நபர்களுக்கான சம உரிமை (2025 இல் சேர்த்துக்கொள்ளப்பட்டது)

பரிமாணங்கள்	பரிமாணங்களை நடைமுறைப்படுத்தல்	கருத்தாய்வின் குறிகாட்டிகள்
6. செயல்முனைப்புள்ள பிரஜை/பொதுவாழ்வில் ஈடுபாடுள்ள பிரஜை	• நாட்டில் சாதகமான மாற்றங்களுக்கப் பங்களிப்புச்செய்வதற்கான விருப்பமும் வெளியும் • பொதுவெளி ஈடுபாட்டுக்கான சமமான வாய்ப்புகள் • பேச்சு/கருத்து சுதந்திரம் நிலவுதல்	o செயல்முனைப்புள்ள குடிமக்களாயிருப்பதன் அளவுமட்டம் o உள்ளக அரசியல் வினைத்திறன் o தனிப்பட்ட சுதந்திரங்கள் o நெருக்கடியின் காரணமாக அரசியலில் ஈடுபடும் ஊக்கம் (2025இல் நீக்கப்பட்டது) o தற்போதைய பொருளாதார சூழ்நிலையின் காரணமாக அரசியலில் ஈடுபடும் ஊக்கம் (2025இல் சேர்த்துக்கொள்ளப்பட்டது) o தற்போதைய அரசியல் சூழலின் காரணமாக அரசியலில் ஈடுபடும் ஊக்கம் (2025இல் சேர்த்துக்கொள்ளப்பட்டது) o அரசியல் செயலாண்மை (2025இல் சேர்த்துக்கொள்ளப்பட்டது)
7. பொறுப்புக்கூறுதலுடனான ஆட்சி	• குழுப் பிணைப்பு அல்லது அடையாளத்திற்கு அப்பால் அனைத்து சமூகங்களுக்காகவும் ஆட்சி முறைமைகளும் மற்றும் நிறுவனங்களும் செயற்படுதல். • அரசியல், சமூக அல்லது பொருளாதாரரீதியான மேட்டுக்குடிகளுக்குச் சார்பாக இருந்த அதிகார ஏற்றத்தாழ்வுகள் சரி செய்யப்பட்டுள்ளன. • இன-மத ஆதிக்க சக்திகளையும் அவற்றின் விளைவுகளையும் எதிர்கொள்வதன்மூலம் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்காக இன-மத ஆதிக்கமானது அகற்றப்பட்டுள்ளது. • அரசும் நாட்டு மக்களும் அனைத்து சமூகக் குழுக்களின் குரல்களுக்கும் செவிசாய்த்தல். • அனைத்து மக்களும் தங்கள் தாய்மொழியில் சேவைகளைப் பெறக்கூடியவாறு இருப்பதோடு சேவை வழங்குவதில் உள்ள பிரதேச வேறுபாடுகள் குறைவடைதல். • தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறையில் அனைத்து சமூக குழுக்களினதும் பிரதிநிதித்துவம் காணப்படுவதோடு பொது அமைப்புகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் சமமாகக் காணப்படுதல். • அமைப்புகள் (குடிமக்களுக்கும் சர்வதேச கடப்பாடுகளுக்கும்) வெளிப்படையானவையாகவும் பொறுப்புக்கூறுபவையாகவும் இருத்தல். • இலஞ்சம் மற்றும் ஊழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவற்றுக்கெதிராக தீவிரமாக சட்ட நடவடிக்கையைத் தொடர்வதற்குமான கட்டமைப்புக்கள் உள்ளன	o பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரப் பகிர்வு o சேவைகளுக்கான அணுகக்கூடியதன்மை - அடிப்படை மற்றும் துணைச் சேவைகள் o மக்களின் தேவைகளுக்கு அரசின் பதிலளிக்கும் தன்மை o தாய்மொழியில் சேவைகளைப் பெறும் வேகம், விழிப்புணர்வு, முக்கியத்துவம். o அரசபொதுச்சேவைகளில் உணரப்பட்ட ஊழலின் அளவு (2025இல் சேர்த்துக்கொள்ளப்பட்டது) o ஊழலை எதிர்கொள்வதில் சட்டங்கள் மற்றும் சட்டச்செயன்முறைகளின் பலம் (2025இல் சேர்த்துக்கொள்ளப்பட்டது) o ஊழலை எதிர்கொள்வதில் அரசாங்கத்தின் வினைத்திறன் (2025இல் சேர்த்துக்கொள்ளப்பட்டது) o அன்றாட வாழ்வில் ஊழலின் தாக்கம் (2025இல் சேர்த்துக்கொள்ளப்பட்டது) o ஜனநாயக பன்மைத்துவம் (2025இல் சேர்த்துக்கொள்ளப்பட்டது)
8. பாதுகாப்பும் நல்வாழ்வும்	• அனைத்து இலங்கையர்களும் வன்முறையிலிருந்து விடுபட்டு பாதுகாப்பாக வாழ்தல். ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் அச்சமின்றி வாழ முடிதல். • ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவைச் சேர்ந்திருப்பதற்கு அப்பால் பாதுகாப்பான, அமைதியான மற்றும் நியாயமான சமூகத்தின் ஒரு பகுதியாக இருத்தல். • ஊடகங்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் பயம் இல்லாமல் தங்கள் பணியில் ஈடுபட முடிதல். • போதுமான ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் தரமான மருத்துவம் மற்றும் கல்விச் சேவைகள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுதல்.	o ஒப்பீட்டளவிலான குடும்ப நல்வாழ்வு o குடும்ப நல்வாழ்வுக்கான அச்சுறுத்தல்கள் o அடிப்படை வறுமைச் சுட்டி o தனிப்பட்ட மற்றும் சமூகப் பாதுகாப்பு o இராணுவமயமாக்கலை இயல்பாக்கம் செய்தல் (2023இல் சேர்க்கப்பட்டது)
9. ஒட்டுமொத்த நல்லிணக்க குறிகாட்டிகள்		o நல்லிணக்கத்திற்கான தேவை o நல்லிணக்கத்தின் முன்னேற்றம் o நல்லிணக்கத்தின் அர்த்தம் o நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான பாரிய பொறுப்பு (2025இல் சேர்க்கப்பட்டது) o நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதிலுள்ள பாரிய தடைகள்
10. சூழமைவுசார் குறிகாட்டிகள்		o பொருளாதார நெருக்கடியின் பாரிய தாக்கம் (2023இல் சேர்க்கப்பட்டது) o இனங்களுக்கிடையிலான உறவில் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் (2023இல் சேர்க்கப்பட்டது) o கோவிட்-19இன் தாக்கம் (2023இல் நீக்கப்பட்டது)

பின்னிணைப்பு 2 - விரிவான ஆய்வுமுறைமை

ஆய்வுமுறைமை, மாதிரித் தெரிவுச் சட்டகம், பகுப்பாய்வு மற்றும் குறிகாட்டிகளை எடுத்துரைத்தல் போன்றவற்றினை விரிவாகக்கூறி இப்பின்னிணைப்பானது, SLBஇன் கருத்தாய்வுகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை விபரிக்கின்றது.

கருத்தாய்வு முறைமை

பரந்த அளவிலான சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாசாரப் பிரச்சினைகளில் மக்களின் மனப்பாங்குகள், கருத்துக்கள் மற்றும் நம்பிக்கைகளை அளவிடுவதற்கு SLBஆனது ஒரு அளவுசார் ஆய்வு முறையைப் பயன்படுத்துகின்றது. பொதுமக்கள் கருத்தாய்வின் விசேடபிரிவின் ஓர் பகுதியாக, பல்வேறு பிரிவு மட்டங்களில் வாழும் மக்களின் கருத்துக்களைப் பற்றிய நுணுக்கமான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

SLBஆனது தனியொரு விடயத்தில் மாத்திரம் அல்லது தருணத்தில் மாத்திரம் கவனம் செலுத்தும் பாரம்பரிய கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புக்களைப் போன்றல்லாது, நல்லிணக்கம், சமூக ஒற்றுமை போன்றவற்றுடன் தொடர்புடைய பரந்தளவிலான தலைப்புக்களில் மக்களின் கருத்துக்களை ஆய்வு செய்யக்கோருவதுடன், காலவோட்டத்தில் இவை எவ்வாறு மாறுபடுகின்றன என்பதையும் கண்காணிக்கின்றது. மேலும், SLBஆனது தற்போதுள்ள கோட்பாடு மற்றும் நடைமுறையிலிருந்து பெறப்பட்ட விரிவான கருத்தியல் கட்டமைப்புக்களின்மீது வடிவமைக்கப்பட்டுள்ளது. காலவோட்டத்தில் பொதுமக்களின் உணர்வுகளை மிகவும் ஸ்திரத்தன்மையுடன் அளவீடுசெய்வதற்காக மிகவும் வலுவான மாதிரி வடிவமைப்புகளும் அதிகளவிலான மாதிரிகளும் பயன்படுத்தப்படுகின்றன. பாரம்பரியமான கருத்துக்கணிப்புக்கள் பொதுமக்களின் பார்வையினை உடனடியாக அறிந்துகொள்வதில் முக்கியபங்கினை வகிக்கின்றன, SLBஆனது விருப்பத்திற்குரிய தலைப்புக்களில் பாரிய அழுத்தத்தினை வழங்குவதால், மிகவும் விரிவான பகுப்பாய்வும் விளக்கமும், மற்றும் நீண்டகால சமூகபிரச்சினைகளின் சூழமைவினைப் புரிந்துகொள்ளுதல் போன்றவற்றின்மூலம் இம்முயற்சிகளுக்கு வலுச்சேர்க்கின்றது.

SLBஆனது அதன் கருத்தியல் கட்டமைப்பின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட ஆய்வு வினாக்கொத்துக்களை பயன்படுத்தி தரவுகளை சேகரிக்கின்றது (பின்னிணைப்பு 1ஐப் பார்க்கவும்). SLBஇனது முதலாவது மீள்செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட விரிவான சமூக ஆலோசனைக் கலந்துரையாடல்கள், பண்புசார் மற்றும் அளவுசார் ஆய்வுகள் என்பவற்றிலிருந்தே இக் கருத்தியல் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வனைத்து உள்ளீடுகளின் அடிப்படையிலும் இக்கட்டமைப்பானது எட்டு கருத்தியல் பரிமாணங்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கருத்தியல் பரிமாணமும் பல துணைப் பரிமாணங்களையும் அவற்றிற்குள் வெவ்வேறு சமூக குறிகாட்டிகளையும் கொண்டுள்ளது. இக் குறிகாட்டிகள் பிரதான கருத்தியல் பரிமாணங்கள் மற்றும் துணை பரிமாணங்கள் தொடர்பில் மக்களின் கருத்துக்கள் பற்றிய உண்மையான அளவீட்டினைப் பிரதிபலிக்கின்றன. இவ்வறிக்கையில் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று, இக் குறிகாட்டிகள் வெவ்வேறு ஆய்வுக் கருப்பொருட் பரப்புக்கள் சார்ந்த அளவுசார் பகுப்பாய்வுக்கான அடிப்படையினை வழங்குகின்றன.

SLBஇன் வினாக்கொத்தானது பல்வேறு வகையான பிரிவுகளைச்சேர்ந்த வினாக்களைக் கொண்டிருக்கின்றது. அவை பின்வருமாறு:

- பதில் வழங்குவோரின் வயது, பால்நிலை, மதம், இடம்சார்ந்த இருப்பிடம் போன்ற மக்கள் தொகைசார் பண்புகளை அளவிடும் வினாக்கள்.
- சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாசார பிரச்சினை தொடர்பில் மக்களின் கருத்துக்களின் தீவிரத்தினை மதிப்பிடுவதற்கு உடன்படுகிறேன்/உடன்படவில்லை மற்றும் ஏற்றுக்கொள்கிறேன்/ஏற்றுக்கொள்ளவில்லை போன்ற 5 புள்ளி அளவுகோலைப் பயன்படுத்தும் கேள்விகள்.
- பதிலளிப்போர் முன்பே அடையாளங்காணப்பட்ட பதில் தெரிவுகளிலிருந்து தெரிவுசெய்யக்கூடிய அல்லது அவர்கள் தமது சொந்த வார்த்தைகளில் ஒரு வார்த்தையில் பதிலளிக்கக்கூடிய கேள்விகள். தரவுச்சேகரிப்பு முடிந்தபின் இப்பதில்கள் குறியீடாக்கப்படுகின்றன.
- முன்பே அடையாளங்காணப்பட்ட பதில் தெரிவுகளுடனான ஒரு வார்த்தையில் பதிலளிக்கக்கூடிய கேள்விகள்.

வினாக்கொத்து ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டதும், அவ்வினாக்கொத்தானது, முக்கிய சொற்களினதும் கருத்தியல்களினதும் சிறந்த மொழிபெயர்ப்பினை உறுதிப்படுத்துவதற்காக இருமொழிச்சொற்களையும் ஒப்பீடுசெய்யும் மொழிபெயர்ப்பு நடைமுறையைப் பயன்படுத்தி சிங்களம் மற்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. அதன்பிறகு, (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்துகள் கணினியின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் தனிநபர் நேர்காணல் (CAPI) தளத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதுடன் களச்செயற்பாடுகளின்போது நேரடியான நேர்காணல்கள் மூலம் பயன்படுத்தப்பட்டன. அனைத்து மாகாணங்களினதும் மக்கட்தொகை குழுக்களினதும் போதுமான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்வதற்குப் பொருத்தமான மாதிரித்தெரிவுமுறை பயன்படுத்தப்பட்டு பதில் வழங்குவோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் (பகுதி 2.2ஐப் பார்க்கவும்).

SLB 2020ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆரம்பநிலைக் கருத்தாய்வு மற்றும் 2021ஆம் ஆண்டு மேற்கொண்ட முதலாவது பின்தொடர் (follow-up) கருத்தாய்வு என்பவற்றிற்குப் பின்னர், தென்னாபிரிக்க முன்மாதிரியினைப் பின்பற்றி ஆண்டுக்கு இருமுறை ஆய்வு இடைவெளியை பின்பற்றியது. இவ்வாய்வு இடைவெளியானது கருத்தாய்வினை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறு, பொருளாதார ரீதியான சாத்தியப்பாடு மற்றும் நீடித்துநிலைத்திருக்கும்தன்மை பற்றிய கரிசனைகளுக்கான தீர்வுகளையும் வழங்குவதுடன் காலப்போக்கில் சமூகத்தில் நிலவும் போக்குகளையும் அளவிடுவதற்கு போதுமானதாகும். அத்துடன் நாடு முழுவதும் கருத்தாய்வினை மேற்கொள்வதற்கு கருத்துக்கணிப்பிற்குப் பயன்படுத்தப்படும் கேள்விகளின் பொருத்தப்பாடு மற்றும் நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக 60 பேரைக்கொண்ட மாதிரியினைப் பயன்படுத்தி ஒரு பரீட்சார்த்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது (பகுதி 2.4 ஐப் பார்க்கவும்).

ஒவ்வொருமுறையும் இக்கருத்தாய்வுகள் மீண்டும் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் ஆய்விற்கான வினாக்கொத்துகள் வலுவான மதிப்பாய்விற்கு உட்படுத்தப்படுகின்றன.

புள்ளிவிபரவியல் மற்றும் அடிப்படையான/சூழல் சார்ந்த கண்ணோட்டங்களில் இருந்து மதிப்பீட்டுக் குறிகாட்டிகளையும் ஆய்வுப் பரப்புக்களையும் மதிப்பீடுசெய்து தேவையான அல்லது பொருத்தமான இடங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதையும் இது உள்ளடக்கியிருக்கின்றது. மேலும், ஒவ்வொரு ஆய்விலும் நல்லிணக்கம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களில் ஏற்படும் மாற்றத்தினைக் கண்காணிப்பதற்கான பிரதான குறிகாட்டிகளின் தொகுப்பொன்று தொடர்ந்தும் பேணப்படுவதுடன், காலப்போக்கில் எழக்கூடிய விடயங்களையும் உள்ளடக்குவதற்காக புதிய கேள்விகள் அல்லது அம்சங்கள் தொடர்ந்து வருகின்ற ஒவ்வொரு கருத்தாய்விலும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. இவற்றிற்கான உதாரணங்கள் 2021இல் கோவிட் பெருந்தொற்றின் தாக்கம், 2023இல் பொருளாதார நெருக்கடி, 2025இல் தேர்தலுக்குப்பிந்திய மாற்றங்கள் என்பனவாகும் (பகுதி 2.3ஐப் பார்க்கவும்).

மாதிரிகளின் தெரிவு (SAMPLING) தொடர்பான கட்டமைப்பு

மாதிரிகளானவை 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட இலங்கையர்களின் மாதிரிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது. 2012ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் கணக்கெடுப்பின்படி நாட்டின் மக்கள் தொகையானது 20,359,439ஆக இருந்தது. இதில் 70% ஆனோர் (14,230,273) 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களாவர். மாதிரியானது போதுமானளவிற்கு புவியியல்ரீதியான குழுக்களின் பிரதிநிதித்துவத்தினை உள்ளடக்குகின்றது - அது கிராமம், நகரம், மலையகம் மற்றும் மாகாணவாரியான, மாவட்டவாரியான குழுக்கள் போன்றவற்றினை உள்ளடக்குவதுடன், பால்நிலை, வயது, இனம் மற்றும் மதம் போன்ற சனத்தொகையின் வெவ்வேறு குழுக்களின் சமமான பிரதிநிதித்துவத்தினையும் உறுதிப்படுத்துகின்றது.

இம்மாதிரியானது தேசிய அளவில் 95% நம்பிக்கை மட்டத்தினையும் 1.58% வழுக்கள் ஏற்படுவதற்கான சாத்தியப்பாட்டினையும் கொண்டுள்ளது. சுருக்கமாகக்கூறின், இதன் அர்த்தம் என்னவெனில், பெறப்பட்ட எந்தவொரு பெறுபேற்றிற்கும், பெறப்பட்ட பெறுமதியிலிருந்து 1.5% ஆன வேறுபாடு காணப்படும் வாய்ப்புள்ளது. உதாரணமாக, ஒரு கருத்தாய்வில் 55% ஆன மக்கள் ஒரு கருத்துடன் உடன்பட்டால், இப்பெறுமானமானது உண்மையில் 53.5% (55% - 1.5%) தொடக்கம் 56.5% (55% + 1.5%) வரையான வீச்சினைக் கொண்டிருக்கலாம் என்பதாகும். வேறுமுறையில் கூறுவதானால், குறிப்பிட்ட விடயம் தொடர்பில் ஏற்றுக்கொள்ளும் அளவு 53.5% மற்றும் 56.5% வரையான வீச்சினைக் கொண்டிருக்கும் என்பதை 95% நம்பமுடியும் என்பதாகும்.

மாதிரிகளின் அளவினைக் கருத்தில்கொள்ளும்போது, தேசியமட்டத்திலிருந்து (முழுமையான மாதிரி) சிறிய எல்லைகளுக்கு (மாதிரிகளின் ஒரு பகுதி) மாறும்போது தவிர்க்கமுடியாதவிதத்தில் வழு ஏற்படும் வீதம் அதிகரிக்கின்றது. இக்காரணத்தினால், SLBஇன் அறிக்கையானது ஒவ்வொரு வகைப்படுத்தலினையும் (தேசிய, மாகாண, இனரீதியான, வயதுரீதியான, ஏனையவை) அடிப்படையாகக்கொண்டு தனது பகுப்பாய்வினை மேற்கொள்வதில் கவனஞ்செலுத்துகின்றது, அந்தவிதத்தில் வழுவீதம் குறைவானதாக இருப்பதுடன், விபரிப்பதற்குப் போதுமான எல்லையினைக்கொண்டவையாகவும் இருக்கும்.

வெவ்வேறு வகைப்பிரிவு மட்டங்களிலும் புள்ளிவிபரவியல்ரீதியாக, ஏற்றுக்கொள்ளப்படத்தக்க நம்பிக்கைமட்டத்தினை அடைவதற்கு தேசியளவிலான பெறுபேற்றில் மட்டுமே நம்பிக்கை மட்டத்தினை எதிர்பார்க்கின்ற மாதிரிகளின் அளவினைவிடவும் பெரியளவிலான மாதிரிகளின் அளவினைக் கொண்டிருக்க வேண்டும். இலங்கைச் சூழலில், அத்தகைய வகைப்பிரிக்கப்பட்ட பகுப்பாய்விற்கான மாதிரிகளின் அளவானது, 3500இற்கு மேற்பட்ட 4000க்குக் குறைந்த பதிலளிப்போரினைக் கொண்டதாக இருக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்த மாதிரிக் கணிப்பீட்டினடிப்படையில், 2025ம் ஆண்டிற்கான SLB கருத்தாய்வின் இறுதி மாதிரி 3876[10] எனத்தீர்மானிக்கப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளின் அளவானது போதுமானளவு நம்பிக்கையுடன் கண்டடைவுகளை விவரிக்கும் இயலுமையினைக் குறிக்கும், புள்ளிவிபரவியல் ஆற்றல் மற்றும் களப்பணி ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஏற்படும் குறிப்பிடத்தக்க செலவுடன் தொடர்புபட்ட கட்டுப்படியாகும்தன்மை என்பவற்றுக்கிடையில் உகந்த சமநிலையைப் பிரதிபலிக்கின்றது. 3500இற்குக் குறைவான மாதிரிகள் தேசியளவில் போதுமான நம்பிக்கையுடனான பெறுபேறுகளை வழங்கியிருப்பினும், மாகாணம், இனத்துவம், மதம், ஏனையவை போன்ற உப-தேசிய மட்டங்களை நோக்கிச்செல்கையில் நம்பிக்கைமட்டம் வெகுவாகக் குறைவடையும். அதுபோல, 4000இற்கும் மேற்பட்ட மாதிரிகளின் அளவானது நம்பிக்கை மட்டத்தினை மேலும் அதிகரித்திருப்பினும் அவ்அதிகரிப்பு ஒரு எல்லைக்குட்பட்டதாக இருப்பதுடன், குறிப்பிடத்தக்க நிதிச்செலவும் ஏற்படும், இது நம்பிக்கைமட்டத்தில் ஏற்படும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகரிப்பினை நியாயப்படுத்துவதற்குப் போதுமானதாக இருக்காது.

அனைத்துப் பிரிவு மட்டங்களிலும் போதுமான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக பல படிமுறைகளில் அமைந்த எழுந்தமான மாதிரித் தெரிவு நுட்பம் பயன்படுத்தப்பட்டுத. இதன்போது ஒட்டுமொத்த தேசியளவிலான மாதிரிகளும் நிகழ்தகவு-விகிதசமம்-மாதிரிகளின் அளவு (PPS) எனும் அடிப்படையில் 25 மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. மாவட்ட மட்டத்திலிருந்து பெறப்பட்ட மாதிரிகள் மேலும் நகர்ப்புறத்தன்மை மற்றும் இனத்துவ அடிப்படையில் PPS மாதிரித்தெரிவு முறையினைப் பயன்படுத்தி வகைப்பிரிக்கப்பட்டன. சுருக்கமாகக்கூறின், PPS மாதிரித்தெரிவுமுறையானது, தெரிவுசெய்யப்படும் மாதிரி அலகுகள் விகிதாசாரமுறையில் சனத்தொகையின் மாதிரித்தெரிவு செய்யப்படும் குழுவின் அளவுடன் தொடர்புபட்டுள்ளதை உறுதிப்படுத்துகின்றது. முதலில், மாவட்டமட்டத்தில் போதிய மாதிரிகளின் அளவினை உறுதிப்படுத்துவதற்கு, மாதிரிச் சீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது, இதன்மூலம் மாவட்டமட்டத்தில் போதுமான தரவுகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. மாவட்டமட்டத்தில் பெறப்பட்ட மாதிரிகள் ஒவ்வொரு மாவட்டத்திற்குள்ளும் நகரம், கிராமம், மலையகம் போன்ற பிரிவுகளுக்குள் PPS மாதிரித்தெரிவுமுறையினைப் பயன்படுத்தி பிரிக்கப்பட்டது. அதன்பின் ஒவ்வொரு மாவட்டத்திற்குள்ளும், உரிய நகர்ப்புறத்தன்மைக்கான மாதிரிகளைப் பிரதிபலிப்பதற்கு கிராமசேவையாளர் பிரிவுகள் எழுந்தமானவிதத்தில் தெரிவுசெய்யப்பட்டது.

மேலும், 2021இல் மேற்கொள்ளப்பட்ட கற்கையில் தேசியளவிலான முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் 8%ஆக இருந்த அதேவேளை, ஆய்வானது 5%இனை மட்டுமே உள்ளடக்கியிருந்ததுடன் மாதிரிகளின் அளவு போதாமையினால் மலையகத் தமிழர்களின் உணர்வுகள் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இது நாட்டிலுள்ள சிறுபான்மை இனக்குழுக்களினடிப்படையில் தரவுகளை வகைப்பிரிப்பதிலுள்ள மட்டுப்பாடுகளை எடுத்துக்காட்டியது. இவ்விடயத்தினை எதிர்கொள்வதற்கு, நாட்டிலுள்ள வெவ்வேறுபட்ட இனப்பிரிவுகளுக்கும் துல்லியமான தரவு வகைப்பிரிப்பினைச் சாத்தியப்படுத்தி ஒட்டுமொத்த மாதிரிகளுக்குள்ளும் ஒவ்வொரு இனக்குழுவினதும் போதுமானளவு பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கு, 2023இல் பயன்படுத்தப்பட்ட மாதிரிகளின் அளவில் மாற்றம் செய்யப்பட்டது, அது 2025 கருத்தாய்விற்கும் எடுத்துவரப்பட்டது.

- சிங்களவர் - மாதிரிகளின் 64.4%
- இலங்கைத் தமிழர் - மாதிரிகளின் 16.2%
- மலையகத் தமிழர் - மாதிரிகளின் 5.1%
- முஸ்லிம் - மாதிரிகளின் 13.7%

ஒட்டுமொத்தமாக கிராமசேவையாளர் பிரிவுகள் எழுந்தமானமுறையில் தெரிவுசெய்யப்பட்ட அதேவேளை, மேலே குறிப்பிடப்பட்டது போன்று வெவ்வேறுபட்ட இனக்குழுக்களுக்கும் ஒதுக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட கிராமசேவையாளர் பிரிவு போதுமாக இல்லாதபட்சத்தில், அதே நகர்ப்புறத்தன்மையினை உறுதிப்படுத்தி குறிப்பிட்ட இனக்குழுமம் செறிந்துவாழும் இடங்களை மையப்படுத்தி சில கிராம சேவையாளர் பிரிவுகள் மாற்றப்பட்டன.

கருத்தாய்வினைப் பூர்த்திசெய்தபின்பு, தேசியளவிலான மக்கள்தொகை மற்றும் கருத்தாய்வின் மாதிரி ஆகியவற்றுக்கிடையிலான மாதிரிகளின் பிரதிநிதித்துவத்திலுள்ள வேறுபாட்டினைச் சீர்செய்ய, தரவுகளின் கனம்பார்க்கும் செயன்முறை மேற்கொள்ளப்பட்டது. இது நகர்ப்புறத்தன்மை, பால்நிலை, மதம் மற்றும் வயதுப்பிரிவுகளைக் குறிப்பிடுவதன்மூலம் கனதியான மாறியினை உருவாக்குவதனை உள்ளடக்குகின்றது. இதற்கு, DCSஇனால் பிரசுரிக்கப்பட்ட சனத்தொகை புள்ளிவிபரவியல் பயன்படுத்தப்பட்டது. மிகையான கனதியைக் குறைப்பதற்கு மேலதிகமானவற்றை அகற்றும் செயன்முறை பயன்படுத்தப்பட்டது.

கருத்தாய்வின் கனதி அளவிடப்பட்ட மாதிரிகளின் அளவிற்கு பின்னிணைப்பு 3ஐப் பார்க்கவும்

தரவுச்சேகரிப்பு முறை

பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டதும் இலங்கைச் சனத்தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலிலிருந்து ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் உட்பட்ட கிராம சேவகர் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டன. குறித்த இடைவெளிகளில் மேற்கொள்ளப்படும் எழுந்தமானமான மாதிரித்தெரிவு முறையினைப் பயன்படுத்தி கிராமசேவகர் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டன.

தெரிவுசெய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட வீடுகள், தொடக்கப்புள்ளியிலிருந்து பாதையின் இடது புறமாக தெரிவுசெய்யும் ‘இடது கை விதிமுறையைப்’ பயன்படுத்தி தெரிவுசெய்யப்பட்டன. ஆரம்பப்புள்ளியிலிருந்து வீதியின் இடதுபுறமுள்ள வீடுகள் நேர்காணலுக்காகத் தெரிவுசெய்யப்பட்டன. கருத்தாய்வினை முன்னெடுப்பவர்களுக்கு முன்னமே அடையாளம் காணப்பட்ட தொடக்கப்புள்ளிகள், அதாவது பாடசாலைகள், தேவாலயங்கள், கோயில்கள், மருத்துவமனைகள் மற்றும் அரச அலுவலகங்கள் போன்ற இடங்களின் விபரங்களும் - எழுந்தமானமுறையில் தெரிவுகளை மேற்கொள்வதற்கான வீடுகளை உள்ளடக்கிய பட்டியலும் வழங்கப்பட்டன.

ஆரம்ப மாதிரி அலகுகள் மட்டத்தில் நியாயமான மாதிரிப் பரம்பல் ஒன்றை உருவாக்குவதற்கான நேர்காணல்கள் வெற்றிகரமாக நிறைவடைந்ததன் பின்னர் வீதியின் இடது புறம் இருந்த சில குடும்பங்களுக்கு சில குடும்பங்களைத் தவிர்க்கும் முறை பயன்படுத்தப்பட்டு மாதிரித்தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன. வீடுகளுக்கிடையிலான தூரத்தைக் கருத்திற்கொண்டு, நகர்ப்புற மற்றும் தோட்டப்புற பகுதிகளில் ஒரு வீட்டுக்கு மூன்று வீடுகள் என்ற அடிப்படையிலும் சன அடர்த்தியற்ற கிராமப்புறங்களில் ஒரு வீட்டுக்கு இரண்டு வீடுகள் என்ற அடிப்படையிலும் வீடுகள் தவிர்க்கப்பட்டன.

இந்நேர்காணல்களுக்கு பதிலளிக்கும் நபர் 18 வயதை உடையவராகவும் தெரிவுசெய்யப்பட்ட வீட்டில் வசிப்பவராகவும் அந்த வீட்டில் சமைத்த உணவை உண்பவராகவும் ஆகக்குறைந்தது வாராவாரம் குறித்த வீட்டுக்குத் திரும்புபவராகவும் இருக்க வேண்டுமெனவும் வரையறுக்கப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட வீட்டில் இருக்கும் இத்தகுதியைக் கொண்ட அனைவரும் அவர்களின் பால்நிலை மற்றும் வயது போன்ற தகவல்களுடன் CAPI முறைமையின் ஊடாக பதிவுசெய்யப்பட்டனர். அந்தவீட்டிலிருந்து பதிவுசெய்யப்பட்ட நபர்களிலொருவர் CAPI ஊடாக Kish Grid[11] பயன்படுத்தி தெரிவுசெய்யப்படுவார். நேர்காணலைமேற்கொள்வதற்கான முதல் விஜயத்தின்போது தெரிவுசெய்யப்பட்ட நபர் வீட்டில் இல்லை எனின் அவரை தொடர்பு கொள்ளவதற்கு மேலும் இரண்டு தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அதுவும் வெற்றியளிக்கவில்லை எனின் அதே மாதிரியான எழுந்தமானமான செயல்முறையைப் பயன்படுத்தி அவருக்குப் பதிலாக வேறொருவர் பதிலளிப்பதற்குத் தெரிவுசெய்யப்படுவார்.

கேள்விகள் மற்றும் பதில் வடிவமைப்பு போன்றவை தொடர்பில் கேள்விக்கொத்து பூர்த்திசெய்யப்பட்டதும், அவ்வினாக்கொத்தானது, முக்கிய சொற்களினதும் கருத்தியல்களினதும் சிறந்த மொழிபெயர்ப்பினை உறுதிப்படுத்துவதற்காக இருமொழிச்சொற்களையும் ஒப்பீடுசெய்யும் மொழிபெயர்ப்பு நடைமுறையைப் பயன்படுத்தி சிங்களம் மற்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. மும்மொழிகளிலுமான (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) இற்றைப்படுத்தப்பட்ட வினாக்கொத்துக்கள் SurveyToGo எனும் CAPI தளத்தில் (கணினியின் உதவியுடனான தனிப்பட்ட நேர்காணல் முறை) எழுத்துருப்பெற்றன, இதுவே தரவுச்சேகரிப்பிற்குப் பயன்படுத்தப்பட்டது. இந்த CAPI முறை தரவின் தரத்தை உறுதிசெய்வதற்கும் GPS ஒருங்கிணைப்புகளை பயன்படுத்தி மாதிரித் தெரிவினை கண்காணிப்பதற்கும் உதவுவதோடு தரவினைப் பதிவுசெய்யும் நேரத்தையும் மீதப்படுத்துகின்றது. வினாக்கொத்தானது நேருக்கு நேரான நேர்காணல்களின் ஊடாக பயன்படுத்தப்பட்டதோடு தவறுகளையும் பதிலளிப்பவரின் சோர்வினையும் குறைக்கும் வகையில் வினாக்கொத்துகளுக்கு உட்பட்ட கூற்றுகள் எழுந்தமானவை ஆக்கப்பட்டன.

10 மூன்றாவது சுற்றில் மாதிரிகளின் அளவு 3876ஆகவும் (2023), இரண்டாவது சுற்றில் 3860ஆகவும் (2021), ஆரம்பகட்ட கருத்தாய்வில் 3880ஆகவும் (2020) இருந்தது.

11 Kish Grid முறையானது ஒரு வீட்டிலிருந்து பதிலளிக்கும் நபரொருவரை தெரிவுசெய்வதை எழுந்தமானமாக்கும் பொருட்டு குடும்பங்கள்சார்ந்த கருத்தாய்வுகளின்போது பயன்படுத்தப்படுகின்றது. இம்முறையானது தெரிவுசார் பக்கச்சார்புகளை தவிர்க்க உதவுவதோடு பதிலளிக்கும் நபரை தெரிவுசெய்வதற்கு ஒரு முறைசார்ந்த அணுகுமுறையையும் வழங்குகின்றது. இதன் மூலம் ஆய்வில் பங்குபெறும் ஒவ்வொரு நபரும் தெரிவு செய்யப்படுவதற்கு சமமான சாத்தியக்கூறும் வாய்ப்பும் உள்ளமை உறுதிப்படுத்தப்படுகின்றது.

தரவு பகுப்பாய்வும் விளக்கமும்

இப்பகுப்பாய்வானது ஒருங்கிணைந்த குறிகாட்டிகளாகவும் தனிப்பட்ட ஒரு விடயம்சார் குறிகாட்டிகளாகவும் வழங்கப்படுகிறது.

ஒரு ஒருங்கிணைந்த குறிகாட்டியானது ஒரு கருத்தியலை மாத்திரம் அளவிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பல ஆய்வுகளின் வினாக்கொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது (உதாரணமாக நல்லிணக்கத்திற்கான தேவை, அரசியல் நம்பிக்கை, மதரீதியான சகிப்புத்தன்மை). பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒருங்கிணைந்த குறிகாட்டிகள் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆய்வு விடயங்களை உள்ளடக்கியுள்ளன. இவை பதில்வழங்குவோரால் 5-புள்ளிகளைக்கொண்ட அளவீட்டில் மதிப்பீடு செய்யப்படும், அதன்பின் இவ்விடயங்கள் தொடர்பில் எளிமையான விளக்கத்தை வழங்குவதற்காகவும் புலப்படும்அளவினை அதிகரிப்பதற்கும் 0 முதல் 10 வரையில் மீள்மதிப்பீடு செய்யப்படும். அநேகர் 0 தொடக்கம் 10 வரையான அளவினை எடுத்துரைப்பதற்குப் பரீட்சயமானவர்களாக இருப்பதனாலும், பெறப்படும் புள்ளியின் மிகவும் நுட்பமான அளவீட்டிற்கு உதவுவதாலும், குழுக்களுக்கிடையிலும் ஏனைய ஒருங்கிணைந்த குறிகாட்டிகளின் அளவுப்புள்ளிகளுடனும் ஒப்பிடுவதற்கு உதவுவதாலும், இந்த அணுகுமுறையானது, பயன்படுத்துவதற்கு மேலும் இலகுவானதாக அமைகின்றது.

மேலும், 0 தொடக்கம் 100 வரையான வீச்சினைக்கொண்ட விகிதாசாரம் போன்ற அளவீடுகளுடன் அதிகளவிலான ஒத்ததன்மையினைக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துவதனால், ஒன்றிணைந்த அளவீடுகளில் குறைந்த அளவு 1ஆக இல்லாமல் 0 இலிருந்து ஆரம்பிக்கின்றது. இந்த அளவீட்டுமுறையானது அதிகளவான உறுதித்தன்மையினை வழங்குவதுடன், பொதுமக்களால் ஒன்றினைந்த அளவீட்டினை இலகுவாகப் புரிந்துகொள்ளவும் உதவுகின்றது, இறுதிப் பெறுபேறுகள் ஒவ்வொரு ஒருங்கிணைந்த குறிகாட்டிக்கும் ஒற்றையான சராசரிப் புள்ளிகளில் வழங்கப்படும்.

அளவுகள் மீண்டும் அளவீடு செய்யப்படும்போது அவை ஒன்றுடனொன்று தொடர்புபட்டிருக்கும் விதத்தில் கணிசமான மாற்றங்களேதும் இடம்பெறமாட்டாது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அதாவது, 1 தொடக்கம் 5 வரையிலான வினாக்கொத்து மதிப்பீட்டு அளவுகோலில் கூறப்பட்ட உண்மையான பதிலில் குறைவாக மதிப்பிடப்பட்டவை, 0 தொடக்கம் 10 வரையிலான மீளளவிடப்பட்ட ஒருங்கிணைந்த மதிப்பெண்களில் கீழ் நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளதுடன், அதிக மதிப்பீட்டுப் புள்ளிகளுக்கு இது நேர்மறையானதாகவும் இருக்கும். பதில் வழங்கிய ஏனையோருடன் ஒப்பிடுகையில் எந்தவொரு பதில் வழங்கியவருக்குமான மீளளவிடப்பட்ட மதிப்பெண்கள் அவரால் வழங்கப்பட்ட பதிலுடன் தொடர்புபட்ட நிலையினையே கொண்டுள்ளதுடன், அவர்களின் உண்மையான பதில்களில் மாற்றம் ஏற்படாது என்பதையும் இது உறுதிப்படுத்துகிறது. அதாவது, பதிலளிப்பவர்களுக்கிடையிலான அல்லது பதிலளிப்பவர்களின் குழுக்களுக்கிடையிலான (மாகாணம், இனம், பால்நிலை போன்றவை) எந்தவொரு ஒப்பீடுகளும் இம்மீளளவீட்டுச் செயன்முறையினால் எந்தவிதத்திலும் பாதிக்கப்படாது.

அறிக்கை முழுவதும் குறிகாட்டிகளை எடுத்துக்காட்டும் வரைபு இலக்கங்களுடன் தொடர்புபட்டதாக, ஒவ்வொரு குறிகாட்டியினையும் அளவிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கருத்தாய்வின் கேள்விகள் பின்னிணைப்பு 4இல் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு விடயப்பரப்பிற்கு மட்டுமான குறிகாட்டிகளானவை தனிநபர் கருத்தாய்வு வினாக்கொத்திலுள்ள விடயங்களை உள்ளடக்கியிருப்பதுடன், குறிப்பான பிரச்சினைகளை விளங்கிக்கொள்வதற்காக ஆய்விற்கான ஒரு விடயப்பரப்பினாலும் வடிவமைக்கப்பட்டுள்ளன (உதாரணம், நல்லிணக்கம் என்பதன் அர்த்தம் மற்றும் நல்லிணக்கத்திற்கான தடைகள்). ஒரு விடயப்பரப்பிற்கு மட்டுமான குறிகாட்டிகளிலிருந்து பெறப்பட்ட தரவுகள் தேசியளவிலான நிகழ்வெண்களாக (சனத்தொகையின் சதவீதம்) வழங்கப்பட்டுள்ளன. மேலும், அவை பகுப்பாய்வுரீதியாக ஒரு பெறுமதிமிக்கவிடயமாகக் காணப்படுமிடத்தில் (analytical value) பதில்கள் பொருத்தமான பிரிவுமட்டங்களுக்கேற்ப (disaggregation) வழங்கப்பட்டிருக்கும்.

குறிகாட்டிகளின் விஞ்ஞானரீதியான சரிபார்ப்பு

SLB இன் கருத்தாய்வில் பயன்படுத்தப்படும் குறிகாட்டிகள் தீவிரமான விஞ்ஞானரீதியான சரிபார்ப்புச் செயன்முறையினூடாக உறுதிப்படுத்தப்படுகின்றன. இது பயன்படுத்தப்பட்ட அளவீடுகளின் தரம், நம்பகத்தன்மை மற்றும் நிலையானதன்மை போன்றவற்றினை உறுதிப்படுத்துகின்றது. இச் சரிபார்ப்புச் செயன்முறையானது முந்தைய ஆய்வுகளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், பரீட்சார்த்தமான ஆய்வின்போது நம்பகத்தன்மை மற்றும் நிலையானதன்மையினைப் பரீட்சிப்பதற்கான சோதனைகளையும் உள்ளடக்கியிருக்கின்றது. ஒவ்வொரு கருத்தாய்வின் பின்னும், கேள்விக்கொத்திலுள்ள விடயங்களினதும், அவை பிரதிநிதித்துவப்படுத்தும் கருத்தியல்ரீதியான குறிகாட்டிகளினதும் நம்பகத்தன்மையினை மதிப்பீடுசெய்வதற்கு ஒரு முழுமையான விஞ்ஞானரீதியான சரிபார்ப்புச் செயன்முறை மேற்கொள்ளப்படுகின்றது. இத்தகைய தொடர்ச்சியான மீள்பார்வை செய்யும் போக்கானது, இருக்கின்ற குறிகாட்டிகளின் வலுவானதன்மையினை உறுதிப்படுத்தி, புதியவற்றினை செம்மைப்படுத்துவதற்கும் அல்லது மீள்பார்வை செய்வதற்கும் வழிகாட்டுதல்களை வழங்குகின்றன. சர்வதேசரீதியான சிறந்த நடைமுறைகளுக்குட்பட்டு, இவ் அணுகுமுறையானது, கருத்தாய்வுக் கருவி மற்றும் அதன் கண்டுபிடிப்புக்கள் போன்றவற்றின்மீதான நம்பிக்கையினை உறுதிப்படுத்துகின்றது.

அளவுகோல்களின் விரிவான சரிபார்ப்பினைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளமுடியும்.

பின்னிணைப்பு 3

2025ஆம் ஆண்டு ஆய்வுக்கான கனதி அளவிடப்பட்ட மாதிரி அளவு பற்றிய விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன. இது இலங்கை மக்களின் போதுமான பிரதிநிதித்துவத்திற்கு உதவியாக உள்ளது. இந்த மாதிரி அளவானது இனம், மதம், வயது, பால்நிலை, மாகாணம் மற்றும் இடம் சார்ந்த பிரிவுகளை உள்ளடக்கி 2012 சனத்தொகை தரவுகளுக்கு இணையான உள்ளது. மேலும் இது பதிலளிப்பவரின் கல்வி மற்றும் தொழில் நிலமைகளையும் உள்ளடக்குகின்றது.

உரு 24: பால்நிலைசார் வகைப்படுத்தல், %, 2025



உரு 25: வயதுசார் வகைப்படுத்தல், %, 2025



உரு 26: இனரீதியான வகைப்படுத்தல், %, 2025



உரு 27: மதரீதியான வகைப்படுத்தல், %, 2025



உரு 28: இடரீதியான வகைப்படுத்தல், %, 2025



உரு 29: மாகாணரீதியான வகைப்படுத்தல், %, 2025



உரு 30: கல்விரீதியான அடைவுகள், %, 2025



உரு 31: தொழில்ரீதியான வகைப்படுத்தல், %, 2025



பின்னிணைப்பு 4 - தொடர்புபட்ட கருத்தாய்வின் கேள்விகள்

கீழுள்ள கருத்தாய்வுக் கேள்விகள் இந்த அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள குறிகாட்டிகளை உருவாக்குகின்றன. உரிய கேள்வியுடன் தொடர்புபட்டதாக, அவை வரைபு மற்றும் உரு இலக்கங்களுடன் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன.

உரு இல.	அளவிடப்பட்ட கருத்தியல் (C = ஒருங்கிணைந்த குறிகாட்டி SO = தனிப்பட்ட ஒரு விடயம்சார் குறிகாட்டி - திறந்தமுனைக் கேள்வி SS = தனிப்பட்ட ஒரு விடயம்சார் குறிகாட்டி அளவுகோல்)	கருத்தாய்வு கேள்விகள் (2025)
1-3	நல்லிணக்கத்திற்கான தேவை (C)	பின்வரும் கருத்துக்களை நீங்கள் எந்தளவிற்கு ஏற்றுக்கொள்கின்றீர்கள் அல்லது ஏற்றுக்கொள்ளவில்லை எனக்கூறவும் 1) இலங்கையில் நல்லிணக்கத்தினை அடைவது விரும்பத்தக்கது 2) இலங்கையில் நல்லிணக்கத்தினை அடைவது அவசியமானது 3) இலங்கையில் நல்லிணக்கத்தினை அடைவது முக்கியமானது பதில் வழங்குவதற்கான அளவு: முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளவில்லை (1) - உறுதியாக ஏற்றுக்கொள்கின்றேன் (5)
	நல்லிணக்கத்தின் முன்னேற்றம் (C)	2009இல் ஆயுதமுரண்பாடு முடிவிற்கு வந்ததிலிருந்து, ... என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? 1) நல்லிணக்கத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுவருகின்றது 2) வெவ்வேறுபட்ட இனக்குழுக்களுக்கிடையேயான உறவு மேம்பட்டிருக்கின்றது 3) வெவ்வேறுபட்ட மதக்குழுக்களுக்கிடையேயான உறவு மேம்பட்டிருக்கின்றது 4) வெவ்வேறுபட்ட மொழிகளைப்பேசும் குழுக்களுக்கிடையேயான உறவு மேம்பட்டிருக்கின்றது பதில் வழங்குவதற்கான அளவு: முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளவில்லை (1) – உறுதியாக ஏற்றுக்கொள்கின்றேன் (5)
4	நல்லிணக்கம் என்பதன் அர்த்தம் (SO)	இலங்கையில் நல்லிணக்கம் தொடர்பில் நினைக்கும்போது உங்கள் மனதில் தோன்றுவது யாது?
5-6	நல்லிணக்கத்தினை மேம்படுத்துவதற்கான பாரிய பொறுப்பு (SO)	இலங்கையில் நல்லிணக்கத்திற்கான பாரிய பொறுப்பினை யார் ஏற்கவேண்டுமென நீங்கள் நினைக்கின்றீர்கள்?
7-8	நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதிலுள்ள பாரியதடை (SO)	இலங்கையில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதிலுள்ள பாரியதடையாக நீங்கள் எதனைக் குறிப்பிடுவீர்கள்?
9	நல்லிணக்கத்திற்கான நிறுவனங்களின் முக்கியத்துவம் (C)	ஆயுதமுரண்பாட்டின் விளைவுகளைக் கையாள்வதற்கு இலங்கையர்களுக்கு உதவுவதற்கு பின்வரும் நிறுவனங்கள் எந்தளவிற்கு முக்கியமானவை என நீங்கள் நினைக்கின்றீர்கள்? 1) மனித உரிமைகள் ஆணைக்குழு 2) காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் (OMP) 3) இழப்பீட்டிற்கான அலுவலகம் 4) உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு (TRC) பதில் வழங்குவதற்கான அளவு: எந்தவிதத்திலும் முக்கியமில்லை (1) - மிகவும் முக்கியம் (5)
10-11	அரசியல் நம்பிக்கை (C)	பின்வரும் ஒவ்வொரு நிறுவனத்திலும் நீங்கள் எந்தளவிற்கு நம்பிக்கை வைத்துள்ளீர்கள் எனக்குறிப்பிடவும் 1) தேசிய அரசாங்கம் 2) பொலிஸ் 3) நீதிமன்றம் 4) பிரதேச செயலகம் 5) நகர சபை/மாநகர சபை/பிரதேசசபை 6) கிராம சேவையாளர் பதில் வழங்குவதற்கான அளவு: முற்றுமுழுதாக நம்பவில்லை (1) – மிகவும் நம்புகின்றேன் (5)
12	பொதுத்துறைகளில் உணரப்பட்ட ஊழலின் அளவு (C)	உங்களுக்குத் தெரிந்ததிலிருந்து அல்லது நீங்கள் கேட்டறிந்ததிலிருந்து 1) நாட்டிலுள்ள அரசநிறுவனங்களில் எவ்வளவு காலத்திற்கொருமுறை ஊழல் இடம்பெறுகின்றது? 2) தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்தலைவர்கள் எவ்வளவு காலத்திற்கொருமுறை ஊழலில் ஈடுபடுகின்றார்கள்? 3) அரசஉத்தியோகத்தர்கள் எவ்வளவு காலத்திற்கொருமுறை ஊழலில் ஈடுபடுகின்றார்கள்? பதில் வழங்குவதற்கான அளவு: ஒருபோதும் இல்லை (1) – எப்போதும் (5)

உரு இல.	அளவிடப்பட்ட கருத்தியல் (C = ஒருங்கிணைந்த குறிகாட்டி SO = தனிப்பட்ட ஒரு விடயம்சார் குறிகாட்டி - திறந்தமுனைக் கேள்வி SS = தனிப்பட்ட ஒரு விடயம்சார் குறிகாட்டி அளவுகோல்)	கருத்தாய்வு கேள்விகள் (2025)
13	ஊழலை எதிர்கொள்வதில் முன்னைய அரசாங்கத்தின் வினைத்திறன் (SS)	உங்கள் கருத்துப்படி, முன்னைய அரசாங்கம் ஊழலை எதிர்கொள்வதில் எந்தளவிற்கு வினைத்திறனுடையதாக இருந்தது? பதில் வழங்குவதற்கான அளவு: மிகவும் வினைத்திறன்மிக்கது (1) – மிகவும் வினைத்திறனற்றது (5)
	ஊழலை எதிர்கொள்வதில் தற்போதைய அரசாங்கத்தின் வினைத்திறன் (SS)	உங்கள் கருத்துப்படி, தற்போதைய அரசாங்கம் ஊழலை எதிர்கொள்வதில் எந்தளவிற்கு வினைத்திறனுடையதாக இருக்கும்? பதில் வழங்குவதற்கான அளவு: மிகவும் வினைத்திறன்மிக்கது (1) – மிகவும் வினைத்திறனற்றது (5)
14–15	தனிப்பட்ட சுதந்திரங்கள் (C)	இலங்கையில், ... நீங்கள் சுதந்திரமாக உணர்கின்றீர்கள் என உடன்படுகின்றீர்களா? அல்லது உடன்படவில்லையா? 1) நீங்கள் நினைப்பதைக் கூறுவதற்கு அல்லது எழுதுவதற்கு 2) எந்தவொரு அரசியல் அமைப்புடனும் இணைவதற்கு 3) உங்களது மதத்தினைப் பின்பற்றுவதற்கு 4) அமைதியான போராட்டங்களில் இணைவதற்கு 5) உங்கள் தெரிவுக்குரிய மொழியினைப் பயன்படுத்துவதற்கு 6) உங்கள் தெரிவிற்குரிய ஒரு வாழ்வாதாரத்தினைப் பின்பற்றுவதற்கு பதில் வழங்குவதற்கான அளவு: முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளவில்லை (1) – உறுதியாக ஏற்றுக்கொள்கின்றேன் (5)
	சமூகங்களின் பாதுகாப்பு (C)	பின்வருவனவற்றின் முன்னிலையில் உங்கள் சமூகத்தில் நீங்கள் எந்தளவிற்குப் பாதுகாப்பாக உணர்கின்றீர்கள்? 1) பொலிஸ் 2) இராணுவம் 3) அரச புலனாய்வு அதிகாரிகள் பதில் வழங்குவதற்கான அளவு: முற்றுமுழுதாகப் பாதுகாப்பில்லை (1) – மிகவும் பாதுகாப்பாக (5)
16–17	உள்ளக அரசியல் வினைத்திறன் (C)	அரசியல் அல்லது சமூகப் பிரச்சனைகள் குறித்து சிந்திக்கும்போது – பின்வருவனவற்றுடன் நீங்கள் எந்தளவிற்கு உடன்படுகின்றீர்கள் அல்லது உடன்படவில்லை 1) அரசியல் அல்லது சமூகப் பிரச்சனைகளில் ஈடுபடுவதற்கு உங்களுக்குப் போதுமான அறிவிருப்பதாக உணர்கின்றீர்கள் 2) நீங்கள் அரசியல் அல்லது சமூகப் பிரச்சனைகளில் ஈடுபடுவதற்கு தன்னம்பிக்கையுடையவராக உணர்கின்றீர்கள் 3) உங்களது வாக்கு ஒரு மாற்றத்தினை ஏற்படுத்துவதனால் நீங்கள் வாக்களிக்கின்றீர்கள் பதில் வழங்குவதற்கான அளவு: முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளவில்லை (1) – உறுதியாக ஏற்றுக்கொள்கின்றேன் (5)
18	அரசியல் செயலாண்மை (C)	இலங்கையிலுள்ள அரசியல்வாதிகளை நினைக்கும்போது, பின்வருவனவற்றுடன் எந்தளவிற்கு உடன்படுகின்றீர்கள் அல்லது உடன்படவில்லை? 1) என்னைப்போன்றவர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பதில் அரசியல்வாதிகள் ஆர்வமாக இருக்கின்றார்கள் 2) அரசியல்வாதிகள் என்ன செய்கின்றார்கள் என்பதில் என்னைப்போன்றவர்களின் தாக்கம் இருக்கின்றது 3) என்னுடையதும் எனது சமூகத்தினதும் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அரசியல்வாதிகள் போதுமானளவிற்குச் செய்கின்றார்கள் பதில் வழங்குவதற்கான அளவு: முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளவில்லை (1) – உறுதியாக ஏற்றுக்கொள்கின்றேன் (5)
19	அரசின் பதிலளிக்கும்தன்மை (C)	உங்களுக்குத் தெரிந்தவரையிலும், நீங்கள் மற்றவர்களிடமிருந்து கேட்டறிந்தவற்றின் அடிப்படையிலும், உங்களதும் உங்களது சமூகத்தினதும் தேவைகளைக் கவனத்தில் கொள்வதில் பின்வரும் அரச நிறுவனங்களும் அலுவலகர்களும் எந்தளவிற்கு பதிலளிக்கின்றனர்? 1) தேசிய அரசாங்கம் 2) பிரதேச செயலகம் 3) நகர சபை/மாநகர சபை/பிரதேச சபை 4) கிராம சேவையாளர் அலுவலகம் (கிராம நிர்வாக அலுவலகர்கள்) பதில் வழங்குவதற்கான அளவு: பதிலளிப்பதில்லை (1) – நன்றாக பதிலளிப்பர் (5)

உரு இல.	அளவிடப்பட்ட கருத்தியல் (C = ஒருங்கிணைந்த குறிகாட்டி SO = தனிப்பட்ட ஒரு விடயம்சார் குறிகாட்டி - திறந்தமுனைக் கேள்வி SS = தனிப்பட்ட ஒரு விடயம்சார் குறிகாட்டி அளவுகோல்)	கருத்தாய்வு கேள்விகள் (2025)
20-21	தற்போதைய பொருளாதார சூழ்நிலையின் காரணமாக ஏற்பட்ட அரசியலில் ஈடுபடுவதற்கான ஊக்கம் (SS)	நாட்டிலுள்ள தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலை உங்களை அரசியலில் மேலும் ஈடுபாட்டுடன் செயற்பட ஊக்குவித்திவிருக்கின்றது பதில் தெரிவுகள்: இல்லை, நான் விலகியிருக்கின்றேன் இல்லை, அப்படியேதான் இருக்கின்றேன் ஆம் சிறிதளவு ஆம் மிகவும் அதிகளவு
22-23	செயல்முனைப்புள்ள பிரஜை (C)	இவற்றில் எவற்றையேனும் கடந்த வருடத்தில் நீங்கள் தனிப்பட்டரீதியாகச் செய்திருந்தால் கூறவும்: 1) ஒரு பிரச்சினை தொடர்பில் முறையிடுவதற்கு ஊடகத்தினைத் தொடர்புகொள்ளல் (வானொலி, தொலைக்காட்சி அல்லது ஒரு பத்திரிகை) 2) ஒரு பிரச்சினை தொடர்பில் உங்களது பிரதேசத்திலுள்ள அலுவலகர் ஒருவரைத் தொடர்புகொள்ளல் (உள்ளூர் அரச தரப்பினர் - கிராம சேவையாளர், உள்ளூர் அரசியல்வாதி, பிரதேச சபை, ஏனையவை) 3) அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் சமூகத்தலைவர்கள், மதத்தலைவர்கள் போன்ற ஏனைய அரசுசாரா தரப்பினர்கள் போன்ற சிவில் சமூக அமைப்புக்களைத் தொடர்புகொள்ளல் 4) அரசியல் அல்லது சமூகப்பிரச்சினைகள் தொடர்பில் ஏனையவர்களுடன் உரையாடுதல் 5) சட்டரீதியான, அமைதியான போராட்டத்தில் பங்கேற்றல் பதில் தெரிவுகள்: இல்லை (0) அரிதாக (1) சிலவேளைகளில் (2) அடிக்கடி (3)

SRI LANKA BAROMETER

OUR VOICES . OUR CHOICES

අපේ හඬ . අපේ තීරණ

எங்கள் குரல்கள் . எங்கள் தேர்வுகள்

the insights initiative

IJR THE INSTITUTE FOR JUSTICE AND RECONCILIATION

SCOPE Strengthening Social Cohesion and Peace in Sri Lanka

Co-funded by the European Union

german cooperation DEUTSCHE ZUSAMMENARBEIT

Implemented by: giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

ISBN 978-955-7241-08-1